# வல்வைப் படுகொலைகள்

1989



வல்வை ந. அனந்தராஜ்

Scanned by CamScanner

# வல்வைப் படுகொலைகள்

வல்வை ந. அனந்தராஜ்

நந்தி பதிப்பகம்
வல்வெட்டித்துறை



Scanned by CamScanner

# -காணிக்கை-

இலங்கையில் அமைதி காக்க என வந்த இந்திய அமைதிப் படையினரால் 1989 ம் ஆண்டு ஆகஸ்ற் 2,3,4 ம் திகதிகளில் படுகொலை செய்யப்பட்டுத் தாயகத்தின் விடிவுக்காய்த் தமதுயிரை நீத்த மக்களுக்கு இந்நூல் காணிக்கை



Scanned by CamScanner

# நூல் விபரப்பட்டியல்


நூலின் பெயர்:- வல்வைப் படுகொலை

ஆசிரியர் :- வல்வை. ந. அனந்தராஜ்

647 . 3468543

முகவரி :- தெணியம்பைத் தெரு
வல்வெட்டித்துறை

முதற்பதிப்பு :- 1989

வெளியீட்டோர் :- சோழன் பதிப்பகம்
சென்னை

பக்கவடிவமைப்பு :- வசந்த், சென்னை

இரண்டாம் பதிப்பு :- 2005

பதிப்புரிமை :- திருமதி அ. வனிதா
தெணியம்பைத் தெரு
வல்வெட்டித்துறை

பக்கம் :- 111




Scanned by CamScanner

# அணிந்துரை



ராஜீவ் காந்தியின் இராணுவ சாகசத்தால், இலங்கை இந்தியாவின் வியட்நாமாக மாறும் என்று நான் 1987 ஆகஸ்ட் ஆரம்பத்தில் சொன்னேன். அப்போது இந்திய வியட்நாமிலும் ஒரு மைலாய் இருக்குமென்று நான் எதிர்பார்க்கவில்லை. ராணுவத்தினர் எங்கும் ஒரே மாதிரியானவர்கள்தான் என்று நான் அறிந்திருந்தேன், மீண்டும் மீண்டும் இதை வலியுறுத்தியிருக்கின்றேன். அவர்களது பயிற்சியும் கடுமையான வாழ்வு முறையும், போர் அவர்களிடம் தூண்டிவிட்ட மிருகத்தனத்துடன் இணைந்து, சிக்கலான சமயங்களில் அவர்களை மனிதாபிமானமற்று நடக்கச் செய்கின்றன. இதனால்தான் ஆரம்பகால இந்திய இராணுவ நடவடிக்கைகளின் போது கிளம்பிய கற்பழிப்பு, கொலை கதைகளை இந்திய அரசின் பிரச்சாரர்கள் மறுத்தபோதும், நமது இந்திய இராணுவ வீரர்கள் சாரணச் சிறுவர்கள்போல் போர்க்களங்களில் தினமும் நற்காரியங்கள் - குறிப்பாக திக்கற்ற அபலைகளுக்கு - செய்துகொண்டிருக்கின்றனர் என்ற வாதங்களையும் கேள்விக்குள்ளாக்கினேன்.

இன்று வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவம் தனது மைலாயை நிகழ்த்தியிருக்கிறது. இந்திய இராணுவம் வல்வெட்டித்துறையில் காட்டிய காட்டுமிராண்டித்தனத்தைப்பற்றி லண்டனிலிருந்து வெளிவரும் 'டெய்லி டெலகிரா.்.ப்' தனது தலையங்கத்தில் விமர்சிக்கிறது: "இந்த நாசவேலை மைலாயை விடக் கொடுமையானது. அங்கே அமெரிக்கப் படைகள் நிதானமிழந்து வெறியாட்டம் ஆடினர். ஸ்ரீலங்காவின் கிராமத்தில் இந்தியப்படையினர் திட்டமிட்டுச் செயல்பட்டிருக்கின்றனர். ஆட்களைப் படுக்கவைத்து முதுகில் சுட்டுக் கொன்றிருக்கின்றனர்.

வேற்றுமை அதுமட்டுமல்ல, மைலாய் அமெரிக்கப் பத்திரிக்கையாளர்களாலேயே உலகின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. மைலாய் பொதுமக்களுக்கெதிரான அமெரிக்க இராணுவத்தினரின் அடாவடிச் செயலை அமெரிக்க மக்கள், குறிப்பாக பத்திரிக்கையாளர்கள், மாணவர், இளைஞர்கள்- ஒன்றுதிரண்டு



Scanned by CamScanner

எதிர்த்தனர். வல்வெட்டித்துறையில் இந்தக் கோரச்சம்பவம் நடந்து பதின்மூன்று நாட்களுக்குப்பின் அங்கு சென்ற பைனான்சியல் டைம்ஸ்(லண்டன்) பத்திரிகையின் டெல்லி நிருபர் டேவிட் ஹவுஸ்கோ இச்சம்பவத்தை அறிந்தார். இதைப்பற்றிய அவரது செய்தி ஆகஸ்ட் 17 அன்று அவரது பத்திரிகையில் வெளியானது. அதற்கு முன்பே ஆகஸ்ட் பதின்மூன்றாம் திகதி லண்டன் டெலிகிராஃப் பத்திரிகை, டெல்லியிலிருந்தபடி தனது நிருபரின் ஜெரமி கவ்ரான் தொகுத் தனுப்பிய செய்தியை வெளியிட்டது. இந்தியப் பத்திரிக்கையாளர் களின் ஒரு சிறு பகுதியினரே அதுவும் செப்டம்பர் மூன்றாம் தேதிக்குப் பிறகு இந்தியன் எக்ஸ்பிரஸில் ரீட்டா செபாஸ்டியன் கொடுத்த செய்தியை தொடர்ந்தனர்.

உண்மை என்னவென்றால் வல்வெட்டித்துறை சம்பவம் இந்திய அரசால் திட்டமிட்டு மறைக்கப்பட்டது. இந்தியப் பத்திரிக்கையாளர்களின் பெரும்பகுதியினர் இதில் கூட்டுச் சேர்ந்து கொண்டு புளகாங்கிதம் அடைந்தனர். இந்தியாவில் இராணுவம் புனிதமாகக் கருதப்பட்டு வருகிறது. ஆனால் அடாவடித்தனங்களில் ஈடுபடும் போது, இப்புனிதத்தன்மை மேலும் கூடுகிறது. வடகிழக்கு மாகாணத்தில் இராணுவ உடையில் நம்மவர்கள் நடத்தும் கற்பழிப்புக் களையும் கொள்ளைகளையும் பற்றி - யாரேனும் வாய்திறப்பதுண்டா? ஒயினம் என்ற இடத்தில் நடந்த கேவலத்தைப் பற்றி கேள்விப் பட்டவர்கள் கூட இந்தியாவில் இல்லை. இராணுவ உடையணிந்த கயவர்களும் வக்கிரம் பிடித்தவர்களும் நடத்திய மிருகத்தனமான செயல் அது.

அதிகார வர்க்கத்தையும், இராணுவத்தளபதிகளையும் மக்கள் சக்தி வென்றபோது வியட்நாமும், மைலாயும் முடிவுக்கு வந்தன.

வல்வெட்டித்துறை பற்றிய உண்மைகளை இச்சிறு பிரசுரம் உலக மக்களுக்கு குறிப்பாக இந்திய மக்களுக்கு உணர்த்தும் என நம்புகிறேன்.

இந்திய மக்களின் மனசாட்சியை விழிப்படையச்செய்து, வல்வெட்டித்துறையில் உயிரிழந்தோருக்காக அவர்களை நீதி கேட்கச் செய்யுமானால், இவ்வெளியீட்டின் நோக்கம் முழுமை பெறும்.

-முன்னாள் இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டஸ்



Scanned by CamScanner

## -பதிப்புரை-

1989 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 2ம், 3ம், 4ம் திகதிகளில் இலங்கை, வல்வெட்டித்துறையில், இந்திய இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட, இராணுவ நடவடிக்கையினால் பாதிக்கப்பட்ட மக்களுடைய துயரம் நிறைந்த வரலாறுகளைக் கேட்கும் பொழுது எமது நெஞ்சே வெடித்துவிடும் போல் இருக்கின்றது. இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணத்தில் அமைதிப் படையினரின் ஏனைய நடவடிக்கைகளுடன், பாதிக்கப்பட்ட மக்களினது சோக வரலாறுகளை இணைத்துத் தொகுத்து கற்பனைக் கலப்பற்ற ஒரு வரலாற்று இலக்கியமாக "இந்தியப்படையினரின், வல்வெட்டித்துறைப் படுகொலைகள்" என்ற தலைப்பில் திரு.வல்வை.ந.அனந்தராஜ் அவர்களால் எழுதப்பட்ட, இந் நூலை வெளியிட்டு வைப்பதை வரலாற்றுக் கடமையாகக் கருதுகின்றோம்.

ஜாலியன் வாலா பாக் படுகொலை, மைலாய் படுகொலை என்ற வராலாற்றுப்புகழ் பெற்றுவிட்ட துயரம் நிறைந்த கொலைகளின் வரிசையில் இந்த "வல்வெட்டித்துறைப் படுகொலையும் இன்று இடம் பெற்றுவிட்டது என்பதை எவரும் எக்காலமும் மூடி மறைத்து விட முடியாது.

இன்றைய யதார்த்தமான நிகழ்வுகளும், காட்சிகளும் வரலாற்றுப் பொக்கிஷங்களாக நூலுருப்பெற வேண்டும்; அவை நமது எதிர்காலச் சந்ததியினர் அறிந்து, புரிந்து கொள்ளக்கூடிய வகையில், எளிய நடையில் அமைந்திருத்தல் வேண்டும் என்ற நோக்கத்தில் நாம் வெளியிடும் நூல் வரிசையில் "வல்வெட்டித்துறைப் படுகொலைகள்" என்ற இந்த நூலை உங்கள் கைகளில் தவழவிடுகின்றோம்.

20-09-1989 சோழன் பதிப்பகம்



Scanned by CamScanner

## இரண்டாம் பதிப்பின்
## முன்னுரை

1989 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2ம், 3ம், 4ம், திகதிகளில் இந்திய ஆக்கிரமிப்புப் படையினர் வல்வெட்டித்துறையில் நடாத்திய படுகொலைகள் இன்றும் கூட எமது நெஞ்சை விட்டு அகலாது இருக்கின்ற ஒரு துன்பியல் நிகழ்வாகும்.

ஈழத்தில் தமிழர்களைக் காப்பதற்கு என்ற போர்வையில் வந்த இந்தியப் படையினர் எமது நாட்டைக் கபளீகரம் செய்து சின்னாபின்னப் படுத்தி, அமைதியற்ற ஒரு பிராந்தியமாக்கிவிட்டுச் சென்றதை விட வேறு எவற்றை செய்தார்கள்?

- v ஆயிரக் கணக்கான வீடுகளை உடைத்தும், எரித்தும் தரைமட்ட மாக்கினார்கள்.
- v பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட அப்பாவிகளை ஆண், பெண், குழந்தைகள், வயோதிபர்கள் என்ற பாகுபாடே இன்றி சுட்டும், எரித்தும் துவம்சம் செய்தனர்.
- v நூற்றுக்கணக்கான கோயில்களை இடித்துத் தரை மட்டமாக்கினார்கள்.
- v தமிழ்ப் பள்ளிகளை எரித்தார்கள்.
- v ஹிட்லர் கூடச் செய்யத்தயங்கிய படுகொலைகளை வைத்தியசாலையினுள்ளேயே மேற்கொண்டு வெறியாட்டம் ஆடினார்கள்.
- v பல நூற்றுக்கணக்கான பெண்களை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி நர்த்தனம் ஆடினார்கள்...!

இவ்வளவு கொடுமைகளையும் செய்ததைத் தவிர இந்தியப் படைகள் " நல்லவை" என்று எதையாவது செய்தார்களா?

அவர்களது படுகொலைகளின் உச்சக்கட்டமாக நிகழ்த்திய வல்வைப் படுகொலை நிகழ்ந்து 15 வருடங்களின் பின் இன்றும் கூட நினைத்துப் பார்க்கவே நெஞ்சம் நடுங்குகின்றது.

1989 இல் வல்வைப் படுகொலை நடந்து முடிந்த கையுடன் அந்தக் கொடூரத்தை உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டவேண்டும். என்ற



Scanned by CamScanner

உணர்வில் தமிழகத்தில் பல தலைவர்களைச் சந்தித்ததில் பின்னால் பாதுகாப்பு அமைச்சராக இருந்த திரு.ஜோர்ஜ் பெர்ணான்டஸ் தந்த உற்சாகமும், ஆதரவும் எனது அன்பிற்குரிய திரு. வெ.இளங்குமரனின் வழிகாட்டலும் இந்த நூலை 1989 இல் வெளியிட உந்துசக்தியாக இருந்தன.

வல்வைப் படுகொலைகளை நிகழ்த்திய இந்திய இராணுவத்தை, அனுப்பிய ராஜீவ் காந்தியையும் அவரது இந்திய அரசையும் மறக்கமுடியாத ஆயிரக்கணக்கான தமிழ் மக்களின் ஒருவனாக இருந்து அன்று மரணித்துப் போன எமது உடன் பிறப்புக்களுக்கு அஞ்சலி செய்வதைத் தவிர எம்மால் வேறு எதைத்தான் செய்யமுடியும்?

31-03-2005

அன்பன்,
வல்வை.ந. அனந்தராஜ்

Scanned by CamScanner

ஜாலியன் வாலா பாக் படுகொலைகள், மைலாய்ப் படுகொலைகள் என்ற உலகின் சரித்திரப் பிரசித்தி பெற்ற வரலாற்றுப் படுகொலைகளின் வரிசையில், இன்று வல்வெட்டித்துறைப் படுகொலைகளும் இடம் பெற்றது ஒரு துரதிர்ஷ்டவசமானது.

1989 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 2ம், 3ம், 4ம் திகதிகளில் வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவத்தினர் தொடர்ச்சியாக மூன்று நாட்கள் ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்து கண்மூடித்தனமாக மேற்கொண்ட தாக்குதலில் குழந்தைகள், பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள் உட்பட அறுபத்து மூன்று அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள் என்ற செய்தி சாதாரண விஷயமல்ல.

மனித உயிர்காப்புக்காகவும், சமாதானத்திற்காகவும் இன்று உலக நாடுகள், பல கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்து எத்தனையோ திட்டங்களையும், ஒப்பந்தங்களையும் உருவாக்கிக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், இந்திய அரசினால் மேற்கொள்ளப்பட்ட இந்தப் படுகொலைகளானது உலக சமாதானத்தையே சீர் குலைப்பதாக உள்ளது. இது தென் கிழக்காசியாவின் வளர்ந்து வரும், சிறிய நாடுகளுக்குப் பெரும் அச்சுறுத்தலாகவே உள்ளது.

தாம் நடத்தி முடித்த கொலைகளுக்காக அனுதாபமோ, கவலையோ தெரிவிக்காத இந்திய அரசு, அதனை மூடி மறைப்பதற்காக, "சண்டையில் சிக்கி 24 பொதுமக்கள் மட்டுமே இறந்தனர்" என்று தனது பிரச்சாரச்சாதனங்கள் மூலம் கூறிக்கொண்டிருப்பது, ஈழத்தமிழரின் மனதைப் புண்படுத்துவதாகும்.

இலங்கையில் நிலைகொண்டுள்ள இந்தியப்படையினரின் போக்கானது ஒரு உண்மையைத் தெளிவு படுத்தியுள்ளது. இந்தியாவின் அரசியல் தலைமைப்பீடத்திற்கும் இராணுவத்துக்கும் இடையில் காணப்படுகின்ற விரிசல்களின் முரண்பாடுகளே இவற்றிற் கெல்லாம் காரணமோ என்று கூட ஐயுறவேண்டியுள்ளது.

Scanned by CamScanner

அமைச்சர் மாண்புமிகு ரஞ்சன் விஜயரத்னா அவர்களும், இலங்கைக்கான இந்தியாவின் தூதுவர் மாண்புமிகு எல்.எல். மெஹ்ரோத்ராவும், வல்வெட்டித்துறையில் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடவும், இராணுவ வன்முறைகளினால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்திப்பதற்கும் வருகை தந்த நேரத்தில் வல்வெட்டித்துறை நகரம் காலை 7.30 மணியில் இருந்து இந்திய அமைதிப்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு ஊரடங்குச் சட்டம் விதிக்கப்பட்டது. வீடுகளிலிருந்து எவருமே வெளியேற முடியாதவாறு தடை செய்யப்பட்டனர். அத்துடன் அமைதிப்படைத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் ஏ.எஸ்.கல்கத் வல்வெட்டித்துறையில் நடைபெற்ற உண்மையான சம்பவங்களை, அமைச்சரும், தூதுவரும் அறியமுடியாதவாறு தடுத்துள்ளார். மேலும் அவர்களது விஜயத்தை ஒரு சுற்று வட்டத்திற்குள்ளேயே கட்டுப்படுத்தியுமுள்ளதானது இச் சந்தேகத்தையே வலியுறுத்துகின்றது.

"இந்தியா தனது அநியாயமான கொலைகளை நியாயப்படுத்துவதை விட்டு, பாரபட்சமற்ற சுதந்திரமான விசாரணைக் குழு ஒன்றை நியமித்து இக் கொலைகளில் சம்பந்தப்பட்ட இராணுவ அதிகாரிகளுக்கு உரிய தண்டனை வழங்கவேண்டும். அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்திய அரசே முழுமையான நட்ட ஈடும் செலுத்த வேண்டும்." என்ற வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுவின் கோரிக்கையும் நியாயமானதே.

அக் குழுவின் இந்தக்கோரிக்கையை, இந்தியா வெறுமனே புறக்கணித்து விடுவது இந்தியாவின் நலனுக்கு ஆரோக்கியமானதல்ல.

நடத்தி முடித்த கொலைகளையும், இராணுவத்தினரின் நடவடிக்கைகளையும் கவனித்தால் இவை ஏற்கனவே திட்டமிடப்பட்ட முயற்சி என்பதை உணரக்கூடியதாகவுள்ளது. மூன்று நாட்களிலும் கொல்லப்பட்ட சடலங்களை வெளியார் எவருமே பார்க்க முடியாதவாறும், புகைப்படங்கள் எடுக்க முடியாதவாறும், இறந்த உடல்களை ஆகம முறைப்படி தகனம் செய்யமுடியாதவாறும் இந்திய இராணுவத்தினர் நடந்து கொண்டனர் என்பதை அறியும் பொழுது அடிப்படை மனித உரிமைகளுக்குக்கூட, ஈழத்தில் சுதந்திரம்

Scanned by CamScanner

இல்லாது போய்விட்டதா என்று எண்ணத் தோன்றுகிறது.

தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் கடந்த ஆறு வருடங்களில் தமிழினம் அடைந்த துயரங்களும், செய்த தியாகங்களும் எதிர்காலத்தில் மழுங்கடிக்கப்பட்டு, வெறும் மனப்பதிவுகளாக மட்டும் இருந்துவிடக் கூடாது. அவை நமது எதிர்காலச் சந்ததிகள் அறிந்து கொள்வதற்காகவும்: வரலாறுகளாக நிலைப்படுத்தப்பட வேண்டு மென்பதற்காகவும் வல்வெட்டித்துறைப் படுகொலைகள் பற்றிய சில நிகழ்வுகளை மட்டும் தொகுத்து "வல்வைப் படுகொலைகள்" என்ற இந்நூலை வெளியிடுகின்றோம்.

இந்நூலில் இடம் பெறும் அத்தனை நிகழ்வுகளும் பெயர்களும், புலக் காட்சிகளும் துளியேனும் கற்பனைக் கலப்பற்ற உண்மைச் சம்பவங்களே. இந்நூலை வெளியிட்டு வைக்கும் சோழன் பதிப்பகத்தினருக்கு எனது நன்றி!

இது ஒரு நகரத்தின் கண்ணீர்க் காவியம்!

இது தமிழீழ மக்களின் வரலாற்றின் ஒரு படிக்கல்!

தெனியம்பைத் தெரு,
வல்வெட்டித்துறை
19.2.1989

வல்வை.ந.அனந்தராஜ்



Scanned by CamScanner

மைலாய்!

வியட்நாமின் அழகிய, அமைதியான ஒரு சிறிய கிராமம்தான் மைலாய்!

வியட்நாமை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த அமெரிக்க இராணுவம், திடீரென ஒரு நாள் அந்தக் கிராமத்தினுள் புகுந்து ஏதுமறியாத நூற்றுக்கும் அதிகமான கிராமவாசிகளைச் சுட்டுக்கொன்றது.

இந்த **மைலாய் துயரம்** என்று அழைக்கப்படுகின்ற மைலாய்ப் படுகொலைக்குத் தலைமை தாங்கியவன் தளபதி காலி என்ற அமெரிக்கன்.

இந்தச் சம்பவத்தினால் வியட்நாமிய மக்கள் அடைந்த அதிர்ச்சியையும், ஆத்திரத்தையும்விட, அன்று அமெரிக்க மக்கள் தான் கூடுதலாக கொதித்தெழுந்தனர்.

அமெரிக்கப்பத்திரிகைகள், அமெரிக்க அரசாங்கத்தின் இந்தக்கோரக்கொலையைக் கண்டித்து ஆசிரியத் தலையங்கங்கள் எழுதத் தொடங்கின.

அமெரிக்க செனட்டில், எதிர்க்கட்சித் தலைவர்கள் கண்டனக் குரல்களை எழுப்பினார்கள்.

இந்தப் படுகொலை சம்பந்தமான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும், குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற குரல், அமெரிக்க அரசாங்கத்தைத் தட்டி எழுப்பியது.

அதன் விளைவு;

தளபதி காலி, இராணுவ நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டுத் தண்டனை வழங்கப்பட்டான்.

வியட்நாமுடன் எவ்வித சொந்த பந்தமோ, கலாச்சார உறவுகளோ, மதரீதியான தொடர்புகளோ, எதுவுமே அற்ற அமெரிக்க மக்களின் அந்தச்செயல், உலகில் மனிதநேயம் இறந்துவிடவில்லை என்பதை எடுத்துக்காட்டியது.



Scanned by CamScanner

ஜாலியன் வாலா பாக்!...

இந்திய சுதந்திரப் போர், அகிம்சைப்போராட்டமாக உக்கிரமடைந்திருந்த காலகட்டத்தில் இந்தியாவின் அமிர்த சரசில் உள்ள ஜாலியன் வாலா பாக்கில் நூற்றுக்கணக்கான அப்பாவி இந்தியர்கள் காவு கொள்ளப்பட்டனர். 13.4.1919ல் நடைபெற்ற இப்படுகொலையானது இன்றும் பிரித்தானிய சாம்ராஜ்யத்திற்கு மாறாத ஒரு வடுவாக இருந்து வருகின்றது.

இப்படுகொலை, பிரித்தானிய தளபதி ஜெனரல் டையர் என்பவன் தலைமையில் நடத்தப்பட்ட ஒரு பழிவாங்கல் நடவடிக்கையே!

இச்சம்பவம் நடைபெறுவதற்கு மூன்று நாட்கள் முன்னர் இந்திய மக்கள் மூன்று பிரித்தானியர்களைக் கொலை செய்ததுடன், ஒரு பிரித்தானியப் பெண்மணியைப் நையப் புடைத்தும் அனுப்பினர். அங்கிருந்த பிரித்தானியரின் நிர்வாகத்திற்குட்பட்ட அஞ்சல் நிலையம், வங்கிகள் ஆகியவற்றை உடைத்து நிர்மூலமாக்கியதைத் தொடர்ந்து வெகுண்டெழுந்த பிரிட்டிஷ் இராணுவத்தினர், ஜெனரல் டையர் என்பவனின் தலைமையில் அமிர்தசரஸ் கிராமத்தினுள் புகுந்தனர்.

அங்கு 'ஜாலியன் வாலா பாக்கில்' பிரித்தானியாவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்துகொண்டிருந்த இந்தியர்கள் மீது சரமாரியாக, கண்மூடித்தனமாகச் சுட்டதில், நூற்றுக்கணக்கான அப்பாவி மக்கள் துடிக்கத் துடிக்கச் செத்தனர்.

அன்று ஆயிரத்து இருநூற்றுக்கும் அதிகமான மக்கள் படுகாயமடைந்தனர். அவர்களுக்கு ஜெனரல் டையரோ, அல்லது அவனது இராணுவமோ மருத்துவ சிகிச்சை முதலுதவி அளிக்காவிட்டாலும், உதவி செய்ய வந்தவர்களைத் தடுக்கவில்லை.

இருந்தபோதிலும் ஜெனரல் டையருக்கு, பிரித்தானிய அரசு விருது வழங்கிக் கௌரவித்தது!

ஆனால் இன்று வல்வெட்டித்துறையில், இந்தியாவுக்கு எதிராகவோ, இந்திய இராணுவத்திற்கு எதிராகவே எவ்விதமான ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபடாது, தாமுண்டு, தம் வீடு உண்டு என்று இருந்த அப்பாவி மக்கள் மீது, இந்திய இராணுவம் தாக்குதலை, மேற்கொண்டு, பிரித்தானியாவையும், அமெரிக்காவையும் மிஞ்சி சாதனை படைத்துவிட்டது.

Scanned by CamScanner

சரித்திரம் ஒருபோதும் பின்னோக்கிப்பாய்வதில்லை. ஆனால் புதிய சகாப்தங்களைப் படைப்பதில் ஆதிக்க வெறி பிடித்த ஒவ்வொரு நாடுகளும் போட்டி போட்டு இந்த உலகை அழிவின் விளிம்புக்கே கொண்டு செல்கின்றன. இதற்கு நமது பாரததேசமும் விதிவிலக்கில்லை என்பதற்கு இன்று, ஈழத்தில் நடத்திவரும் தர்மத்திற்கு எதிரான யுத்தம் சான்றாகும்.

ஆம்!....

பிரித்தானியாவுக்கு ஜாலியன்வாலா பாக் படுகொலை!...

அமெரிக்காவிற்கு மைலாய் படுகொலை!...

இன்று,

பாரதத்திற்கு வல்வெட்டித்துறைப் படுகொலை!...

காந்தீய வழிவந்து உலகின் ஜனநாயக நாடுகளில் தலையானது என்று பெயர் பெற்ற பாரத தேசம், இன்று வல்வெட்டித் துறையில் நடத்திய படுகொலையானது, இந் நூற்றாண்டின் அநாகரிகமான செயலாகும் என, உலகின் பத்திரிகையாளர்களும், அரசியல் அவதானிகளும் கண்டனம் தெரிவிக்கின்றனர்.

அமைதியையும், ஆன்மீக நெறியையும் நேசிக்கும் வீரம் செறிந்த வல்வெட்டித்துறை மக்கள்-

அன்று திரை கடலோடித் திரவியம் தேடியவர்கள்;

"அன்ன பூரணி" என்ற உள்ளூரில் தயாரிக்கப்பட்ட பாய் பூட்டிய மரக்கலத்தில், சுயெஸ்கால்வாயினூடாக அமெரிக்கா சென்று சாதனை நாட்டியவர்கள்;

இன்று,

இந்திய அமைதிப்படையினரின் அத்துமீறிய அட்டகாசங் களினால், நிலைகுலைந்து, வீடிழந்து, சொத்து, சுகங்களை இழந்து, இத்தனைக்கும் மேலாக அறுபதுக்கும் அதிகமான மனித உயிர்களை, தமது உடன்பிறப்புக்களை இழந்து நிற்கின்றனர்.



Scanned by CamScanner

இந்த நிலையிலும் மனங்குலையாது நிற்கும் அந்த மக்களின் சோகம் நிறைந்த கண்ணீர்க் காவியம் தான், 1989-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 2-ம், 3-ம், 4-ம், திகதிகளில் நடத்தி முடித்த படுகொலைகளும், தீவைப்புப் படலங்களும்.

உலகையே இன்று கதிகலங்கவைத்துவிட்ட 'வல்வெட்டித் துறைப் படுகொலைகளின் பின்னணியில் நின்ற இந்திய ஜனநாயக வாதிகளின் முகத்திரை விலகும் நாள் வெகுதூரத்தில் இல்லை.


ஆம்!.. "சத்தியமே ஜெயம்" முத்திரையைப் பதித்தவர்கள் இன்று வேடம் கலைந்த நிலையில், நியாயம் கூறமுடியாது நிலை குலைந்து நிற்கின்றனர்.

சர்வதேச அரங்கும், தமிழ் ஈழமும், "நீதானா மகாத்மா காந்தியின் இந்தியா? " என்று கேட்கும் குரல் இன்னும் ஓயவில்லை.


1989-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 2,3,4-ம் திகதிகளில் 63 உயிர்களைக் கொன்றும், பல அப்பாவிப் பெண்களைக் கற்பழித்தும், 123 வீடுகளை முற்றாகவே எரித்து நாசமாக்கியும், ஐம்பதுக்குமேற்பட்ட போக்குவரத்து வாகனங்களையும், பன்னிரண்டு இயந்திரப் படகுகளையும், 176 மீன்பிடி வலைகளையும் எரித்து நர்த்தனம் புரிந்த இந்திய இராணுவத்தினர், தொடர்ந்து மூன்று நாட்களாக ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தி, அந்த எழில் நிறைந்த நகரத்தையே சுடுகாடாக்கிவிட்டனர்.

1989-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2-ம் திகதி முற்பகல் 11.30 மணி......


கடைகள் சந்தைகள் வழமைபோல் செயல்பட்டுக் கொண்டிருந்தன; மக்கள் கலகலகலப்பாக வருவதும், போவதுமாக இருந்தனர்; வியாபாரமும் சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருந்தது.




சி.தம்பித்துரை
65 வயது



த.ரவிச்சந்திரன்
24-09-60—03-08-89



கு.சு.குணகுமார்
06-06-89—21-08-89



செ.சுப்பிரமணியம்
16-05-33—02-08-89



Scanned by CamScanner

அங்கே சாதாரணமாகவே தமிழீழ விடுதலைப்போராளிகள் ஆயுதங்களுடன் நடமாடித்திரிவது, ஒரு புறமும், இந்திய இராணுவத்தினர் தமது வழமையான ரோந்து நடவடிக்கைகளை மேற்கொள்வது இன்னொரு புறமுமாக இருக்கும்.

வடமராட்சியின் பல இடங்களிலும் தாக்குதல்கள் இடம்பெற்ற நேரங்களில் எல்லாம், இங்கு ஒரு அமைதியான சூழ்நிலை சில மாதங்களாக நிலவி வந்தது.

இதனால் பருத்தித்துறை, மயிலிட்டி, நெல்லியடி போன்ற இடங்களில் இருந்துகூட இந்திய இராணுவத்தினரால் பாதிக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்ட மக்கள் இங்கு தஞ்சமடைந்திருந்தனர்.

அன்றும் வழமைபோல் போராளிகள் தமது பாதுகாப்பு ஆயுதங்களுடன் ஆங்காங்கே நடமாடித் திரிந்தனர். அந்த நண்பகல் நேரத்தில், வல்வெட்டித்துறை ஊரிக்காடு இந்தியப்படைமுகாமில் இருந்து புலிகளை வேட்டையாடுவதற்காகவோ அல்லது வேறு நோக்கத்திற்காகவோ வல்வை சிவன் கோயில் வீதிவழியாகவும், காங்கேசன் துறை வீதி வழியாகவும் பாரிய ஆயுதங்களுடன், அந்தக் கலகலப்பான வல்வெட்டித்துறை நகரை நோக்கி இந்திய இராணுவத்தினர் வந்து கொண்டிருந்தனர்.

வழமையாக ஒரு பிரிவாகவே பவனிவந்து வேறு ஒரு வழியாக, வந்த அடிச்சுவடு தெரியாமலேயே தமது முகாம்களுக்குத் திரும்பிப் போய்விடுகின்ற இந்திய இராணுவத்தினர், அன்று மட்டும் ஏனோ தெரியவில்லை இரு நிரல்களாக அந்த நகரை நோக்கி வந்து கொண்டிருந்தனர். அந்த முகாம் பொறுப்பதிகாரி மேஜர் சுதர்சன் சிங் தலைமையில் இந்திய இராணுவத்தினர் இரு நிரல்களாக பசுக்கா, மோட்டார், றொக்கற் லோஞ்சர் போன்ற பாரிய ஆயுதங்களை ஏந்தியவாறு பதுங்கிப் பதுங்கி வந்துகொண்டிருந்தனர்.

"டுமீல்!... பட்... பட்....."

திடீரென வல்வெட்டித்துறைச் சந்திப் பகுதியில் ஏற்பட்ட துப்பாக்கி வேட்டுச்சத்தங்கள் அந்த ஊரையே ஒரு கணம் கதி கலங்கவைத்தது. அந்த ஒரு கணத்தில் நாலா புறங்களிலும் இருந்தும் துப்பாக்கிக் குண்டுகள் வானத்தைக் கிழித்துக் கொண்டு சென்றன.



Scanned by CamScanner









Scanned by CamScanner

அதைத் தொடர்ந்து, கடைத்தெருக்களில் நின்ற மக்களும், வீடுகளில் இருந்தவர்களும் பயத்தினால் பாதுகாப்பான இடங்களுக்குப் புகலிடம் தேடி ஓடினார்கள். துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்டு சில நிமிடங்களில் ஊரே வெறிச்சோடியது. மருந்துக்குக்கூட மனிதர்களைக் காண முடியவில்லை. சுமார் 20 நிமிடங்கள் வரை துப்பாக்கி வேட்டுக்களின் சத்தங்களும், பாரிய செல்குண்டுகளின் முழக்கங்களும் காதுகளைப் பிளந்து கொண்டிருந்தன. அதைத் தொடர்ந்து சொற்ப நேரம் மயான அமைதி நிலவியது. அந்தத்தற்காலிக அமைதி நீண்ட நேரம் நீடிக்கவில்லை. ஒரு சில நிமிடங்களுக்குள் இராணுவ வாகனங்களின் இரைச்சல்களும், இராணுவத்தினரின் நடமாட்டங்களும் அதிகரிக்கத் தொடங்கின. சுமார் 12.15 மணியளவில் பல்லாயிரக் கணக்கான இராணுவத்தினர் அந்த ஊரைச் சுற்றி வளைத்தனர். ஆம்!.... வல்வை மாநகர் அந்த ஒரு சில நிமிடங்களுக்குள் கருமேகங்களால் சூழப்பட்ட வானம் போன்று, பச்சைப்பசேலன்று இராணுவமயமாக்கப்பட்டது. அந்த மோதலைத்தொடர்ந்து அங்கு நின்ற விடுதலைப்புலிகள் ஆறு, ஏழுபேரும் எப்படியோ ஓடித்தப்பிவிட்டார்கள். அவர்களில் ஒருவரும் இறக்கவில்லை என்னசெய்வதென்றே தெரியாது திகைத்த மக்கள் இடம்பெயர்ந்து ஓடவும் முடியாத நிலையில் தவித்துக்கொண்டிருந்தனர்.

26.7.89-ல் பருத்தித்துறையில் விடுதலைப்புலிகளுக்கும் இந்திய இராணுவத்தினருக்கும், இடையில் ஏற்பட்ட ஒரு சிறு மோதலைத் தொடர்ந்து ஆத்திரத்தினால் நிலைகுலைந்த இராணுவத்தினர் பல வீடுகளையும், கடைகளையும், கொளுத்தியும் வீடுகளுக்குள் நுழைந்து பதினெட்டு அப்பாவிப் பொதுமக்களைச் சுட்டுக்கொன்றும், சில பெண்களை மானபங்கப்படுத்திய பின் மோட்டார் காருடன் சேர்த்து எரித்தும் கோரதாண்டவம் ஆடி அந்த நகரையே அல்லோல கல்லோலப் படுத்திய அந்த நிகழ்வுகள் இங்கும் பிரதிபலிக்குமோ என்று மக்கள் அங்கலாய்த்துக் கொண்டிருந்தனர்.

தமது வாழப்போகும் பிள்ளைகளை இழந்துவிடுவோமோ என்று ஏங்கிக்கொண்டிருக்கும் தாய்மாரும், உயிருக்குயிரான கணவன்மாரை இழந்து விதவைகளாக்கப்பட்டுவிடுவோமோ என்று பதறிக் கொண்டிருக்கும் மனைவிமாரும் வேண்டும் பிரார்த்தனைகள் ஒவ்வொரு வீடுகளிலும் ஒலிக்கத்தொடங்கின.

ஆலயங்களில் மணியோசை கேட்கவில்லை. ஆனால் ஒவ்வொருவரின் இதயங்களும் ஆண்டவனை வேண்டி ஒலித்துக் கொண்டே



Scanned by CamScanner

இருந்தன. இத்தனைக்கும் அவர்கள் மத்தியில் ஏற்பட்ட பயத்திற்கும் நியாயம் இருக்கத்தான் செய்கின்றது.

கடந்த ஒரு சில மாதங்களுக்கு முன்னர், வடமாராட்சிப் பகுதியின் தலைமை இராணுவ முகாம் அமைந்துள்ள யாக்கரை இராணுவ முகாமில் நடைபெற்ற கூட்டமொன்றில் இந்திய இராணுவபிரிகேடியர் சங்கர் பிரசாத் என்பவர், அங்கு சமூகமளித்திருந்த பிரஜைகள் குழு உறுப்பினர்கள் மத்தியில் கூறிய சூளுரைகள் அந்த மக்களை நிலைகுலைய வைத்தது.

"இந்திய இராணுவத்தினர் மீது, புலிகள் தாக்குதலை மேற்கொண்டால், வடமாராட்சியின் முழுக்கிராமங்களையும் எரிப்பேன்..... நூற்றுக்கணக்கில் சுட்டுத் தள்ளுவேன். இராமர்-இராவணயுத்தத்தில் லங்கா எரிந்ததுபோல் மீண்டும் இலங்கை எரியும்..... எங்களை எவரும் எதுவும் செய்துவிட முடியாது..... நாங்கள் உலகின் நான்காவது பெரிய இராணுவம்....."

நமட்டுச்சிரிப்புடன், தன்கைகளில் இருந்த சுருட்டுப்பிடிக்கும் சுங்காணைத் தட்டியபடி கொக்கரித்துக்கொண்டிருந்த பிரிகேடியர் தான் சொன்னதைச் செயலிலும் காட்டி விட்டார். அந்த எச்சரிக்கை, இன்று வல்வெட்டித்துறை மக்கள் மத்தியிலும் பெரும் பீதியை ஏற்படுத்திக்கொண்டிருந்தது.

பிள்ளையாரே!... முத்துமாரி!... சிவனே!.... அந்தோனியாரே!..... முருகா!.... அன்று அவர்கள் வேண்டாத தெய்வங்களே இல்லை. நிராயுதபாணிகளான அப்பாவி மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்படுகின்ற இராணுவத்தாக்குதலுக்கு முன்னால், அந்தத் தெய்வங்களால்தான் என்ன செய்யமுடியும்?

வல்வெட்டித்துறைச் சந்தியில் நின்ற இராணுவத்தினர் அங்கும் இங்குமாக ஓடிக்கொண்டிருந்தனர். விடுதலைப்புலிகளின் திடீர்த் தாக்குதலினால் காயம்பட்டு தரையில் விழுந்து கிடந்த இந்தியப்படை மேஜருக்குத் தண்ணீர் கொடுப்பதற்கு அங்குமிங்கும் அலைந்தார்கள். அந்த இடத்தின் முன்னால் உள்ள கடையில் பதுங்கியிருந்த ஒருவர் பயத்தினால் கைகள் நடுங்க தண்ணீர் இருந்த இடத்தைச் சைகையால் காட்டிக்கொண்டிருந்தார். அவர் காட்டிய இடத்தில் இருந்து தண்ணீரை எடுத்து மேஜருக்குக் குடிக்கக்கொடுத்தார்கள். சிறிது நேரத்தில் அந்த இடத்தை விட்டு, காயம்பட்ட அந்த இராணுவ அதிகாரியைத்



Scanned by CamScanner

தூக்கிக்கொண்டு சென்றார்கள். அதைத்தொடர்ந்து சில வினாடிகளில், சந்தியில் உள்ள வல்வை சனசமூக சேவா நிலையக் கட்டிடம் ஆகிய பகுதிகளில் நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் குவிக்கப்பட்டனர். சந்தியில் உள்ள கடைகளில், மரத் தளபாடங்களுக்குக் கீழ் படுத்திருந்தவர்களையும், மினி வீடியோ சினிமாத்தியேட்டரில் படம் பார்த்துக்கொண்டிருந்த சுமார் 30 இளைஞர்களையும் கீழே இறக்கிக் கொண்டுவந்து சந்தியில் நடுத்தெருவில் உச்சி வெயிலில் இருக்க வைத்தார்கள். அங்கு நின்ற சீக்கிய ஜவான், திடீரெனத் தானியங்கி ரைபிளின் விசையைத் தட்டிவிட்டான். 'திலீபன் கூல் பார்' கடையில் இருந்த 36 வயதான அண்மையில் தான் திருமணம் செய்த இ. இராசரத்தினம் அந்த இடத்திலேயே துடிதுடித்து மரணமடைந்தார். அவருக்கு அருகில் இருந்த கோ. கருணானந்தராஜா என்பவர் சூட்டுக்காயத்துடன் கீழே விழுந்தார். அவரது வலதுபக்க மார்பிலும், கையிலும் இருந்து குருதி ஆறாகப் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்தது. அந்தப்பயங்கரமான அனுபவத்தை நேரில் பார்த்துக்கொண்டிருந்த மற்றவர்களின் இதயம் 'படபட' வென்று துடித்துக்கொண்டிருந்தது. அடுத்து என்ன நடக்குமோ என்ற ஏக்கம் அவர்களை உயிரோடு வாட்டிக்கொண்டிருந்தது. சில நிமிடங்களில் வேறொரு ஜவான் வந்து சந்தியில் இருந்த எல்லோரையும் சற்றுத் தள்ளி இருக்குமாறு பணித்துவிட்டுத் தன்னுடைய கையில் வைத்திருந்த 'பசுக்கா' என்ற பாரிய ஆயுதத்தைச் சந்தியில் வைத்துச் சுடுவதற்குத் தயார் நிலையில் வைத்தான். அங்கிருந்தவர்களின் முகங்களில் ஈயாடவில்லை, உதடுகள் நீர் வற்றி உலர்ந்து ஒன்றோடொன்று ஒட்டிக் கொண்டிருந்தன. 'பசுக்கா'வை சந்தியில் உள்ள சந்தைக் கட்டிடத்தில் உள்ள கடைகளை நோக்கிச் செப்பன் செய்து கொண்டிருந்தான். அந்த கட்டிடத்தில் நான்கு கடைகள் இருந்தன. கடையின் முன்னால் நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஒரு சைக்கிளில் வைத்திருந்த மண்ணெண்ணெய் பரலை எடுத்து எல்லாக்கடைகளுக்கும் ஊற்றினான். அதைத்தொடர்ந்து முதலில் கலைச்சோலை புத்தகக்கடையை நோக்கி அதன் விசையைத் தட்டி விட்டான். அது பாரிய சத்தத்துடன் வெடித்து ஒரே புகைமண்டலமாக எழும்பியது. அதைத் தொடர்ந்து 'கலைச்சோலை பான்சி பலஸ்', சேகவன் ஸ்ரோர்ஸ், ஆகிய கடைகளை வெடிவைத்துத் தகர்த்ததும், அவை அவர்களுடைய கண்முன்னாலேயே எரிந்து சாம்பரானது.

அங்கே சந்தியில் உட்கார்ந்து இருந்தவர்களின் தலையை உச்சிவெயில் பதம் பார்த்துக் கொண்டிருந்தது. இராணுவச் சிப்பாய்கள் அங்குமிங்குமாக வருவதும், போவதுமாக இருந்தார்கள். திலீபன் கூல்பார்



Scanned by CamScanner


கடையில் இருந்தும், மகாலிங்கம் என்பவரின் தேநீர்க்கடையில் இருந்தும் கொக்கோ கோலா, பன்ரா சோடா போத்தல்களையும், பிஸ்கற்றுக்களையும் கொண்டு வந்து, அங்கு நின்ற ஜவான்களுக்கும், காயப்பட்டவர்களுக்கும் கொடுத்தார்கள். சந்தியில் நிறுத்திவைக்கப் பட்டிருந்த சோமசெற்காரில் இருந்து இறங்கி சனசமூக நிலையக் கட்டிடத்திற்குள் போக முயற்சித்த வாடகைக்கார்ச் சாரதியான 20 வயதான பிரேம்ராஜ் கையில் உள்ள காயத்தின் வேதனையில் முனகிக்கொண்டே இருந்தான். சரியான மருத்துவ வசதி கொடுக்காததால் அவன் சற்றுநேரத்தில் இறந்துபோனான். அங்கு வந்த வேறொரு ஜவான், அங்கு இருந்தவர்களை நோக்கி, ரைபிளை நீட்டியபடி வந்தான்.

"நீங்கள் எல்லோரும் எல்.ரி.ரி.ஈ.. உங்கள் எல்லோரையும் சுட்டுத்தள்ளப் போகின்றேன்....."

அருகில் வந்து நின்ற சீக்கியச் சிப்பாய் தனக்குத் தெரிந்த அரைகுறை ஆங்கிலத்தில் கத்திக் கொண்டிருந்தான். பின்னர் எதனையோ நினைத்துக்கொண்டவன் போல் அங்கிருந்து விலகிச்சென்றான். தூரத்தே சந்தியில் இருந்து தெற்குப்புறமாக உள்ள சடையாண்டி கோயில் பக்கத்தில் இருந்து நான்கு, ஐந்து, சிப்பாய்கள் பெண்கள், சிறுவர்கள், மாணவர்கள் உட்பட 20 பேர் வரையிலான பொதுமக்களை அடித்து அடித்துக் கூட்டிக்கொண்டு வந்தார்கள். அவர்களுடைய உடலில் இருந்து இரத்தம் பீறிட்டுக் கொண்டிருந்தது. கலைச்சோலை புத்தகநிலைய உரிமையாளரின் மகன் மதியாணனின், கையில் இருந்து இரத்தம் பெருகிக் கொண்டிருந்தது. அவர்கள் கீழே விழுந்து, எழுகின்ற ஒவ்வொரு தடவையும் அடித்துக்கொண்டே இருந்தார்கள். சில நிமிடங்களில் உடுப்பிட்டிப் பக்கத்தில் இருந்து, ஒரு ஜீப் வண்டி வந்து சடையாண்டி கோயிலின் முன்னால் நின்றதும், அதில் இருந்து ஆறு சிப்பாய்கள் குதித்து தங்களிடமிருந்த தானியங்கி துப்பாக்கிகளினால் நாலாபுறமும் சரமாரியாகச் சுடத்தொடங்கினார்கள்.



த.சிவகுமார்
6.10.72 - 2.8.89



நா. சிவகுமார்
10.4.71 - 2.8.89



செ. மயில்வாகனம்
13.3.34 - 3.8.89



அ. உமாதேவி
2.1.63 - 2.8.89



Scanned by CamScanner

அதே நேரம் பார்த்து, சந்தியில் நின்று ஏற்கனவே சுடப்போவதாக எச்சரித்த சிப்பாய்க்கு என்ன வந்ததோ, திடீரென அங்கிருந்த பொதுமக்களை நோக்கி வரிசையாகச் சராமாரியாகச் சுட்டான். அந்தக் கணத்தாக்கம் அங்கிருந்த ஜவான் களையே ஒரு கணம் நிலை குலையவைத்தது. வல்வெட்டித்துறை இந்திய இராணுவ முகாம் இரண்டாவது பொறுப்பதிகாரியான கப்டன் ஹர்பர்சிங்கும் அங்கு நின்றான். அவனைத்தட்டிக்கேட்க வேண்டும் என்று அவன் கூட நினைத்துப் பார்க்கவில்லை. அந்த வினாடிக்குள் சகலதும் நடந்து முடிந்து விட்டது. அந்த துப்பாக்கித் தாக்குதலில் அங்கு தடுத்துவைக்கப்பட்டிருந்த 40 வயதான கந்தையா சிவபாக்கியம் என்ற சலவைத்தொழில் செய்யும் பெண்ணும், 60 வயதான தங்கராஜா என்ற வயோதிபரும் துடிதுடித்து மரணமடைந்து விழுந்தார்கள். அங்கிருந்த முப்பதுக்கும் அதிகமானவர்கள். பலத்த காயத்திற்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் கீழே சரிந்து விழுந்தார்கள். காயப்படாத ஏனையவர்களும், அவர்களுடன் சேர்ந்து அப்படியே கீழே விழுந்து படுத்தார்கள்.

தார் ரோட்டின் சூடும், துப்பாக்கியின் சூடும், அந்த மென்மையான மனித உடல்களை நன்கு பதம் பார்த்துக் கொண்டிருந்தது. இறந்தவர்களின் சடலங்களுடன் காயம் அடைந்தவர்களும் அந்தக் கொளுத்தும் வெயிலில் நீண்ட நேரம் இருந்தனர்.

''தண்ணீர்!.. தண்ணீர்!...'' என்ற ஓலங்கள், அந்த மனிதப்பிராணிகளின் உதடுகளில் இருந்து மெதுவாகக் காற்றில் கலந்து கொண்டிருந்தது. இரத்த வெறிபிடித்த சீக்கிய ஜவான்கள், காங்கேசன் துறை வீதியில் உள்ள கடைகளையும், மினி சினிமா திரையரங்கின் பொருட்களையும் தீ மூட்டிக்கொண்டிருந்தனர்.

ஆம்!.. அந்த நவீன அனுமார்களின் தகனப்படலம் இன்னும் முற்றுப்பெறவில்லை........ வல்வை மாநகர் எங்கும் ஒரே புகைமண்டலமாக இருந்தது....... தீச்சுவாலைகள் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்தன.

அந்த நேரத்தில் இராணுவச் சிப்பாய்களின் இன்னுமொரு கும்பல்,சிவபுர வீதியில் உள்ள அத்தனை வீடுகளையும் கொளுத்திக் கொண்டிருந்தது. இந்த வீதியில், சுமார் 10 வீடுகள் முற்றாகவே எரிந்து சாம்பரானது. அந்த நிகழ்வுகளை நேரில் பார்த்து அனுபவித்து திகில் அடைந்த 43 வயதான திருமதி பத்மா என்ற பெண், தன்னுடைய அனுபவத்தைக் கூறுகையில்,



Scanned by CamScanner


"இந்திய இராணுவத்தினர் சிவன் கோயில் வீதியில் உள்ள வீடுகளைக் கொளுத்திக்கொண்டு வருகின்றார்கள் என்பதைக் கண்டதும், நானும் எனது பிள்ளைகளும் தப்பிஓட வழியில்லாது தவித்த நேரத்தில், குசினிப் (சமயலறைப்) புகைப்போக்கியினுள் போய் ஒளிந்திருந்தோம். அதனைத் தொடர்ந்து உள்ளே வந்த சில இந்திய இராணுவத்தினர் எனது வீட்டுக்கதவுகளை உடைத்து திறந்து நடு அறைக்குள் எனது சகல உடைமைகளையும், ஆவணங்கள், ரெலிவிஷன், வானொலி போன்றவற்றையும் ஒன்றாகப்போட்டு, ஏதோ ஒரு வெள்ளை நிறத்தூளைத் தூவி, மண்ணெண்ணையை ஊற்றி நெருப்பு வைத்தார்கள். அந்த அறையில் மூண்டெழுந்த தீச்சுவாலையின் சூடு, குசினிக்குள் சமயலறைக்குள் ஒளிந்திருந்த எங்களைச் சுட்டெரிப்பது போல் இருந்தது. அந்த மண்டபத்தில் எழுந்த புகை மண்டலம், நாங்கள் இருந்த இடத்தினுள் பரவிக் கொண்டிருந்ததால், சுவாசிக்க முடியாமல் சிரமப்பட்டோம். மூச்சுத் திணறி இருமல் வந்துகொண்டிருந்தது. பொங்கி எழுந்த இருமலை எவவளவோ அடக்க முயற்சித்தும் முடியவில்லை.... அதற்கு மேல் அங்கிருந்தால், தீச்சுவாலை, நாங்கள் இருந்த குசினி (சமையலறை) யினுள்ளும் பரவிவிடும் என்று பயந்து, கையை உயர்த்தியபடியே நாங்கள் அப்பாவிகள் என்று கூறிக்கொண்டு வெளியே வந்தோம். எங்களைக் கண்டதும் ஒரு இராணுவச் சிப்பாய் வெறிகொண்டவன் போல் எனக்கு அருகில் வந்து என் உடல்மீது மண்ணெண்ணையை ஊற்றினான். ஐயோ, என்னை எரிக்கவேண்டாம் என்று அழுது கும்பிட்டேன். அவன் எதையும் பொருட்படுத்தாதவனாய் தன்னிடம் உள்ள தீக்குச்சியைப் பற்ற வைத்தபடி, என்னருகில் நெருங்கி வந்தான்..... என் உடலில் அவனது கையில் உள்ள தீச்சுவாலை பட்டால், எனது உடல் நிச்சயம் தீப்பிழம்பாகிவிடும். எனக்கு மயக்கம் வரும்போல் இருந்தது. அந்த நேரம், அவனுக்கு அருகில் நின்ற வேறொரு சிப்பாய் அவனது கையைத் தட்டிவிட்டதால், நான் மயிரிழையில் உயிர்தப்பினேன். காட்டு மிராண்டித்தனமான கூட்டத்திலும் ஒன்று இரண்டு மனிதாபிமானம்மிக்க உள்ளங்களும் இருப்பதை உணர்ந்து கடவுளுக்கு நன்றி சொன்னேன். அதனைத் தொடர்ந்து அவர்கள் வெளியேறியதும் நாங்கள் அங்கிருந்து தப்பிச் சிவன்கோயிலை அடைந்தோம். எங்களுடைய வீட்டிற்கு ஒரு வீடுதள்ளி இருந்த முத்துலிங்கம் என்பவரின் வீட்டிற்குச் சென்ற இராணுவத்தினர் அங்கிருந்த அவருடைய மகளைச் சுட்டுவிட்டு அவர்களுடைய வீட்டையும் கொளுத்திவிட்டுச் சென்றார்கள். நல்ல வேளையாக அந்தப் பெண் படுகாயத்துடன் தப்பிவிட்டதாகப் பின்னர் அறிந்தேன்..... இந்த ஆபத்தான நிலையில் இந்திய இராணுவம் எங்களுடைய ஊரில் இருக்கும்வரை நாங்கள் நிம்மதியாகவோ, சுதந்திரமாகவோ இருக்கமுடியாது..."



Scanned by CamScanner









Scanned by CamScanner

அந்தக்கோரச்சம்பவம் நடந்து முடிந்து பத்து நாட்கள் ஆகியும் அந்தப் பெண்ணிடம் பதற்றமும், அச்சமும் நீங்கவில்லை என்பதை அவளுடைய பேயறைந்த முகம் காட்டிக் கொண்டிருந்தது.

இதேபோன்று சிவபுரவீதியில் முற்றாகவே நிர்மூலமாக்கப்பட்ட அரசரட்ணம் பத்மலோஜினி என்பவரின் வீடு மிகவும் பரிதாபமான முறையில் மிச்சம், மீதியின்றி எரிக்கப்பட்டிருந்தது. அந்தப் பெண்ணின் கணவர் வர்ணகுலசிங்கம் அரசரட்ணம் என்பவர் ஒரு காலத்தில் கொழும்பு நகரில் கொடிகட்டிப் பறந்த வர்த்தகர். அதே நேரத்தில் தான் வாழும் காலத்தில், மக்களுக்காகவே தன்னை அர்ப்பணித்த சமூகசேவையாளர். அதிலும் விசேடம் என்னவென்றால் அவர் ஒரு இந்தியாவின் ஒரு பக்தர். கொழும்பில் உள்ள இந்தியத்தூதரகத்தின் முன்னாள் தூதுவர் திரு.ஜெ.என்.டிக்சிற்றின் நெருங்கிய நண்பர். அங்கு கடமையாற்றும் திரு. பூரி, திருமதி லஷ்மி பூரி ஆகியோருடன் மிக அன்னியோன்னியமாகப் பழகியவர். இலங்கை இராணுவத்தினரால் ஏற்படுகின்ற பிரச்சனைகளைச் சமரசமாகத் தீர்த்து வைப்பதில் முன்னின்று உழைத்தவர். 1987ல் வடமாராட்சி ஒப்பரேஷனின் பொழுது, இலங்கை இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டவர். அரசரட்ணத்தின் மறைவுக்குப்பின் திருமதி அரசரட்ணம் பத்மலோஜினி தனது ஐந்து பெண் குழந்தையுடன் தனிமரமாக நின்று குடும்பத்தை எப்படியோ கஷ்டப்பட்டு ஓட்டிக்கொண்டிருந்தார்.

அந்தப்பெரிய வீட்டு வாசலின் உள்ளே நுழையும் போது வாசலில் வரவேற்பதுபோல், நான்கு அடி உயரமான அன்னை இந்திராகாந்தியின் அழகிய மூவர்ணப்படம் பிரேம்போட்டு அழகாகத் தொங்கிக்கொண்டிருந்தது. அந்த வீட்டிற்குள்ளே நுழைந்த இந்திய இராணுவத்தினர் ஒரு மரத்துண்டுகூட, வெற்றுத்தாள்கூட எஞ்சியிருக்காத நிலையில் எரித்து தரைமட்டமாக்கி விட்டுச் சென்றனர். அன்னை இந்திராகாந்தியின் உருவப்படம் இருந்த இடம்கூடத் தெரியவில்லை.

அந்த அம்மாள் வேதனையோடு, கண்ணீரின் மத்தியில், "எனது கணவரை இழந்து கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் ஏதோ குடியிருக்க வீடாவது இருக்கின்றதே என்று ஆறுதல் அடைந்து இருக்க, இன்று எல்லாவற்றையும் இழந்து, போட்டிருந்த (அணிந்திருந்த) ஆடைகளுடன் எங்களை இந்தியன் ஆர்மி நிர்க்கதியாக்கிவிட்டார்களே....." என்று கூறி அழுத காட்சி அங்கு நின்று பார்த்துக்கொண்டிருந்த எல்லோரையும் நெஞ்சுருக வைத்துவிட்டது.




Scanned by CamScanner

1987ல் இலங்கை இராணுவம் வல்வெட்டித்துறையையும், வடமாராட்சியின் சில பகுதிகளையும் எரித்தும் குண்டு போட்டும், அழித்த பொழுது அந்த மக்கள் அழுத கண்ணீர், இன்று தென்னிலங்கையில் தீயாகக் கொழுந்து விட்டெரிவதையும் அதே இராணுவத்தினர் இன்று தமது மனைவி, மக்களுடன் கூட நிம்மதியாக வாழமுடியாத நிலையில் தவிப்பதையும் சுட்டிக்காட்டிய ஒரு பெரியவர்,

"இன்று இந்திய இராணுவம் எங்களுடைய மக்களைச் சுட்டுக்கொன்றும், எமது உடைமைகளைத் தீவைத்து அழித்தும் தனது இராணுவ அராஜகத்தை உலகுக் காட்டிக் கொண்டிருக்கின்றது...... நாளை இந்தியா இதற்கு பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்று சும்மாவா சொல்லி வைத்தார்கள்? என்று உணர்ச்சி பொங்கக் கூறிக்கொண்டிருந்தார்.

இந்திய இராணுவத்தினர், பாரதத்தின் மூத்த அரசியல் தலைவர்களுக்கு எப்படி மதிப்பும், கௌரவமும் கொடுக்கின்றனர் என்பதற்கு, இன்னுமொரு உதாரணத்தை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.


வல்வெட்டித்துறைச் சந்தியில் இருந்து கிழக்குப்புறமாக சுமார் 300 யார் தூரத்தில் நெடியகாடு என்ற பகுதி இருக்கின்றது. அங்கே ஒரு அழகிய கணபதி ஆலயமும், அதற்கு அருகே, தெருக்கரைப் பக்கமாக கணபதி படிப்பகமும் அமைந்துள்ளது. அங்கே சுமார் ஐந்து அடி உயரமான மகாத்மா காந்தியின் அழகிய உருவம் படம் தொங்கவிடப்பட்டிருந்தது. அங்கே வந்த பொலிகண்டி இராணுவ முகாமைச் சேர்ந்த சீக்கியப்படையினர் அந்தப்படிப்பக்கததின் கததவை உடைத்து உள்ளே தொங்கிக்கொண்டிருந்த மகாத்மா காந்தியின் படத்தை உடைத்து எரித்து தேசப்பிதாவின்மீது தமக்கிருக்கும் மதிப்பை வெளிப்படுத்தி விட்டுப் போயிருக்கின்றார்கள்.



இ.இராஜரத்னம்
12.3.56 - 2.8.89



ந.நல்லமுத்து
17.8.17 - 3.8.89



சு.அ.மார்கண்டன்
11.10.60 - 2.8.89



க.கணேசலிங்கம்
25 வயது



Scanned by CamScanner









Scanned by CamScanner

அந்த நகரத்தின் பல பகுதிகளிலும் ஆயிரக்கணக்கில் குவிக்கப்பட்டிருந்த இராணுவத்தினரில் ஒரு பகுதியினர் வித்தினை ஒழுங்கைக்குள் சென்று தெருக்கரையுடன் அமைந்திருந்த வள்ளம்(படகு) கட்டும் தொழிற்சாலையை நிர்மூலமாக்கி, அங்கு புதிதாகத் தயாரிக்கப்பட்டிருந்த இரண்டு வள்ளங்களையும் எரித்துச் சாம்பராக்கினர். அங்கிருந்த தென்னை மரங்கள், வேப்பமரங்கள் எல்லாம் எரிந்து, கருகிச் சோர்ந்து போயிருந்தன. மனிதர்களைத்தான் அவர்கள் விட்டுவைக்கவில்லை, பாவம் மரங்களையும் அல்லவா கொன்று குவித்துக்கொண்டிருந்தார்கள். அவற்றை அழித்த அதேவேகத்தில் வித்தனை ஒழுங்கையில் இருந்து மேற்கே பிரிந்து செல்லும் சிறிய சந்தினூடாகப் பலத்த சத்தத்துடன் சென்ற இராணுவத்தினர், சந்தில் நேரே எதிர்புறமாகத் தெரியும் தலைவாசல், வீட்டுக்கதவை உடைத்துக்கொண்டிருந்தார்கள். அது உட்புறமாகத் தாழ்ப்பாள் போடப்பட்டிருந்ததால், இலேசாகத் திறபடவில்லை. அங்கு அந்த வீட்டினுள் ஆண்கள், பெண்கள், குழந்தைகள், சிறுவர்கள் என்று சுமார் 40 பேர்வரையில் தஞ்சம் அடைந்திருந்தார்கள். அந்த வீட்டின் கூரை சீமெந்தினால் (காங்கிரீட்டினால்) போடப்பட்டிருந்ததால், இராணுவத்தினர் தொடர்ச்சியாக அடித்துக்கொண்டிருக்கும் செல் தாக்குதலில் இருந்து தப்புவதற்காக அந்த வீட்டிற்குள் ஓடிவந்து புகுந்த அயலவர்கள் முப்பத்தேழுபேரும், அந்த வீட்டுக்காரரான இளைப்பாறிய நில அளவை சுப்பிறின்டன் வெங்கடாசலம் சுப்பிரமணியம், அவரது மனைவி இராஜேஸ்வரி, மகள் ரகீதன் மார்க்கண்டன் ஆகியோரும் இருந்தார்கள்.

கதவை உடைத்து திறந்து கொண்டு, உள்ளே நுழைந்த இராணுவத்தினரை கண்டதும், அங்கிருந்த எல்லோருமே கைகளை உயர்த்தியபடி எழுந்து நின்றார்கள். 60 வயதான சுப்பிரமணியம், சரளமாக ஆங்கிலம் பேசக்கூடியவர், தனது கைகளை உயர்த்திய படியே ஆங்கிலத்தில்,



க.சிவபாக்கியம்
8.11.47 - 2.8.89



சி.சிவலிங்கம்
10.9.36 - 2.8.89



சு.பேரின்பம்
17.8.69 - 2.8.89



வி.கிருஷ்ணவதனா
29.8.89 - 2.8.89



Scanned by CamScanner

"நான் ரிட்டையர்டு (ஓய்வுபெற்ற) சேவையர் சுப்பிறின்டன்ட்... இங்கே இருப்பவர்கள்......" சொல்லி முடிப்பதற்குள், அவருக்கு எதிரே துப்பாக்கியை நீட்டியபடி வந்த இந்திய சீக்கிய ஜவான் அவருடைய நெற்றிக்கு குறிவைத்து தனது துப்பாக்கியை வைத்து விசையைத் தட்டிவிட்டான்.

"ஐயோ!... அம்மா!... " என்ற சத்தத்துடன் நெற்றியில் இருந்து இரத்தம் பீறிட்ட நிலையில் கீழே விழுந்தார். அந்த மரண ஓலம் ஓய்வதற்கு முன் வேறொரு ஜவான், தன்னிடம் இருந்த துப்பாக்கியினால் அங்கிருந்தவர்களை நோக்கி சரமாரியாகச் சுட்டுக் கொண்டிருந்தான். அந்த அதிரடித்தாக்குதலில், ஒரு சிலர் உருண்டு விழுந்து தப்பிச் சமையல் அறைக்குள்ளும் மலகூடத்தினுள்ளும் ஓடிச்சென்று ஒளிந்தார்கள். அந்தக்கோரமான தாக்குதலில், ஒன்பது அப்பாவிகள் அந்த இடத்திலேயே துடிதுடித்து விழுந்தார்கள், பலர் படுகாயத்துடன் கீழே படுத்திருந்தார்கள். ஒன்றரை வயதுடைய அழகான குழந்தை சசி இரத்த வெள்ளத்தில் இறந்துபோய் இருந்தது. இதில் அந்தக்குழந்தையின் தந்தையான 29வயதுடைய கணேசலிங்கம், 76வயது வயோதிபரான இளையபெருமாள், அவரது மகள் அமிர்தம் உமாதேவி, பழக்கடை வைத்திருக்கும் விதவையான 49 வயதுடைய இராசகுரு புஸ்பராணி, அவரது மகன் இராசகுரு ஜவனராஜ் (அவன் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியில் ஏழாம் வகுப்பில் படிக்கும் 11வயது நிரம்பியவன்) 40 வயதான ஈஸ்வரமூர்த்தி ராஜலட்சுமி, ஆதி அருணாசலம் சுந்தரேஸ்வரன், (இருவரும் சிதம்பராக் கல்லூரியில் ஏழாம் வகுப்பில் படிப்பவர்கள்) இவர்களுக்கு மத்தியில் காயப்பட்டவர்களும், காயம் ஏதும் அடையாதவர்களும் இறந்தவர்கள் போல் படுத்திருந்தனர். ஆரம்பத்தில் சூடுபட்டு விழுந்த சுப்பிரமணியம் "தண்ணீர்.... தண்ணீர்...." என்று முனகிக்கொண்டிருந்தார். அவர்மீது இன்னுமொரு தடவை சுடுவதற்கு ஒரு ஜவான் எத்தனித்தபோது,

"அவன் இரத்தம் ஓடியே செத்துடுவான், தேவையில்லை..." என்று இன்னுமொருவன் கூறியதும் அந்த இடத்தை விட்டு வெற்றிக் களிப்பில் வெளியேறினார்கள்.

இந்தச் சடலங்களின் மத்தியில் காயமடைந்தவர்களும், மற்றவர்களும், மூன்று நாட்கள் வரை அப்படியே பதுங்கியிருந்தார்கள்.

இந்தச்சந்தர்ப்பத்தில், இன்னுமொரு பழைய சம்பவம், 1987ம் ஆண்டின் வடமாராட்சி ஒப்பரேஷன் லிபரேஷன் தாக்குதலின் பொழுது தமிழ் மக்கள் மீது வானம், தரை, கடல் ஆகிய மூன்று



Scanned by CamScanner

பக்கங்களில் இருந்தும் சிங்கள இராணுவத்தினரின் தாக்குதல்கள் மூர்க்கத்தனமாக நடைபெற்றுக் கொண்டிருந்தவேளையில்,

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இ.மோகனதாஸ் என்பவர் கையில் படுகாயம் அடைந்த நிலையில் துடித்துக்கொண்டிருந்த பொழுது அவரை ஹெலிகொப்டரரில் ஏற்றிச் சென்று அனுராதபுரம் வைத்தியசாலையிலும், உரிய மருத்துவ உதவியின்றி பிரசவ வேதனையால் துடித்துக்கொண்டிருந்த திருமதி இரத்தினசிகாமனி என்ற இளம் பெண்ணையும், கணவனையும் ஹெலிகொப்ரரில் ஏற்றிச் சென்று புத்தளம் வைத்தியசாலையிலும் சிங்கள படையினர் அனுமதித்தனர்.

**இந்த இரண்டு பிசாசுகளிலும் எந்தப்பிசாசு அதிக பயங்கரமானது என்று சீர்தூக்கினால், இந்திய அமைதிப்படை இலங்கையில் இருப்பதற்கே அர்த்தமற்றதாகிவிடும்.**

வடமராட்சி தாக்குதலினால் பல்லாயிரக்கணக்கான மக்கள் அகதிகளாக்கப்பட்டனர் என்று கூறிக்கொண்டு, உணவுப் பொட்டலங்களைப் போட்டு, இலங்கை மண்ணில் ஊடுருவல் செய்த இந்திய அமைதிப்படையினரால், இன்று அதைவிடப் பலமடங்கு மக்கள் அகதிகளாக்கப்பட்டதுடன், தமதுவீடு, சொத்துக்களையுமல்லவா இழந்து அவர்கள் நிர்க்கதியாக்கப்பட்டுள்ளனர்.


1989 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2ம் திகதி அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட ஊரடங்குச் சட்டம், தொடர்ந்து மூன்று நாட்கள் வரை இருந்தது.


வித்தனை ஒழுங்கையில் ஒன்பது அப்பாவி உயிர்களையும் பலி எடுத்தவர்கள் அந்த இடத்தில் இருந்து வெளியேறி பிரதான வீதியில் உள்ள, திருமதி கணேசபாக்கியம் வீட்டை அடியோடு எரித்து நிர்மூலமாக்கினார்கள். வாசலில் வரவேற்பறையில் இருந்த அழகிய பெரிய கிருஷ்ணர், பாமா சிலைகள் வீதியில் போட்டு தலைவேறு, கால்வேறாக உடைக்கப்பட்டிருந்தன. அதற்குச் சற்று எதிர்ப்புறத்தில் இருந்த கிராமிய வங்கி முற்றாகவே எரிந்து, இரும்புப் பெட்டகத்தினுள் உள்ள பணமும் கருகிச் சாம்பாராகிப்போய் இருந்தது.


இந்தக் கொடூர சம்பவங்கள் நடந்து கொண்டிருந்த அதே நேரத்தில் வேறு சில சிப்பாய்கள் வல்வெட்டித்துறைச் சந்தியில் இருந்து



Scanned by CamScanner










Scanned by CamScanner



வல்வெட்டித்துறை சந்தியில் ரோட்டோரம் பா. பிரேம்ராஜ்
க. தங்கராஜா. திருமதி க. சிவபாக்கியம் ஆகியோரின் சடலங்கள் எரிந்து
கொண்டிருக்கின்றன.



Scanned by CamScanner

அரைகிலோமீட்டர் தொலைவில் உள்ள புட்டணிப்பிள்ளையார் கோயிலின் முன்பாக உள்ள மகேந்திரராஜா என்பவரின் வீட்டிற்குள் நுழைந்து அங்கிருந்த அவரது காரை எரித்துச் சாம்பாராக்கினார்கள். அங்கிருந்த வீட்டுக்காரரான கந்தசாமி மகேந்திரராஜாவும், அவரது சகோதரர் கந்தசாமி வேலும் மயிலுமுடன் அவர்களது மனைவிமாரான சுசிலாதேவி, மகாலட்சுமி, தாய் வள்ளியம்மாள், மற்றும் பிள்ளைகளும் இருந்தனர். வல்வெட்டித்துறைச் சந்தியில் நகர்ப்புறத்தில் சூட்டுச்சம்பவம் நடைபெற்றதால் இவ்வளவு தொலைவுக்கு இராணுவத்தினர் வருவார்கள் என்று சற்றும் எதிர்பார்க்காத அவர்கள் கார் எரிவதைக் கண்டதும் திகைத்துப்போய் ஓடிச்சென்று பின்புறம் உள்ள சமயலறைக்குள் ஒளிந்திருந்தார்கள். 3ஸ்ரீ 4498 இலக்கமுடைய மோட்டார்காரை எரித்துவிட்டு பின்னர், அங்கிருந்த வீட்டுப்பாவனைப் பொருட்கள், உடைகள் தளபாடங்களை முன் அறையில் குவித்து தீ மூட்டினார்கள். அவை எரிவதைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே, வீட்டு வாசல் முற்றத்தில் நின்ற மாமரத்தின் கீழ் இருந்து 'சிகரெட்' புகைத்துக் கொண்டிருந்தார்கள்.

வீட்டுக்கு உள்ளேவந்து தங்களைச் சுட்டுவிடுவார்களோ என்று நினைத்த வீட்டுக்காரர்கள், தமது கைகளை உயர்த்தியபடியே வெளியே வந்தார்கள். அவர்கள் வெளியே வருவதைக் கண்டதும், ஒரு ஜவான் ஓடிச்சென்று மகேந்திரராஜாவின் தலைமயிரைப் பிடித்து இழுத்து, கோயில் வாசலை நோக்கிக்கொண்டு வந்தான். அவருக்கு 49 வயதாகின்றது. மூன்று பிள்ளைகளின் தந்தை.

"நீ எல்.ரீ.ரீ.ஈ...." அந்த ஜவான் வாய்கிழியக் கத்தினான். இன்னுமொரு ஜவான் அவரது 42 வயதான தம்பி வேலும் மயிலும் என்பவரை இழுத்து வந்து, அவர்களது வீட்டு வெளிவாசல் கதவுடன் நிறுத்திவைத்து, துப்பாக்கியை மிக அருகில் பிடித்துச்சுட்டதும், வேலும்மயிலும் துடிதுடித்துக் கீழே விழுந்தார். இதனைச் சற்றும் எதிர்பார்க்காத வீட்டுக்காரர்கள் அலறித்துடித்தார்கள்.

அவரது மனைவி மகாலட்சுமியின் கண்முன்னாலேயே அந்த அப்பாவிக்கணவன் கொஞ்சம் கொஞ்சமாகத் தன் உயிரை விட்டுக்கொண்டிருந்தார்.

அந்தச்சம்பவத்தை கண்டாவது சிறிதும் இரங்காது மரம்மாதிரி நின்ற மற்றைய சிப்பாய், அவரது அண்ணன் மகேந்திரராஜாவை சுவருடன் வைத்துச் சுடுவதற்குத் துப்பாக்கியைக் குறிவைத்ததும், அவரது தாய்



Scanned by CamScanner


ஓடிவந்து கட்டிப்பிடித்து, அழுதுகொண்டே இராணுவச்சிப்பாய்களை நோக்கி கையெடுத்துக் கும்பிட்டாள். அவரது மனைவி சசிலாதேவி ஓடிவந்து குறுக்கே நின்று அழுது கும்பிட்டு மன்றாடிக் கொண்டிருந்தாள். அந்த வயதான தாயின் ஓலம் அவர்களது கல்மனதைக் கரையவைக்கவில்லை. அங்கு நின்ற சிப்பாய் ஒருவன் அந்த வயதான தாயின் முதுகில் சுட்டதும், இரத்தம்பீறிட்ட நிலையில் துடிதுடித்துக் கீழேவிழ மற்றவன் மகேந்திரராஜாவின் நெஞ்சிற்குக் குறிவைத்துச்சுட்டதும், அப்படியே சுவருடன் சரிந்து விழுந்து உயிரைவிட்டார். அவரைக் கட்டிப்பிடித்து அழுதுகொண்டிருந்த சுசிலாவின் கால்களில் துப்பாக்கியினால் சுட்டதில், அவளுடைய காலில் பல இடங்களில் துப்பாக்கிச் சன்னங்கள் துளைத்துச் சென்றன. அந்தப்பதினைந்து நிமிட நேர எல்லைக்குள் இருகொலைகளையும் நடத்தி முடித்தவர்கள் அட்டகாசமாகச் சிரித்துக்கொண்டே அந்த இடத்தை விட்டு வெளியேறிக்கொண்டிருந்தார்கள். காயப்பட்டு, இரத்தம் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்த நிலையில் அந்த வயதான தாயும், சுசிலாதேவியும் வேதனையில் முனங்கிக்கொண்டிருந்தனர். மகேந்திரராஜாவின் தங்கையை மணம்முடித்த மைத்துனர் தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளைப் பாடசாலை ஆசிரியரான சுப்பிரமணியம் சக்தி வடிவேல், அந்தச் சம்பவம் பற்றிக் குறிப்பிடும்போது,

"இராணுவத்தினர் வருகின்றார்கள் என்பதை அறிந்ததும், நானும் மனைவியும் பிள்ளையார் கோயிலுக்குள் சென்று ஒரு மூலையில் ஒளிந்திருந்தோம். அப்பொழுது எனது இருமைத்துனர்களையும் வருமாறு கேட்டபொழுது நாங்கள் வயதான ஆட்கள்தானே, எங்களை ஒன்றும் செய்யமாட்டார்கள் என்று சொல்லி, அவர்கள் வீட்டிலேயே இருந்தார்கள்.

சே இறந்தவர்களைப் பார்த்து அழுது எங்களுடைய வேதனைகளைத் தீர்க்கவோ, சமயக்கிரியைகளை செய்து தகனம் செய்யவோ, காயம்பட்ட


சோ.ரமேஷ்குமார்
24.7.70 - 2.8.89


பொ.சண்முகலிங்கம்
22.3.46 - 2.8.89


க.மகேந்திரராஜா
16.5.40 - 2.8.89


வி.முரளிதரன்
21.11.69 - 2.8.89



Scanned by CamScanner







* தன் வீட்டு வளாகத்திலேயே தன் கணவரின் சிதை எரிவதை கண்டு கதறி அழும் திருமதி ரவீந்திரன்.

* வல்வெட்டித்துறை ஜங்ஷனில் எரிந்து முடிந்த சடலங்கள் இங்குதான் முதலில் மோதல் துவங்கியது.

* தீருவில் சிவகணேஷ் வீட்டில் சுடப்பட்ட நால்வரில் ஒருவரது சடலம் எரிகிறது.



3.8.89 அன்று வல்வெட்டித் துறை சந்தியில் து. நாகதாஸ்,
பா. மகேந்திரதாஸ், செ. மயில்வாகனம், த. ரவிச்சந்திரன், சு. உமாசங்கர்,
நவரட்ணம் ஆகியோர் வரிசையில் நிறுத்தப்பட்டு சுடப்பட்ட இடம்



Scanned by CamScanner

என்னுடைய மாமியையும், சகோதரியையும் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லவோ முடியாத நிலையில் இறந்த உடல்களின் நாற்றத்தின் மத்தியில் மூன்று நாட்கள் வரை அப்படியே இருந்தோம்."

என்று வேதனையுடன் கண்ணீரின் மத்தியில் கூறினார்.

அந்தப் பள்ளி ஆசிரியரின் வீடும் ஏற்கனவே, ஸ்ரீலங்கா விமானக் குண்டு வீச்சுக்கு இலக்காகிப் பின்னர் ஒருவாறு கடன்பட்டுத் திருத்திக் குடும்பத்தினருடன் குடி இருந்து வந்த நேரத்தில், இப்பொழுது மீண்டும் இந்திய அமைதி காக்கும் படையினரால் ஒரு உடைகூட எஞ்சாத வகையில் தீக்கிரையாக்கப்பட்டது.

ஒரு பள்ளி ஆசிரியரின் வருமானம், அவருடைய குடும்பத்தையே கொண்டு நடத்தக் கஷ்டமான நேரத்தில் இழந்த வீட்டையும், பொருட்களையும் அவரால் அவரது வாழ்நாளில் கூட மீட்கமுடியுமா?

இங்கே புட்டணி விநாயகர் ஆலயத்தின் முன்னால் இந்தப் படுகொலை நிகழ்ந்து முடிந்த சொற்ப நேரத்தில் தீருவில் ஒழுங்கையில் உள்ள சிவகணேஷ் என்பவரின் வீட்டில் நடந்த அனர்த்தங்கள் இதைவிடக் கொடுமையாக இருந்தன.

அந்த வீடு மிகப்பெரிய கல்வீடு. அருகே நெடிதுயர்ந்த வேப்பமரமும், அதற்குச் சற்றுத்தள்ளி ஒரு கார் ஷெட்டும் உள்ளது. தொடர்ச்சியாகக் கேட்டுக்கொண்டிருந்த துப்பாக்கி வேட்டுக்கள், மோட்டார் செல் குண்டுகளின் சத்தங்களினால் பீதியடைந்த அந்தத் தெருவைச் சேர்ந்தவர்கள் சுமார் நூற்றி ஐம்பதுபேர்வரை அந்த வீட்டிற்குள்வந்து தஞ்சமடைந்திருந்தார்கள். அவர்களில் பத்துப்பேர் மட்டுமே ஆண்கள். அதிலும் இருவர் வயதானவர்கள், ஏனையவர்கள் எல்லோரும் பெண்களும், குழந்தைகளுமாகவே இருந்தனர்.

தீருவில் ஒழுங்கையில் உள்ள வீடுகளை உடைத்தும், எரித்தும் கொள்ளையிட்டும் வந்து கொண்டிருந்த இராணுவத்தினர் அந்த வீட்டின் கதவையும் உடைத்துத்தள்ளித் திறந்தவுடன் வாசலில் நின்றபடியே, ஒருவன் வீட்டை நோக்கி செல்வ்லோடிங் றைபிளினால் (SLR) சரமாரியாகச் சுட்டான். அந்த வீட்டின் யன்னல் கண்ணாடிகள் உடைந்து தூள் தூளாக நொருங்கியது. யன்னலினூடாகச் சென்ற துப்பாக்கிக்குண்டுகள், வீட்டின் முன் கூடத்தில் இருந்த மேசை, நாற்காலிகள், ஷோகேஸ் ஆகியவற்றை



Scanned by CamScanner











Scanned by CamScanner



Scanned by CamScanner










Scanned by CamScanner



Scanned by CamScanner







Scanned by CamScanner

பதம்பார்த்தது. அதை அடுத்துள்ள அறையில் அச்சத்தினால் பதுங்கி இருந்தவர்கள், எல்லோரும் வெளியே வந்து நின்றார்கள். உள்ளே சுமார் 30 இராணுவத்தினர் வரை ரைபிள்களை நீட்டியபடி வந்தார்கள். அங்கு நின்றவர்களில் ஆண்களை வேறாகவும், பெண்களை வேறாகவும் பிரித்து, இரண்டு முதியவர்களையும் பின்னர் பெண்களுடன் போய் நிற்கும்படி பணித்தார்கள். மிகுதி எட்டு ஆண்களையும் அங்கிருந்த கார்செட்டுக்கு முன்னால், (அது இப்பொழுது மாட்டுத் தொழுவமாகப் பயன்படுத்தப்படுகிறது) முழங்காலில் குந்தி இருக்கவைத்துவிட்டு ஒருவன் சுடுவதற்கு ஆயத்தமாக நின்றான். சிறிது தூரம் தள்ளி அழுது கூக்குரல் இட்டுக்கொண்டிருந்த அவர்களது தாய்மார்களையும், மனைவிமார்களையும், சகோதரிகளையும், பிள்ளைகளையும் கிட்ட நெருங்கவிடாது அங்கு நின்ற ஏனைய ஜவான்கள் துப்பாக்கியினால் மிரட்டிக்கொண்டே இருந்தார்கள். அந்த ஆண்கள் எட்டுபேரும், பலிபீடத்தில் நிறுத்தப்பட்ட ஆட்டுக்கடாக்கள் போன்று விழிகள் பிதுங்கப் பேயறைந்தவர்கள் போல் நின்றார்கள். அந்த கார் செட்டின் முன்னால் முழங்காலில் நிற்கவைத்த ஒரு நிமிடத்திற்குள் மற்றைய ஜவான், அந்த எட்டுப்பேரையும் நோக்கித் துப்பாக்கியினால் வரிசையாகச் சரமாரியாகச் சுடத்தொடங்கினான்.

அந்தச்சீக்கியச்சிப்பாயின் கண்கள், வெறியினால் சிவந்து போயிருந்தன!

ஆம்!... அவர்களது மனைவிமார், தாய்மார், சகோதரிகள், பிள்ளைகள் முன்னிலையிலேயே, அந்தப்பாதகன் அவர்களைச் சுட்டு வீழ்த்தினான்.

அவர்களின் 41 வயதான ஆறுமுகசாமி இராமச்சந்திரன், 36 வயதான கதிர்காமத்தம்பி சிவநேசராசா, 29 வயதான பொன்னம்பலம் ரஞ்சித்குமார், 32 வயதான நடராசா ரவீந்திரன் ஆகிய நான்குபேரும் அந்த இடத்திலேயே துடிக்கத் துடிக்கக் கொல்லப்பட்டனர். ஏனைய நான்கு பேரும் படுகாயமடைந்து, இரத்தம் பெருக்கெடுத்து ஓடிய நிலையில் ஊரடங்குச்சட்டம் (கர்பியூ) நீக்கப்பட்ட மூன்றாவது நாள் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அவர்களில் ஒருவரான, இளையதம்பி யோககுரு என்ற வர்த்தகரின் வலதுகை துண்டிக்கப்பட்டது.

இந்தச்சம்பவத்தை நேரில் பார்த்து, மயிரிழையில் தப்பிய 68 வயதான இளைப்பாறிய தபால் அதிபரான ஏ.ஆர். சிவகுரு என்பவர்,

Scanned by CamScanner

"அந்தப்பயங்கரமான சூழலில் ஆண்களை வேறாக முட்டுக்காலில் நிற்கவைத்துச் சுட்டபோது நான்குபேர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். அதில் தனது கணவன் இறந்ததற்காக, அங்கு சற்றுத்தூரத்தில் தடுத்து வைக்கப்பட்ட ஒரு பெண் வீறிட்டுத்தலையிலும் நெஞ்சிலும் அடித்து அழுது கொண்டிருந்தபொழுது, அங்கு நின்ற ஒரு சீக்கிய ஜவான், கத்தாதே, கத்தினால் உன்னையும் கொன்றுவிடுவோம் என்று அவளை மிரட்டி அடக்கினான். இங்கே தமிழனாகப் பிறந்ததற்காக இறந்தவர்களுக்காக ஒரு துளி கண்ணீர் விட்டு அழக்கூடவா உரிமையில்லை....?" என்று விரக்தியுடன் கூறிக்கொண்டார். இந்திய இராணுவத்தினரின் இந்த நடவடிக்கையால் அவர் மனம் குழம்பிப்போயிருந்தார்.

இதே போன்று அந்த இடத்தில் இருந்து மேலும், 300 கெஜம் (யார்) தூரம் தள்ளி உள்ள தீருவில் புலேந்திரன் குமரப்பா உள்ளிட்ட 12 விடுதலைப் புலிகளின் பிரமாண்டமான நினைவுத்தூபிக்கு அருகாமையில் உள்ள முருகையன் கோவிலடியில் உள்ள சிவலிங்கம் என்பவரின் வீட்டில் நிகழ்ந்த துயரச்சம்பவத்தில், இரண்டு அப்பாவி அகதிகள், இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

வல்வெட்டித்துறையில் இருந்து எட்டு கிலோமீற்றர் தூரத்தில் கடற்கரையோரமாக அமைந்துள்ள பருத்தித்துறையில், இந்திய இராணுவத்தினரின் கொடுமைகளைத் தாங்காது, அங்கிருந்து அகதியாக, இடம்பெயர்ந்து வந்து தங்கியிருந்த 62 வயதான அஞ்சல் அதிபரான இராசமாணிக்கம் நடராசாவும் அவரது மனைவி பிள்ளைகளும், அவரது மருமகள் முறையான, இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தில் வேலைபார்க்கும் 25 வயதான விநாயகமூர்த்தி அருள்சோதியும் மற்றும் சிவலிங்கம் என்பவரின் குடும்பத்தினர் அந்த வீட்டில் இருந்தார்கள். அவருக்கு மூன்று வீடுகள், இரண்டு அருகருகாகவும், ஒன்று எதிராகவும் அமைந்துள்ளது. அந்த வீட்டுக்காரரான சிவலிங்கம் வழமைபோல் வல்வெட்டித்துறைச் சந்தியில் உள்ள அவரது தேநீர்க்கடைக்குச் சென்றுவிட்டார்.

அங்கே நுழைந்த இராணுவத்தினர், வீட்டில் இருந்த ஆண்களான நடராசாவையும், அருள்சோதியையும் சுட்டுக் கொன்றுவிட்டு அங்கே நின்ற 1ஸ்ரீ873 இலக்கமுடைய மொறிஸ்மைனர் காரை எரித்து, எதிர்ப்புறத்தில் உள்ள, சிவலிங்கத்தின் மருமகன் சிவரத்தினத்தின் வீட்டிற்குள் புகுந்து, வாசலில் நின்ற சாளி மோட்டார் சைக்கிளை அடித்து நொறுக்கிப் பின்னர்,



Scanned by CamScanner








Scanned by CamScanner



Scanned by CamScanner

பெற்றோலை ஊற்றித் தீமூட்டி வீட்டிற்குள் இருந்த அத்தனைப்பொருட்களையும் போட்டு கொளுத்தினார்கள். சில நிமிடத்தில் அங்கிருந்த பொருட்கள் எல்லாம் எரிந்து சாம்பாரானதும், அந்த இடத்தை விட்டு விலகிச்சென்றார்கள்.

சில நாட்களின் பின்னர் சிவலிங்கம் என்பவரின் மகள் நளினி சிவரட்ணம் அந்தச்சம்பவத்தைப்பற்றி விவரிக்கையில்

"எங்களுடைய கண்ணுக்கு முன்னாலேயே பெரியப்பாவைச் சுட்டதும் அவர் கொஞ்சநேரம் துடித்துத் துடித்து இறந்ததை நினைக்கும்பொழுது எங்களுடைய நெஞ்சே வெடித்துவிடும்போல் இருக்கிறது. எங்களுடைய அப்பாவையும் சந்தியில் இருந்த இராணுவத்தினர் பிடித்துக்கொண்டுபோய் விட்டார்கள். எனது கணவரும் பருத்தித்துறை வங்கியில் வேலைக்குப்போனவர் திரும்பவில்லை. ஊரடங்குச் சட்டம் மூன்றாம் நாள் எடுக்கப்பட்ட பின்தான் அப்பாவையும் விடுதலைசெய்தார்கள். எனது கணவரும் வீட்டிற்குத்திரும்பினார்கள். அதன்பிறகுதான் இரண்டு சடலமும் அழுகிய நிலையில், தீருவில் மைதானத்திற்குக் கொண்டுசென்று டயர், விறகுகட்டைகளைப்போட்டு எரித்தோம். அவர்களுடன் பெரியம்மா, நான், அம்மா எல்லோரும் சேர்ந்து தூக்கிச்சென்று எரித்தோம்.........சே!.... இந்திய இராணுவம் இப்படி இரக்கமற்றவர்களாக இருப்பார்கள் என்று நாங்கள் கனவில் கூட நினைத்துப் பார்க்கவில்லை....." என்று கூறி அழுதார்.

இந்தச்சம்பவத்தை தொடர்ந்து, நடராசாவின் மனைவி, பிள்ளைகள் எல்லோருமே கொழும்புக்குச் சென்றுவிட்டனர். அவர்களைப்பொறுத்தவரையில், வடக்கு,கிழக்குப் பகுதிகளில் வாழ்கின்ற தமிழருக்குப் பாதுகாப்பு இல்லை என்ற உணர்வு யதார்த்தமானதுதானே?

இப்படியே ஒவ்வொரு வீடுகளிலும் கொல்லப்பட்டவர்களின்



அ.இளையபெருமாள்
1.9.13 - 2.8.89



து.நாகதாஸ்
29.8.61 - 3.8.89



க.வேலும்மயிலும்
4.5.46 - 2.8.89



இ.நடராஜா
62 வயது



Scanned by CamScanner

சடலங்கள், அழுகிய நிலையில் அந்தந்த வீடுகளில் வைத்தே தகனம் செய்யப்பட்டது, துர்ப்பாக்கியமானதாகும். இந்துக்களைப் பொறுத்தவரையில் மரணச்சடங்கு என்பது மகத்துவமானதாகவே கருதப்படுகிறது. மரணித்துப்போனவர்களின் ஆன்மாக்களைச் சாந்தியடையச் செய்வதற்காக எத்தனையோ கிரியைகளைச் செய்து, நகரின் ஒதுக்குப்புறத்தில் இதற்கென உள்ள சுடுகாட்டில் முறைப்படி தந்தைக்கு மகனும், மகனுக்கு தந்தையும் செய்வதுதான் வழக்கம். இந்தச்சுடுகாட்டுப்பக்கம் பெண்களே போகக்கூடாது என்பது மரபாக இருந்து வருகின்றது. ஆனால் வல்வெட்டித்துறையில் நடந்து முடிந்த இந்தக்கொலைகளைத் தொடர்ந்து சமயக்கிரியைகள், முறைப்படி தகனம் செய்யும் உரிமைகள்கூட மறுக்கப்பட்ட நிலையில் கணவன்மார்களை அவர்களது மனைவிமாரே தீமூட்டிய அவலம் நிகழ்ந்தது. தனது படையினரின் இந்தக்கொடுமைகளுக்கு, பஞ்சசீலத்தை உலகுக்குப் போதிக்கும் பாரதம் என்ன பதிலைச் சொல்லப்போகின்றது?

இராணுவத்தினரின் அனர்த்தங்கள் அங்கிங்கெனாதபடி, வல்வெட்டித்துறையிலும் அயல் ஊர்களான வல்வெட்டி, பொலிகண்டி ஆகிய இடங்களிலும் பரவலாக வியாபித்துக் கொண்டிருந்தது.

இந்தச்சம்பவங்கள் எல்லாம் வல்வெட்டித்துறையின் மேற்குப் பகுதியிலும் நடந்து கொண்டிருக்கும் பொழுது, வல்வெட்டித்துறைச் சந்தியில் இருந்து கீழக்கே 2கிலோமீற்றர் தூரத்தில் உள்ள ஊறணி, பொலிகண்டி ஆகிய இடங்களிலும்கூட இந்திய இராணுவத்தினரின் வன்முறைகள் அதிகரித்துக் கொண்டிருந்தன.

ஊறணி அரசினர் வைத்தியசாலையினுள், நூற்றுக்கணக்கான மக்கள் பீதியினால் வந்து தஞ்சமடைந்திருந்தனர். பொலிகண்டி இராணுவ முகாமில் இருந்து வந்த இந்திய இராணுவத்தினர், வல்வெட்டித்துறையை நோக்கி வந்து கொண்டிருக்கும்பொழுதே, வரும்வழியில் வீடுகளுக்குள் புகுந்து சுட்டும் வீடுகள், கடைகளை எரித்தும் வந்துகொண்டிருந்த வழியில் ஊறணி குடியேற்றத்தைச் சேர்ந்த 35 வயதான சிவமணி, 33வயதான பீற்றர் கிருஷ்ணவதனா என்ற பெண்கள், பொலிகண்டியைச் சேர்ந்த 20 வயது வி. முரளிதரன், சோ.ரமேஸ்குமார் 23 வயதான பொ.இராசேந்திரம் என்ற மீனவர் ஆகியோரையும் சுட்டுக்கொன்றுவிட்டு வைத்தியசாலையை நோக்கி வந்து கொண்டிருந்தனர்.

அவர்கள் வைத்தியசாலைக்குள் வருவதைக்கண்டதும் அதற்குள் இருந்தவர்கள் ஓவென்று கதறியழத் தொடங்கிவிட்டனர்.



Scanned by CamScanner



Scanned by CamScanner









Scanned by CamScanner

இதே ஆண்டு ஜனவரி மாதம் 19ம் திகதி இந்திய இராணுவத்தினர்களில் நூற்றுக்கணக்கானோரின் மிலேச்சத்தனமான தாக்குதலில் வைத்தியசாலை டாக்டர்கள், ஊழியர்கள், நோயாளிகளையும், மற்றும் வல்வெட்டித்துறை, பொலிகண்டி ஆகிய பகுதிகளில் உள்ள பொதுமக்களில் நூற்றி அறுபத்தைந்துபேர்வரை சைக்கிள்செயின், உலக்கை, இரும்புக்கம்பி ஆகியவற்றால் மிகமோசமாகத் தாக்கப்பட்டும், சித்திரவதை செய்யப்பட்டும், வீதிகளிலும், வீடுகளிலும் போடப்பட்டிருந்த நிலைமையை மக்கள் மறந்திருக்கமாட்டார்கள். அந்தத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதால் கட்டில்கள் நிரம்பி வழிந்து, நடைபாதைகளில்கூட நோயாளிகள் படுக்க வைக்கப் பட்டிருந்தார்கள்.

ஜனவரி 20 ம் திகதி வைத்தியசாலைக்கு விஜயம் செய்திருந்த சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் டாக்டர் கனகசபை,

" நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு மோசமாகத் தாக்கப்பட்டிருக்கின்றனர். இதனைப்பார்த்தால், புகைவண்டி விபத்தின்பொழுது எப்படி நூற்றுக்கணக்கில் மக்கள் படுகாயத்திற்குள்ளாவார்களோ, அதேபோன்று இருக்கின்றது..."

என்று குறிப்பிடும் பொழுது அவர் இராணுவத்தினரின் இந்தச்செய்கையினால் மனம் புண்பட்ட நிலையில் இருந்தார்.

அந்தத் தாக்குதலை, அப்போது பொலிகண்டி இந்திய இராணுவ முகாம் பொறுப்பதிகாரியாக இருந்த கப்டன். பீ. கோபால கிருஷ்ண மேனனும், வல்வெட்டித்துறை இராணுவ முகாம் பொறுப்பதிகாரியாக இருந்த மேஜர் தினேஷ் கபூரும் சேர்ந்துதான் முன்னின்று நடத்தினார்கள் என்று சொன்னால் சிறிது கசப்பாகத்தான் இருக்கும். ஏனெனில், சாதாரண ஜவான்களைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்து சட்டத்தையும் ஒழுங்கையும் பேணவேண்டிய அதிகாரிகளே முன்னின்று நிராயுதபாணிகளான அப்பாவித் தமிழர்கள்மீது குண்டர்கள் போன்று சைக்கிள் செயின், கம்பு ஆகியவற்றைக் கொண்டு நடத்திய தாக்குதலுக்கு இந்தியாவின் தலைமைப்பீடத்தினால் என்ன நியாயத்தை கூறமுடியும்.? அன்று வல்வெட்டித்துறைப் பிரஜைகள் குழுப் பிரமுகர்கள் உடனடியாக யாக்கரை இராணுவ முகாம் பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டு நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்கள்.



Scanned by CamScanner


அன்று வைத்தியசாலைக்கு வருகைதந்து, காயம்பட்டவர்களையும், ஊனமாக்கப்பட்டவர்களையும் பார்வையிட்ட யாக்கரை முகாம் டெபுடி கமாண்டர் கேணல் அவுஜ்லா, அங்கு வைத்தியசாலையின் முன்னால் குழுமி நின்று இந்தியப்படையினரின் நடவடிக்கைகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்த மக்கள் முன்னிலையில்,

"எனது இராணுவத்தினர் நடந்துகொண்ட முறைக்காக நான் வெட்கப்படுகின்றேன். இது எனது இந்திய நாட்டையே அவமானப் படுத்துவதாக உள்ளது. இதுபோன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாது என்பதை உங்களுக்கு உறுதிப்படுத்துகின்றேன்........ அப்படி இனிமேலும் நடக்குமானால் நான் உங்கள் முன்னிலையில் வந்து நிற்கின்றேன்..... என்னைக் கல்லால் எறிந்து கொல்லுங்கள்....." என்று உணர்ச்சிவசப்பட்ட நிலையில் கண்ணீரின் மத்தியில் அந்தச்சீக்கிய கேணல் கூறியதும் எல்லோரும் தங்கள் துயரங்களையும் மறந்து ஆறுதலடைந்து கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

வைத்தியசாலையின் கடந்த காலத்தாக்குதல் நிகழ்வுகள், அன்றும் அங்கு தஞ்சம் புகுந்திருந்தவர்களின் மனதில் ஏதோ ஒரு அச்சத்தையும் நடுக்கத்தையும் ஏற்படுத்திக்கொண்டிருந்தது. அங்கு வந்த இராணுவத்தினர், வைத்தியசாலையைச் சுற்றிவரக் காவல்போட்டு, எவரையும் வெளியே செல்லவிடாது தடுத்துக் கொண்டிருந்தனர்.

குழந்தைகள் பசியால் வீரிட்டு அலறிக்கொண்டிருந்தன!


அங்கே இருந்தவர்களின் உதடுகள், தாகத்தினால் ஒட்டி உலர்ந்து போயிருந்தன!



பா.பிரேமராஜ்
6.9.69 - 2.8.89



க.தங்கராசா
60 வயது



பொ.காளிதாஸ்
4.6.63 - 2.8.89



ந.ரவீந்திரன்
3.9.58 - 2.8.89



Scanned by CamScanner

2.8.89 அன்று நடராஜா(60) அருள்ஜோதி (29) ஆகியோர் மகாலிங்கம் வீட்டில் சுட்டுக் கொல்லப்பட்டனர். பயத்தில் ஊரைக் காலி செய்துவிட்டு கோவிலில் தஞ்சம் புகுந்த மக்கள் 3 நாள் ஊரடங்குச் சட்டத்தின் பின் வீடுகளுக்குத் திரும்பினர். பெரும்பாலான ஆண்கள் கைது செய்யப்பட்டிருந்ததால் பெண்களே அழுகிய நிலையில் கிடந்த தம் உறவினர்களது சடலங்களை வீட்டு வளாகத்திலேயே கொளுத்தினர்.








திருமதி ராஜேஸ்வரி சுப்பிரமணியம் தனது மகன் ரகீதனுடன். இவரது கணவர் சுப்பிரமணியம் சுட்டுக்கொல்லப்பட்டார். மகன் அமுதன் அவரது கடையில் உயிருடன் கொழுத்தப்பட்டார்.



திருமதி. சிவநேசராசா தன் குழந்தைகளுடன் இறந்து போன கணவனை நினைத்து கதறி அழும் காட்சி.



Scanned by CamScanner

அதே நேரத்தில் வீடுகளில் இருந்தும், கோயில்களில் இருந்தும் பல இளைஞர்கள் இராணுவத்தினரால் கூட்டிவரப்பட்டனர். அவர்கள் வைத்தியசாலையின் முன்னால் உள்ள தார் ரோட்டில் உட்கார வைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களுடைய உடல் எங்கும்,அடிகாயங்களும் இரத்தக் காயங்களுமாக இருந்தன. குடிப்பதற்குத் தண்ணீர்கூடக் கொடுக்காது, நெடுநேரமாக, அன்று இரவு முழுக்க அந்தத் தார்ரோட்டிலேயே அவர்களை வைத்திருந்தார்கள்.

சூரியன் மெல்ல மெல்ல மேற்கே இறங்கிக்கொண்டிருந்தான்!

வல்வெட்டித்துறைச் சந்தியில் தடுத்து வைக்கப்பட்டவர்களும், காயப்பட்டு இருந்தவர்களும் அதே இடத்திலேயே நீண்ட நேரமாக வைக்கப்பட்டிருந்தனர்.

எவ்வித மருத்துவ உதவியுமின்றி, இரத்தம் ஓடிய நிலையில் மணிக்கணக்காக இருந்தவர்களை அந்த இராணுவத்தினரில் ஒருவனாவது ஏனென்றுகூடத் திரும்பிப்பார்க்கவில்லை.

இந்தப்படுகொலைகளையடுத்து பருத்தித்துறை மந்திகை வைத்தியசாலையில் சேவை செய்யும் பிரெஞ்சு வைத்தியர்குழு வல்வெட்டித்துறைக்கு வரமுயற்சித்த பொழுது, பொலிகண்டி இராணுவ முகாமைச் சேர்ந்தவர்களால் திருப்பி அனுப்பப்பட்டதால், அவர்களால்கூட அந்தக்காயப்பட்ட அப்பாவிமக்களுக்கு உதவி செய்ய முடியாது போய்விட்டது.

சந்தியில் நின்ற காரில் இருந்து சுட்டுக்கொல்லப்பட்ட பிரேம்ராஜ், சலவைத்தொழிலாளியான சிவபாக்கியம் ஆகியோரின் சடலங்களை, அங்கு இருந்தவர்களின் உதவியுடன் சந்தியில் இருந்து மேற்கே செல்லும் சிறிய சந்தினுள் கொண்டுபோய் வைக்கச் சொன்னார்கள். அதில் இருந்து சிறிது தூரத்தில் தங்கராஜா என்ற வயோதிபரின் சடலம் வெள்ளை வேட்டியினால் மூடப்பட்டு இருந்தது.

நேரம் பிற்பகல் 5.30 மணி!....... துப்பாக்கி வேட்டுக்களின் ஓசை படிப்படியாகக் குறைந்து கொண்டுவந்தது.

வல்வெட்டித்துறைச் சந்தியில் இருந்து 100 யார் தெற்கே



Scanned by CamScanner

உடுப்பிட்டி ரோட்டில் உள்ள தெணியம்பை என்ற இடத்தில் பல வீடுகள் எரிக்கப்பட்டுத் தீச்சுவாலை பரவிக்கொண்டிருந்தது.

அந்தத்தெருவில் உள்ள ரஞ்சனதாஸ், ஜெயராணி, தனபாலசிங்கம் சுவர்ணலதா ஆகியோரின் வீடுகள் எரிந்துகொண்டிருந்த நிலையில், இராணுவத்தினர் போய்விட்டதாக நினைத்து அந்த வீட்டுக்காரர்கள் தண்ணீரை ஊற்றி அணைக்க முயற்சித்துக்கொண்டிருந்தார்கள். அந்த நேரம் அவர்களுக்கு உதவி செய்வதற்காக, வல்வைப் பிரஜைகள் குழுவின் செயலாளரான நடராசா அனந்தராஜாவும் கூடச் சென்று தண்ணீரை ஊற்றிக்கொண்டிருந்தார்.

எவ்வளவுதான் நீரை ஊற்றிக்கொண்டிருந்தாலும் தீச்சுவாலையின் வேகம் குறைந்தபாடாக இல்லை.

அந்த நேரம் பார்த்து உடுப்பிட்டியில் இருந்து சுமார் 30 பேர்வரையிலான இந்திய இராணுவத்தினர் வல்வெட்டித்துறைச் சந்தியை நோக்கி நடைபவனியில் வந்து கொண்டிருந்தனர்.

அந்த வீடுகளின் கொழுந்து விட்டெரிந்த தீயை அணைத்துக்கொண்டிருந்த அனந்தராஜாவைத் தூரத்தே வந்துகொண்டிருந்த சீக்கிய இராணுவத்தினன் ஒருவன் கண்டுவிட்டான். அவனைக்கண்டதும் அவர் ஓட முயற்சிக்கவில்லை. இராணுவத்தினரைக் கண்டால் ஓடுவது ஆபத்து என்பதாலும், ஏற்கனவே பல இராணுவத்தினரும், அதிகாரிகளும் தெரிந்தவர்களாக இருந்ததாலும் அந்த இடத்தை விட்டு ஓட முயற்சிக்கவில்லை.

அருகில் வந்த அந்தச்சிப்பாய், அவரது கன்னத்தில் பலமாக ஓங்கி ஒரு அறை கொடுத்து நேரே தங்களுடன் வரும்படி கூறினான். அவர்கள், ஏற்கனவே தங்களுடன் மேலும் எட்டுப்பொதுமக்களையும் கூட்டி வந்து கொண்டிருந்தனர்.

அவர்களின் பின்னால் சுமார் 22 வயதுள்ள, உடுப்பிட்டி முகாமைச் சேர்ந்த கப்டன் பறீக் கடுகடுத்த முகத்துடன் நடந்து வந்துகொண்டிருந்தான். திரு ந. அனந்தராஜாவுக்கு ஏற்கனவே நன்கு அறிமுகமானவன்தான் கப்டன் பறீக். அந்த அறிமுகத்தினால், அவனுக்கு அருகில் சென்று பேச வாய் எடுத்ததும்,



Scanned by CamScanner










இந்திய இராணுவத்தினால் கண்மூடித்தனமான தாக்குதலுக்கு பலியான பொதுமக்கள்.

Scanned by CamScanner







இந்திய இராணுவத்தினால் கண்மூடித்தனமான
தாக்குதலுக்கு பலியான பொதுமக்கள்.



Scanned by CamScanner

"ஒன்றும் பேச வேண்டாம்!.... நேரே நடந்து போகலாம்....." என்று அவன் கூறிவிட்டுத் தன்னிடம் இருந்த ரைபிளை அவருக்கு நேரே பிடித்தான்.

அவனுடைய அந்தச் செய்கை, அவருக்குஏமாற்றத்தையும் அதிர்ச்சியையும்தான் கொடுத்தது.

சிங்கள இராணுவ அதிகாரிகளுக்கும், இவர்களுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை அப்பொழுதுதான் உணர்ந்தார்.

உள்ளூர் பிரஜைகள் குழுவின் செயலாளராகப் பணியாற்றுகின்ற ந.அனந்தராஜா, பருத்தித்துறைப் பாடசாலை ஒன்றின் முதல்வராகக் கடமையாற்றுகின்றார். அவரும், மற்றும் பிரஜைகள் குழுவின் தலைவர் திரு.எஸ். செல்வேந்திரா, திரு.இ. நடன சிகாமணி, திரு.அ.தில்லையம்பலம், திரு.பொ.யோகேந்திரன் ஆகியோரும் அந்தக்குழுவில் சேவையாற்றுகின்றார்கள். அவர்கள் இந்திய இராணுவத்தினருக்கும், மக்களுக்கும் இடையில் பாலமாக இருந்து வந்தனர்.

ஒரு தடவை பருத்தித்துறை இந்திய இராணுவமுகாமில் இருந்து இந்திய ஜவான் ஒருவரை, உயிருடன் தமிழீழ விடுதலைப் புலிகள் கைது செய்து கொண்டு போனதைத் தொடர்ந்து, அவரை மீட்டெடுப்பதற்காக, வடமாராட்சி எங்கும் ஆயிரக்கணக்கான இரானவத்தினரைக் கொண்டுவந்து சல்லடைபோட்டுத்தேடினார்கள். அவர்களால் அந்த ஜவானை மீட்க முடியவில்லை. இறுதியில், எதுவுமே முடியாத நிலையில், டெல்லிக்கு பதில் சொல்லவேண்டி வருமே என்று, தங்கள் கௌரவத்தையும், நான்காவது பெரிய வல்லரசின் மானத்தையும் காப்பாற்றுமாறு, வல்வெட்டித்துறைப் பிரஜைகள் குழுவினரிடம், அமைதிப்படையினர் வேண்டிக்கொண்டனர். அவர்களும், எப்படியோ தேடிப்பிடித்து புலிகளின் வடமாராட்சிப் பொறுப்பாளரான தீபன் என்பவருடன் தொடர்பு கொண்ட பொழுது, அவரும் அந்த ஜவானை விடுவிக்க இருப்பதாகத் தானாகவே கூறினார்.

இறுதியில் அந்த ஜவானை, உடுப்பிட்டி இராணுவ முகாம் பொறுப்பதிகாரியான கேணல் சர்மாவிடம் வல்வெட்டித்துறைப் பிரஜைகள் குழுவினர் கையளித்தனர்.

அந்த ஜவானைக் கையளிக்கும் பொழுது, புலிகளின் வடமாராட்சிப் பொறுப்பாளர், தீபன் குறிப்பிடுகையில்,



Scanned by CamScanner









Scanned by CamScanner





இந்திய இராணுவத்தினால் கண்மூடித்தனமான
தாக்குதலுக்கு பலியான பொதுமக்கள்,

Scanned by CamScanner




Scanned by CamScanner

"இந்திய மக்களை நாங்கள் நேசிக்கின்றோம். நாங்கள் இந்தியாவிற்கு எதிரானவர்கள் அல்லர். ஆனால் இந்திய அரசின் தவறான கொள்கையைத்தான் கண்டிக்கின்றோம். இந்த ஜவானை இதுவரை நாங்கள் எவ்வித தீங்குமின்றி எங்களுடைய சகோதரன் போலவே வைத்திருந்தோம். இந்திய மக்களுடனான எங்கள் நல்லெண்ணத்தைக் காட்டவே இவரை விடுதலை செய்கின்றோம்." என்று பெருந்தன்மையுடன் கூறிக்கொண்டே கையளித்தார். இப்படியான ஒரு நல்ல உறவை வளர்ப்பதற்கு, இந்திய அமைதிப்படையுடன் ஒத்துழைத்த பிரஜைகள் குழுவின் செயலாளரையே, கைது செய்து கொண்டுபோனபோது, இந்தியாவுக்கு...... அதன் தார்மீகக் கொள்ளைகளுக்கு எதிர்காலத்தில் மிகப்பெரிய ஒரு களங்கம் ஏற்படப்போகின்றது என்பதை உணராதவனாகக் கப்டன் பரீக் நடந்து கொண்டிருந்தான்.


வல்வெட்டித்துறை ஜங்ஷனின் ஏற்கனவே தடுத்துவைக்கப்பட்ட சுமார் 50 பேரையும் வரிசையாக நிறுத்தி அவர்களில் இருந்து 34 பேரை உடுப்பிட்டியை நோக்கிப் போகுமாறு பணித்துவிட்டு, அங்கு நின்ற இராணுவ வாகனம் ஒன்றில் சிறிது காயம்பட்ட நிலையில் இருந்த அ. மதிவர்ணன், ஆ. பரம்சோதி என்ற இரு மாணவர்களையும் ஏற்றினார்கள்.

ஏனையவர்களை வீடுகளுக்குப் போக அனுமதித்த இந்தியப்படையினர் மற்றைய 34 பேரையும் வரிசையாக முன்னே நடக்கவிட்டு அவர்களுக்குக் காவலாக இருபக்கங்களிலும் தானியங்கி ரைபிள்களை நீட்டிப்பிடித்தபடி நடந்துகொண்டிருந்தனர்.


அவர்களின் பின்னால் சென்று கொண்டிருந்த கப்டன் பரீக், அனந்தராஜாவைக் கூட்டிக்கொண்டு நடந்தான். உடுப்பிட்டி இராணுவ முகாம் நெருங்கியதும், பொறுப்பதிகாரி கேணல் சர்மாவிடம் கூட்டிச் செல்லாது, பின்புறமாக உள்ள சேர்ச் வழியாக அவ[illegible]யும், மற்றையவர்களையும் கொண்டு சென்றான். ஒரு திறந்த வகு[illegible]க் கட்டிடத்தினுள், விடுதலைப்புலிகளுடனான மோதலில் இ[illegible]த




ந. பானுகோபால
3.1.66 - 2.8.89



க. சிவனேசராஜா
36 வயது



வி. அருள்ஜோதி
3.3.60 - 2.8.89



த. சாம்பசிவம்
16.10.71 - 2.8.89



Scanned by CamScanner

இராணுவத்தினரின் சடலங்கள் எரிந்து கொண்டிருந்தன.

அங்கே நூற்றுக்கணக்கான ஜவான்கள் நின்றனர். அவர்களில் முன்னர் பொலிகண்டி இராணுவ முகாமில் இருந்த கப்டன் கோபால கிருஷ்ணமேனன், முகத்தில் கோபக்கனல் தெறிக்க நின்றான்.

அவனின் முகத்தில் பொதுவாகவே, புன்முறுவலைக் காண்பது அரிது.... அன்றோ அவனது முகம் இன்னும் கடுகடுப்பாக இருந்தது. அவனுடன், கப்டன் சுக்ளா, கப்டன் சிகாரி, கப்டன் டாக்டர் சௌத்ரி ஆகியோரும் நின்றனர்.

அங்கு கொண்டுவரப்பட்ட, அந்த அப்பாவிப் பொதுமக்களை ஒவ்வொருவராகப் பிடித்துத் தனது பூட்ஸ் காலினால் உதைத்தும், கன்னத்தில் அடித்தும் ஒரு அறைக்குள் அனுப்பிக்கொண்டிருந்தான். அந்த அறையின் வாசலில், குண்டர்கள்போல், ஆறு ஏழு சீக்கியர்கள் உருளைக் கம்புகளினால், அடித்தும் குத்தியும் ஒவ்வொருவராக அனுப்பிக்கொண்டிருந்தார்கள்.

அந்த அறை முழுவதும் ''ஐயோ!....அம்மா!'' என்ற அவலக்குரல்கள், அந்தப்பிரதேசத்தையே அதிரவைத்துக் கொண்டிருந்தன.

அதற்கு அடுத்த சுவரை அடுத்துள்ள, கூடாரத்தின் கீழ் இருந்த கேணல் சர்மா எதுவுமே தெரியாதவர்போல், யாருடனோ டெலிபோனில் பேசிக்கொண்டிருந்தார்.

ஒரு இராணுவ முகாமில் நடைபெறுகின்ற ஒவ்வொரு விஷயமும், அந்த முகாம் பொறுப்பதிகாரி தெரிந்திருக்கவேண்டும், அல்லது அவரது உதவி இராணுவ அதிகாரிகள், அவரது கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும்.

இவை இரண்டுமே இல்லாவிட்டால் அவர்களை ஒரு கட்டுக்கோப்பான இராணுவம் என்று எப்படி அழைக்க முடியும்?

கேணல் சர்மா, தனக்கு எதுவுமே தெரியாது என்று சொல்வது மிகவும் வேடிக்கை!

உலகின் 4வது பெரிய இராணுவம், இப்படியா செயல்படுகிறது? அங்கிருந்த 34 அப்பாவிகளையும், அந்த அறையினுள் தள்ளிவிட்டு, தமது வழமையான சித்திரவதைப் பரிசோதனைகளை நடத்திக் கொண்டிருந்தனர்.



Scanned by CamScanner








Scanned by CamScanner







Scanned by CamScanner

அவர்களுடைய நவீன, இஸ்ரேல் மொசாட் படையினரையும் மிஞ்சும், சில சித்திரவதைகள் நம்பமுடியாமல்கூட இருக்கலாம். ஆனால் அதில் இருந்து தப்பிவந்தவர்கள் கூறும் கண்ணீர்க் காவியங்களோ ஏராளம்.

ஆண் உறுப்பில் மின்சாரத்தை செலுத்துவது!.....

ஆள் அளவு குழி தோண்டி, அதனுள் நிற்கவைத்து கழுத்துவரை மண்ணால் மூடிவிட்டு இரண்டு, மூன்று நாட்கள் வரை நீர் கூட இல்லாது விடுவது!.....

தலை கீழாகத் தொங்கக் கட்டிவிட்டு, காய்ந்த மிளகாய்ப் புகை பிடிப்பது!....

கைகளையும், கால்களையும் நைலோன் கயிற்றினால் கட்டி விட்டு வாயினுள்ளும், மூக்கினுள்ளும் தொடர்ச்சியாகத் தண்ணீரை விடுவது!....

நான்கு, ஐந்து பேரை ஒன்றாகப் பிணைத்துக் அவர்களது கண்களைக் கட்டிவிட்டு ஓடவிடுவது, ஓடி விழுந்தால் அடி போடுவது!....

சித்திரவதை செய்வதற்கென்றே தாம் பயிற்றுவிக்கப்பட்டதாக கப்டன் சுக்ளாவும், கப்டன் சிகாரியும் சொன்னதைப் பார்த்த அனந்தராஜாவினால் அவர்களது அழுகுரலைக் கேட்டதும் நெஞ்சே வெடிப்பதுபோல் இருந்தது.

கப்டன் மேனன், சற்றுத்தள்ளி அங்கிருந்த மாகோசா மரத்தின் கீழ் பதட்டத்துடன் நின்று கொண்டிருந்த செயலர் அனந்தராஜாவிடம் வந்து,

"மிஸ்டர் அனந்தராஜா!.... உங்கடை புலிகள் எங்களுடைய ஜவான்கள் ஒன்பதுபேரைக் கொன்று விட்டார்கள் பாருங்கள்.."

என்று சொல்லியபடி, எரிந்து கொண்டிருந்த சடலங்களைக் காட்டினான்.

"எங்களை யார் என்று அவர்களுக்குக் காட்டுகின்றோம்..... ஜனவரி 19ம் திகதி என்ன நடந்தது? எனக்கு எதிராக முறைப்பாடு செய்து,



Scanned by CamScanner

என்னை அவமானப்படுத்துனீர்கள்.... இப்போ உங்களையும், உங்களுடைய ஊரையும் என்ன செய்கிறோம் பாருங்கள்....."

அவன் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிப்பதுபோல் இருந்தது. திடீரென அவனுக்கு என்ன வந்ததோ தெரியவில்லை, அவருடைய கழுத்தைப்பிடித்து, அந்த அறைக்குள்ளேயே தள்ளிவிட்டான்.

அவன், இரகசியமாகச் சைகை செய்திருக்க வேண்டும்...........

அந்த அறையினுள் தள்ளப்பட்டதும், அங்கிருந்த ஜவான்கள், மற்றவர்களைத் தாக்குவதை நிறுத்தினார்கள்.

அங்கே நின்ற நான்கு சீக்கிய இராணுவத்தினர் ஆனந்தராஜாவை சூழ்ந்து நின்று உருளைக் கம்புகளினால் மாறி, மாறித் தாக்கத் தொடங்கினார்கள்.


அவரது பாடசாலையில் படித்துக் கொண்டிருக்கும், மாணவர்கள், முன்னிலையில் மோசமாகத் தாக்கப்பட்டார்! தலையில் இருந்து இரத்தம் ஆறாக ஓடிக்கொண்டிருந்தது. முகத்தில் ஆழமான கண்டல் காயங்கள் ஏற்பட்டன.

இறுதியில் அவரை கீழே விழுத்திவிட்டு, அவருடைய தொண்டையின்மேல், ஒரு மரக்கட்டையை அழுத்திவைத்து ஒரு சீக்கியச்சிப்பாய் அந்தக் கட்டையின்மேல் ஏறிநின்றான்.

இறக்கப்போவதை உணர்ந்துவிட்ட நிலையில், தனது பலம் கொண்ட மட்டும் அவனைப்பிடித்துத்தள்ளியதும், ஆத்திரம் கொண்ட அந்தச்சிப்பாய் அவருடைய தலையிலும், முதுகிலும் மாறி மாறி அடித்தான்.




ப.ராஜலஷ்மி
3.10.64 - 2.8.89



செ.சிவமணி
18.3.57 - 2.8.89



க.உமாசங்கர்
30.8.66 - 3.8.89



ஏ.ராமச்சந்திரன்
7.2.48 - 2.8.89



Scanned by CamScanner

அதைத் தொடர்ந்து மூச்சுத்திணறி மயங்கி விழுந்ததும், இறந்துவிட்டதாகக் கருதியோ, என்னவோ அந்தச்சிப்பாய்க் கும்பல் விலகிச் சென்றது.

அப்பொழுது அவருடன் கைதுசெய்யப்பட்டுப் பின்னர் 20 நாட்களின் பின்னர் விடுதலை செய்யப்பட்ட அவருடைய மாணவனான, சத்தியமூர்த்தி பாலமுகுந்தன் அந்தச்சம்பவம் பற்றி கூறுகையில்,

"எங்களுக்கு அன்று விழுந்த அடியினால் வேதனையில் துடித்துக்கொண்டிருந்தபொழுது, சாரைக் கொண்டு வந்து அடிக்கத் தொடங்கியதும், எங்களை அடிப்பதை விட்டுவிட்டார்கள்.....சேர்! இப்படி உயிரோடு இருப்பார் என்று நாங்கள் நினைக்கவேயில்லை..."

என்று வியப்புடன் கூறித் தனது வாக்கு மூலத்தைச் சத்தியக்கடதாசியாகவும், (பிரமாண வாக்கு மூலமாகவும்) பதிவு செய்தான்.

சிறிது நேரத்தில், இராணுவ வைத்திய அதிகாரி கப்டன் சௌத்திரி, அங்கு வந்து வேறு இரண்டு ஜவான்கள் மூலம், மயங்கிக் கிடந்த அனந்தராஜாவை இராணுவ வைத்திய சாலைக்குக் கொண்டுபோய்ச் சேர்த்தார்.

அவரை வெளியே கொண்டு சென்றதும், அங்கிருந்தவர்களை, இரண்டு பிரிவுகளாகப் பிரித்து வெவ்வேறு அறைகளில் விட்டு இரும்புக் கம்பிகளினாலும், மரக்கட்டைகளினாலும் மீண்டும் தாக்கத்தொடங்கினார்கள்.

அந்த இரவின் அமைதியில், எழுந்த மரண ஓலங்கள், அந்த உடுப்பிட்டி கிராமத்தையே அதிரவைத்துக் கொண்டிருந்தது.!

நாய்கள் ஊளையிட்டுக்கொண்டிருந்தன!... ஆந்தைகள் அலறிக்கொண்டிருந்தன!... ஆனால்,

அந்த அப்பாவிகளின் மரண ஓலங்கள் மட்டும் ஓயவில்லை.....

மெல்ல, மெல்ல இரவின் மடியில் அந்த நகரம் மூழ்கிக்கொண்டிருந்தது.

ஆகஸ்ட் திங்கள் 3ம் நாள்....................



Scanned by CamScanner

அன்று,

அதிகாலையிலேயே பொழுது விடிந்து விட்டது போன்ற உணர்வில், மக்கள் பயத்தின் மத்தியில் விடிவை நோக்கி விழித்துக் கொண்டிருந்தனர்.

காலை ஏழு மணியில் இருந்தே ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் வல்வெட்டித்துறை நகரை முற்றுகையிடத் தொடங்கிவிட்டனர்.

அன்றும், நகரின் நாலா புறத்தில் இருந்தும், இராணுவத்தினர் ஒவ்வொருவீடாகச் சோதனையிடத் தொடங்கிவிட்டனர்.

பொலிகண்டியில் இருந்து, மானாங்கனை என்ற இடத்தில் உள்ள உதவி அரசாங்க அதிபர் சாலையின் ஊடாக வந்த இராணுவத்தினரில் ஆறுபேர், சோமசுந்தரம் இராஜேஸ்வரியின் வீட்டிற்குள் நுழைந்தார்கள்.

"எல்.ரீ.ரீ.ஈ இருக்கா?" அவர்கள் வடக்கு கிழக்கில் எந்த வீட்டினுள் போனாலும் கேட்கின்ற வழமையான கேள்விதான் இது.
அந்த வீட்டினுள் நுழைந்ததும் அவர்களில் ஒருவன் வாசலில் நின்ற 60 வயதுடைய இராஜேஸ்வரிக்கும், அவரது மகள் தனலட்சுமிக்கும் கன்னத்தில் மாறி மாறி அடித்தார்கள்.

இன்னுமொரு சிப்பாய்,

"எங்கே தம்பி?" என்று கேட்டுக்கொண்டே பின்புறம் உள்ள சமையல் அறைக்குள் போனான். அங்கே, பயத்தினால் நடுங்கிக்கொண்டிருந்த 19 வயது மாணவர்களான அருட்பிரகாசம் சுவர்ணதாஸ், குமாரவேல் செல்வானந்தவேல் என்பவர்களைக் கண்டதும் அவர்களின் தலைமயிரைப் பிடித்து இழுத்துக்கொண்டு வெளியே வந்தான். சுவணதாஸ் வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்திலும், செல்வானந்தவேல் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியிலும் படித்துக்கொண்டிருக்கின்றார்கள்.

செல்வானந்தவேலின் வீடு, தீருவில் தெருவில் இருக்கின்றது. முதல் நாள் பிரச்சனையினால், பயந்துபோய் இங்குவந்து தங்கி இருந்தான்.

சம்பவம் நடந்த இடத்தில் இருந்து ஒன்றரைக்கிலோமீற்றர்



Scanned by CamScanner





Scanned by CamScanner

தூரத்தில் உள்ள இந்த இடத்திற்கு இராணுவம் வருமென்று அவன் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை.

சுவர்ணதாஸ், வெற்றிலைக்கேணியில் இருந்து தனது பாட்டிவீட்டிற்கு வந்து இருந்தவன்.

அந்த இரு மாணவர்களையும், வெளியே இழுத்து, அவர்கள் இருவரதும் கைகளை நைலோன் கயிற்றினால் கட்டி தெரு வழியே இழுத்துக்கொண்டு போனார்கள்.

அவர்களின் பின்னால் தள்ளாடும் வயதில் சுவர்ணதாசின் பாட்டி இராஜேஸ்வரி அம்மாள் அழுதுகொண்டு பின்தொடர துப்பாக்கியின் கைப்பிடியினால் ஓங்கி, அவருடைய தோள்பட்டையில் அடித்தான்.

அந்த அடியின் வேதனையை, கிழவியினால் தாங்க முடியவில்லை... அதற்குமேல் அவளால் ஒரு அடிகூட நகரமுடியவில்லை. அப்படியே தரையில் விழுந்து விட்டாள்.

அந்த இளம் மாணவர்களின் அலறல், அந்தச் சாலையெங்கும் எதிரொலித்தது!

தமிழ் ஈழத்தில் தமிழ்க்குழந்தைகளாகப் பிறந்ததற்காக இப்படியா தண்டனை அனுபவிக்க வேண்டும்?

அவர்களை அப்படியே கட்டி இழுத்துக்கொண்டு சென்று, கடற்கரையோரமாக உள்ள ஊறணி அரசினர் வைத்தியசாலைக்குச் சற்று எதிர்ப்புறமாக உள்ள 'தீர்த்தக் கடற்கரை'க்கு முன்னால் படுக்க வைத்து கத்தியினால் நெஞ்சிலும், தலையிலும் குத்திக் காயத்தை ஏற்படுத்தினார்கள்.

உடலில் இருந்து குருதி பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருக்கின்ற நிலையிலும் அந்த இரு சிறுவர்களும்,

"எங்களை ஒன்றும் செய்யாதீர்கள்!... நாங்கள் உண்மையிலேயே அப்பாவிகள்....... படித்துக்கொண்டிருக்கின்றோம்...."

ஈனஸ்வரத்தில் அழுது புலம்பிக்கொண்டிருக்கும் பொழுதே, ஒரு சிப்பாய் அவர்களுக்கு மிக அருகில் நெருங்கி அவர்களைக் குறிவைத்துத்



Scanned by CamScanner

துப்பாக்கியின் விசையைத் தட்டிவிட்டான்.

அவ்வளவுதான்!

"ஐயோ!... அம்மா!...." என்று வானமே அதிரும் வண்ணம் ஒலித்தகுரலைத் தொடர்ந்து அந்த இரு சிறுவர்களும் இரத்த வெள்ளத்தில் மிதந்தனர்.

இந்தப்படுகொலையைப் பற்றி, நான்கு நாட்களின் பின் சுவர்ணதாசின் மாமி, குறிப்பிடும் பொழுது,


"வெற்றிலைக்கேணியில் இருந்து பாதுகாப்பான இடம் என்று இங்கே வந்திருந்த நேரத்தில் அவனை இப்படி அநியாயமாகக் குத்தியும், சுட்டுப்போட்டுப் போயிற்றாங்களே!... அவனுடைய தாய்க்கு என்ன ஆறுதலைத்தான் சொல்லப் போகிறோமோ?....

என்று தலையில் அடித்து அழுதுகொண்டே, அவனுடைய சேட் பக்கெற்றினுள் இருந்து எடுத்த தேசிய அடையாள அட்டையைக் காட்டினார்.

அந்த அடையாள அட்டையில், அவனுடைய நிழல் படத்திற்கு நேரே (போட்டோ) கத்திக்குத்தினால் ஏற்பட்ட துவாரமும், இரத்தமும் காணப்பட்டது.

இருவரையும் சுட்டுப்போட்ட அதே நேரத்தில் ஐம்பதுக்கும் அதிகமானவர்களை, வைத்தியசாலையின் முன்னால் உள்ள தார் ரோட்டில் இருக்க வைத்திருந்தார்கள். இவர்களில் பாதிப்பேர், முதல் நாள் பிடித்துக்கொண்டு வரப்பட்டவர்கள்.

"இங்கே பாருங்கள்!..... அவங்களைப்போல்தான் உங்களையும் வெட்டிப்போடப்போகிறோம்....."



பா.மகேந்திரதாஸ்
25.10.73-03.08.89



பொ.ராஜேந்திரன்
23.04.67-02.08.89



இ.புஷ்பாராணி
30.10.44-02.08.89



த.ஜெயமோகன்
02.03.70-02.08.89



Scanned by CamScanner

அங்கு நின்ற ஒரு சீக்கியச்சிப்பாய், பெருத்த அட்டகாசத்துடன் கருவிக்கொண்டிருந்தான். அவன் அப்படிச் சொன்ன அதே கையோடு, அந்தக் கூட்டத்தில் இருந்து எழுந்தமானமாக, ஆறுபேரைப் பிடித்து இழுத்துக்கொண்டுபோய்ச் சுடுவதற்கு ஆயத்தப்படுத்தினான். அப்பொழுது தூரத்தே வல்வெட்டித்துறைப் பக்கத்தில் இருந்து ஒரு இராணுவ ஜீப் வண்டி வருவதைக் கண்டதும், அவனுடைய கவனம் திசைதிருப்பப் பட்டதால், அவன் அங்கிருந்து விலகிச்சென்றான்.

அந்த ஜீப் வண்டியில் இருந்து சுமார் ஆறு, இராணுவ பொலிசார் இறங்கினார்கள்.

அதில் இருந்து இறங்கிய ஒருவனுடைய உத்தரவைத் தொடர்ந்து, அங்கு ஏற்கனவே நின்ற இராணுவத்தினர் ஜங்ஷனை நோக்கி நடக்கத்தொடங்கினார்கள். அப்பொழுதுதான் அங்கிருந்தவர் களுக்கு போன உயிர் திரும்பி வந்தது.

இந்தச்சம்பவம் நடந்து கொண்டிருந்த அதே நேரத்தில், வல்வெட்டித்துறை ஜங்ஷனுக்கும், ஊறணிக்கும் இடையில் உள்ள கொத்தியால், காட்டுவளவு ஆகிய சந்துகளில் பல நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் சல்லடை போட்டுத் தேடிக்கொண்டிருந்தனர்.

அங்கு ஒரு மரணவீட்டில், துக்கம் கொண்டாடுவதற்காக இருந்த ஆண்கள் அனைவரையும் வயது வேறுபாடின்றி வெளியே இழுத்துவந்து வரிசையாக நிற்கவைத்தார்கள்.

"நீங்கள் எல்லாரும் எல்.ரீ.ரீ.ஈ உங்கள் எல்லாரையும் சுட வேணும்...." அங்கு நின்ற சிப்பாய் வெறிபிடித்தவன்போல் கத்தினான். அங்கே சா வீட்டில் இருந்த பெண்கள் எல்லோரும் வெளியே ஓடிவந்து, மூர்க்கத்தனமாக நின்று கொண்டிருந்த சிப்பாய்களின் காலில் விழுந்து அழுதார்கள்.

கருங்கல்லை இளக வைக்கலாம், இந்தக்கயவர்களை இளகவைக்கமுடியுமா?

அந்த இராணுவத்தினர், தாங்கள் கைது செய்தவர்களை இழுத்துக்கொண்டு ஜங்ஷனை நோக்கி நடந்தார்கள். அவர்களின் பின்னால், அழுது கூக்குரலிட்டுக்கொண்டே ஓடி வந்த பெண்களைச் சப்பாத்துக்காலினாலும், ரைபிள் பிடியினாலும் ஓங்கி அடித்தார்கள். அந்தச்



Scanned by CamScanner

சிப்பாய்களில் ஒருவன், தனது கையில் உள்ள ரைபிளினால் குறிவைத்துக்கொண்டு நின்றதும், அந்தப்பெண்களின் வேகம் தடைப்பட்டது.

அவர்களுடன் சுமார் முப்பது பொதுமக்கள்வரை, கூட்டிச்செல்லப்பட்டனர்.

வல்வெட்டித்துறை ஜங்ஷனை அடைந்ததும், அவர்களை நடுச்சந்தியில் உள்ள தார்ரோட்டில் இருக்க வைத்தார்கள்.

முதல்நாள் சுடப்பட்டவர்களின் சடலங்கள் ஊதிப்பொருமல் அடைந்துபோய் இருந்தன.

சில நிமிடங்களில் ஒரு சிப்பாய், அவர்களுக்கு அருகில் வந்து, அங்கிருந்தவர்களில் சிலருடைய மயிரைப் பிடித்துத் தூக்கி இழுத்துக் கொண்டுபோய்ச் சந்தியின் எதிர்ப்புறமாக உள்ள எரிந்த கடை ஒன்றின் முன்னால் நிற்க வைத்தான்.

அங்கிருந்தவர்களின் முகங்கள் பேயறைந்ததுபோல் இருந்தன; கண்கள் இமைக்க மறுத்தன..... என்ன நடக்குமோ என்ற ஏக்கம் எல்லோரையும் கதிகலங்க வைத்துக் கொண்டிருந்தது.

எதுவுமே நடந்துவிடக்கூடாது என்று நினைத்துப் பார்ப்பதற்கு முன்னரே, அங்கு நின்ற ஜவான் ஒருவன், அந்த ஆறுபேரையும் 'படபட' வென்று சுட்டுத்தள்ளிவிட்டுத் தன்கையில் வைத்திருந்த செலவ் லோடிங் ரைபிளை (SLR) திருப்பிக் கொண்டு அப்பால் சென்று கொண்டிருந்தான்.

அவர்கள், அந்த ஒரு கணத்திலேயே விழுந்து கால்களைத் தரையுடன் அடித்துத் துடித்துக் கொண்டிருந்தார்கள்.

ஆண்டவன்கூட சில வேளைகளில், பாராமுகமாக இருந்து விடுகின்றானோ என்னவோ, அந்தச்சொற்ப நேரத்திற்குள் அவர்கள் பட்ட அவஸ்தையை வெறும் வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாது.

ஆம்!... அவர்களுடைய மரண அவஸ்தையைத் தொடர்ந்து, அந்த ஆறு மனிதர்களின் உயிரும் சிறிது சிறிதாகப் போய்க் கொண்டிருந்தது.

Scanned by CamScanner





Scanned by CamScanner

அந்தக் கோரக்கொலையில், 28 வயதான தணிகாசலம் இரவிச்சந்திரன், ஓய்வுபெற்ற வைத்தியசாலை ஊழியர் செல்லக்கதிரமலை மயில் வாகனம், 17 வயதுடைய சுந்தரமூர்த்தி உமா சங்கர், 29 வயதான பருத்தித்துறை வர்த்தகர் ஆர். நவரட்ணம், இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தில் வேலைபார்க்கும் 29 வயதுடைய த. நாகதாஸ், அவரது மைத்துனர் பா. மகேந்திரதாஸ் இவர் சிதம்பராக் கல்லூரியில் ஒன்பதாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார்.

இவர்கள் அந்த இடத்திலேயே, அவர்களுடைய உறவினர்கள் பார்த்துக்கொண்டிருக்க துடிதுடித்து இறந்தார்கள்.

இப்படியே அன்று முழுவதும் எங்கும் ஒரே துப்பாக்கி வேட்டுக்களும், செல் தாக்குதல்களுமாகவே இருந்தன!....

எரிக்கப்படாத வீடுகள், மேலும் எரிந்து சாம்பராகிக் கொண்டிருந்தன!

கடற்கரையோரமாகக் கட்டி விடப்பட்டிருந்த பிளாஸ்டிக் படகுகளும், இழுவைப்படகுகளும் வெளி இணைப்பு இயந்திரங்களும், வீடுகளிலும், கடற்கரைகளிலும் போடப்பட்டிருந்த நூற்றுக்கணக்கான மீன்பிடி வலைகளும் எரிந்து சாம்பாராகின.

வல்வெட்டித்துறை இராணுவ முகாமில் இருந்து சில கஜம் தூரத்தில் உள்ள பூச்சிபுத்தான் என்ற இடத்தில் இந்திரன் என்பவரின் கோழிப் பண்ணையில் இருந்த 500 கோழிகளும் எரிந்து கருகிப்போய் இருந்தன.

எரிப்பதற்கென்றே ஈழத்திற்கு வந்தார்களோ என்று நினைக்கக்கூடிய வகையில், இந்திய அமைதிப்படையினரின் செயல்கள் அமைந்திருந்தன.

அன்று பிற்பகல்-

வல்வெட்டி கோவில் பிள்ளையார் தேவஸ்தானம் அந்த ஊரில் இருந்து சிறிது ஒதுக்குப்புறமாக, அமைதியான சூழலில் அமைந்துள்ள கோயில்.

பொதுவாக எந்தப் பிரச்சனை ஏற்பட்டாலும், அங்கேதான் வந்து தஞ்சம் அடைவார்கள்.

அன்றும்,



Scanned by CamScanner

சுமார் 400 பேர் வரையில் அந்த ஆலயத்தினுள் தஞ்சம் புகுந்திருந்தனர். கோயிலின் முகப்பில் உள்ள சிறிய சந்தினூடாக இராணுவத்தினர் வந்துகொண்டிருந்தனர். அவர்கள் வருவதைக் கண்டதும் அங்கிருந்தவர்கள் எல்லோரும், பயந்து துடித்தனர்

"பிள்ளையாரே!.... கணபதியே!.... விநாயகரே!.... மூஷிகவாகனனே!....

கணபதியின் அத்தனை நாமங்களும் அங்கு உச்சாடனம் செய்யப்பட்டன.

அவ்வளவு மக்களையும் கண்டதும், அந்தச் சந்தினூடாகப் போய்க்கொண்டிருந்தவர்களுக்கு சன்னதம் வந்ததோ, என்னவோ அவ்வளவு பேரும் அப்படியே கோயிலுக்குள் வந்தார்கள்.


சாராய நெடி!

பூட்ஸ் கால்கள்!!

அவ்வளவும் சீக்கிய இராணுவத்தினரே. அவர்கள் இந்துக்களாக இருந்திருந்தால், நிச்சயமாக அந்த நிலையில் கோயிலுக்குள் நுழைந்திருக்க மாட்டார்கள்.

உள்ளே நுழைந்த சீக்கியர்களின், கண்களில் முதல்பட்டவர் கோயில் அர்ச்சகர்தான். வல்வை முத்துமாரியம்மன் தேவஸ்தான பிரதம குரு தண்டபாணி தேசிகரின் மகனும், வேவில் விநாயகர் தேவஸ்த்தானத்தின் பிரதம குரு வேதாராணியக் குருக்களின் மகனும் அந்த வெறிகொண்ட சீக்கியச்சிப்பாய்களினால் மோசமாகக் கோயிலில் வைத்தே தாக்கப்பட்டனர்.

ஆலயத்தின் பலி பீடத்தின் பாதங்களில் ஏறி நின்றார்கள்! இந்து ஆலயம் ஒன்றினுள் நுழைந்த அந்தச் சீக்கிய இராணுவக்கும்பல்,


அ.சுவர்ணதாஸ்
20.03.71-03.08.89


கு.செல்வாநந்தவேல்
24.04.71 - 03.08.98


இ.யவன்ராஜ்
16.02.76-02.08.89


நா. பவபிருந்தா
15 வயது



Scanned by CamScanner

அந்த ஆலயத்தின் புனிதத்தையே அழித்துக்கொண்டிருந்தன.

இந்திரா காந்தி அம்மையார், பாரதத்தின் பிரதமராக இருந்தபொழுது அமிர்தசரஸ் பொற்கோயில் சீக்கியத் தீவிரவாதிகளின் குகையாக இருந்தது. ஆனால் தமிழீழப் போராளிகளினால் ஒரு போதும், எந்த ஆலயமும் பதுங்கும் இடமாகவோ, தாக்கும் இடமாகவோ பயன்படுத்தப்படவில்லை.

பொற்கோயிலினுள் பயங்கரமான ஆயுதங்களைப் பதுக்கிவைத்தும், மறைந்தும் இருந்த சீக்கியத் தீவிரவாதிகளைத் தாக்கி அழிப்பதற்கு இந்துக்களை கொண்ட இராணுவ அணியொன்றை அனுப்பியே அங்கு மறைந்திருந்த சீக்கியத் தீவிரவாதிகளை சுட்டுக்கொன்றும், அவர்களுடைய பெருந் தொகையான ஆயுதங்களைக் கைப்பற்றியும் வெற்றிவாகை சூடினார்கள். மெட்ராஸ் ரெஜிமன்ற்றின் இத்தாக்குதலுக்கு ஜெனரல் சுந்தர்ஜி என்ற இந்துவே, தலைமை வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அதற்குப் பழிவாங்கும் நடவடிக்கையோ என்னவோ ஈழத்தின் பல இந்து ஆலயங்களைச் சேதமாக்கியும், அதன் புனிதத்தையும் அழித்து வருகின்றனர்.

அந்தக் கோயிலில் இருந்த இளைஞர்களை அடித்து, அடித்துச்சந்திக்குக் கூட்டிவந்தார்கள். அதே நேரத்தில் ஊறணி வைத்திய சாலையின் முன்னால் பிடித்து வைத்திருந்தவர்களையும் அங்கே கூட்டி வந்தார்கள்.

ஜங்ஷனில் இருந்து அத்தனைபேரையும், கொதிக்கும் தார்ரோட்டில், உருண்டு கொண்டே உடுப்பிட்டி அமைதிப்படை முகாமை நோக்கிச் செல்லுமாறு பணித்தனர். அவர்கள் உருண்டு கொண்டிருக்கும்பொழுதே பெரிய மரக்கட்டைகளினால் அடித்துக் கொண்டே சென்றார்கள்.

இதுபற்றி கண்டி பல்கலைக்கழக எஞ்சினியரிங் மாணவரான மோகன் விபரிக்கையில்

" தார் றோட்டின் சூடு ஒரு புறம் உடலைத்தாக்க அவர்களின் அடியோ அதைவிட மோசமாக இருந்தது. 3 கிலோமீற்றர் தூரம் வரை அடித்துக்கொண்டே வர உருண்டு கொண்டிருந்தோம். சாலை ஓரங்களில் உள்ள மரங்களின் தடித்த கிளைகளை வெட்டி எடுத்து எங்களை அடிப்பதற்குப் பயன்படுத்தினார்கள்...."

Scanned by CamScanner

சிப்பாய்களின் அட்டூழியங்களைக் கட்டுப்படுத்த வேண்டிய அதிகாரிகளே, அவர்களை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தனர்.

ஆகஸ்ட் 3ம் திகதி காலையில் உடுப்பிட்டி இராணுவ முகாமில் நடைபெற்ற சம்பவங்களோ வேடிக்கையாகவும், வேதனையாகவும் இருந்தது.

காலை 6.30 மணியளவில், வைத்திய சாலைக்கட்டிலில் படுத்திருந்த அணந்தராஜாவிடம், டாக்டர் கப்டன் சௌத்திரி, உடல் நலத்தை விசாரிப்பதுபோல் வந்தார். முதல் நாள் இரவு பட்ட வேதனைகளின் தாக்கமோ, என்னவோ, கட்டிலில் படுத்திருந்தபடியே டாக்டருடன் கதைத்துக் கொண்டிருந்தார்.

தலையில் ஏற்பட்ட காயத்திற்கு மருந்து போடப்பட்டு பிலாஸ்ரர் ஒட்டப்பட்டிருந்தது. முகம் சிறிது பொருமல் அடைந்து வீங்கி இருந்தது. வலது கன்னத்தில் ஆழமான காயம் இருந்ததால், எழுந்து இருக்கமுடியாது வலி எடுத்தது.

டாக்டருக்கு அருகே நின்ற சீக்கியனான கப்டன் ஹர்பத்சிங் அவரது தலைமையிரைப் பிடித்து இழுத்துத் தூக்கி நிமிர்த்தினான்.

ஏதோ, இந்தியில் படபட வென்று பொரிந்து தள்ளினான்.

" மிஸ்டர் அணந்தராஜா!... நேற்று வல்வெட்டித்துறையில் நடைபெற்ற சம்பவங்கள் மிகக்கொடூரமானது. இதைப்பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

அவர் எதிரே நின்ற டாக்டர், தமது இராணுவத்தினர் இறந்ததைப் பற்றித்தான் குறிப்பிட்டார்.

"போரில் இருபக்கங்களிலும், இழப்புகள் வருவது தவிர்க்க முடியாததுதான்...... ஆனால் போர் முடிந்த பின்னர் நீங்கள் நடந்து கொண்டமுறை அதைவிடக் கொடூரமானது....."

அந்த வேதனை மத்தியிலும் அணந்தராஜா கூறிக் கொண்டிருந்தார்.

"அது இருக்கட்டும்...... எங்களுக்கு மெட்ராஸ் தலைமைச்



Scanned by CamScanner

செயலகத்தில் இருந்து, வல்வெட்டித்துறைப் பிரமுகர் ஒருவரைக் கொன்றுவிடும்படி ஆடர் வந்திருக்கிறது...... உங்களுடைய பெயரை அறிவித்து விட்டோம். இன்று 9.45 மணிக்கு வலி ஏதும் இல்லாமல் கொன்றுவிடும்படி ஆடர் போட்டிருக்கின்றார்கள்..... நீங்கள் அதற்கு முன்னர் உங்களுக்கு விருப்பமான கடவுளை வேண்டிக் கொள்ளலாம...."

இராணுவ டாக்டருடைய இந்த வார்த்தைகளைக் கேட்டு அனந்தராஜா ஆச்சரியப்படவில்லை..... கடந்த இரண்டு வருடங்களாக இந்திய இராணுவத்தினர் எவ்வாறு எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றார்கள். என்பதை அறிந்ததனால், அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"முடிந்தால் எல்.ரீ.ரீ.ஈ யினரின் ஆயுதக்கிடங்குகள் இருக்கிற இடத்தைக் காட்டித்தந்தால் நான் கேணல் சர்மாவிடம் சிபார்சு செய்வேன். அவர் ஜெனரல் பல்லாவுக்குச் சிபார்சு செய்வார்..... அவர் தலைமைச் செயலகத்திற்குச் சிபார்சு செய்வார்.......... நீங்களும் குடும்பஸ்தர்..... கௌரவமான உத்தியோகம் பார்ப்பவர். ஏன் வீணாக உயிரை இழக்கவேண்டும்?

கப்டன் சௌத்திரி தனது நாடக வசனத்தைத் தானே தொடர்ந்தார். அவரது வார்த்தைகளைக் கேட்டதும், அந்த வேதனையின் மத்தியிலும் வாய்திறந்து சிரித்துக்கொண்டே, "டாக்டர்!.... நான் கடவுளைப் பிரார்த்திக்கப் போகிறேன்..."

என்று அவர் சொன்னதும், கப்டன் சௌத்திரி மெதுவாக அங்கிருந்து விலகிச்சென்றார்.

அவர் போய்ச் சில நிமிடங்களின்பின், பலமான படை அணிகள் சகிதம், வந்து சேர்ந்த பிரிகேடியர் சங்கர் பிரசாத்தும், கேணல் அவுஜீலாவும், கேணல் சர்மாவும் ஜீப்பில் இருந்து இறங்கி, நேரே இராணுவ வைத்திய சாலையை நோக்கி வந்தனர்.

கேணல் அவுஜீலாதான், முன்னர் ஜனவரி 19ம் தேதி நடைபெற்ற சம்பவம்போல் இனி நடக்கமாட்டாது என்ற உத்தரவாதத்தை வழங்கியவர்.

நேரே அனந்தராஜா படுத்திருந்த கட்டிலை நோக்கி வந்த பிரிகேடியர் ஆச்சர்யப்படுபவர்போல் அவரைக் கண்டதும்,



Scanned by CamScanner

"என்ன மிஸ்டர் அனந்தராஜ்? என்ன நடந்தது? ஏன் உங்களைக் கொண்டு வந்தார்கள்?.. "

"என்னை ஏன் கொண்டு வந்தார்கள் என்று எனக்கே தெரியாது.... பாருங்கள் என்னுடைய கோலத்தை..."


தனது இரத்தம் தோய்ந்த சேட், வேட்டி ஆகியவற்றையும், இரத்தம் ஓடி உறைந்து போயிருந்த தலையையும் பிரிகேடியருக்குக் காட்டினார்.

"உங்களுடைய நாடுதானா மகாத்மாகாந்தியின் நாடு?..... சே!.. என்னால் நம்பவே முடியவில்லை.."

கட்டிலில் இருந்தபடியே மிகவும் வேதனையோடு குறிப்பிட்ட அவருக்கு, அந்த பிரிகேடியரின் வார்த்தைகள் ஆச்சர்யத்தைத்தான் கொடுத்தது.

"மிஸ்டர் அனந்தராஜ்!.... வெரி சொரி!.... உங்களைத் தற்செயலாகத்தான் பிடித்துக் கொண்டு வந்திருக்கின்றார்கள்..... அதற்காக மனம் வருந்துகின்றேன்..... உங்களுடைய சொல்லையோ எல்.ரீ.ரீ யினர் இனிமேல் கேட்கமாட்டார்கள். எப்படியாவது நாங்கள் அவர்களை அழிக்கவேணும்...... அதற்கு உங்களைப்போன்ற படித்தவர்கள்தான் உதவி செய்ய வேண்டும்...... நீங்கள் அவர்கள் தங்கும் மறைவிடங்களைக் காட்டித்தந்தால், உங்களை டெல்லிக்கே அனுப்பி, அங்கே வீடும் மாதா மாதம் பணமும் எங்கள் அரசாங்கமே வழங்கும். நீங்கள் பயப்படத்தேவையில்லை..... உங்களை மூடிக்கவர் போட்டுவிடுகிறோம்..... எங்களுடைய ஜீப்பில் வந்தே காட்டித்தரலாம்"

புகையிலை அடைத்துப்போய், புகைக்காது இருந்த சுங்கானைத் தட்டிக்கொண்டே கூறிக்கொண்டிருந்தார்.




சி. கண்டன்
19.5.59- 4.8.89



பொ.ரஞ்சித்குமார்
13.11.64- 2.8.89



க. தர்மாசலம்
21 வயது



வே.செல்வச்சந்திரன்
16.4.63 -12.8.89



Scanned by CamScanner

அமைதி காக்க வந்தவர்கள், இஸ்ரேல் மொசாட் படையினரை விடச் சிறிது முன்னேற்றமடைந்தவர்களாக இருந்தனர்.

பிரிகேடியரின் அந்தக்கோமாளித்தனமான வார்த்தைகள், அவருக்கு எரிச்சலைத்தான் கொடுத்தது.

"பிரிகேடியர் சார்!... என்னை அப்படி எந்த விதத்திலும் கேட்க முடியாது..... நான் செய்யப்போவதுமில்லை. அப்படியான முறையில் உங்களுடன் நாங்கள் தொடர்பு வைக்கவில்லை.... நீங்கள் அவர்களை அழிக்க நினைப்பதைவிட்டு, அவர்களுடன் பேசிப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு வாருங்கள். அதுதான் உங்களுக்கும், உங்கள் நாட்டிற்கும் கௌரவம். அதைவிட்டு, பள்ளிக்கூடப் பையன்களைக் கேட்பது மாதிரி என்னைக் கேட்கவேண்டாம்..."

வெறுப்போடு சொல்லிக்கொண்டே, அவரது முகத்தைப் பார்க்க விரும்பாதவராகத் தலையை வேறுபக்கம் திருப்பிக் கொண்டார்.

"அப்படிச் செய்யாவிட்டால், உம்மை காங்கேசன்துறை முகாமுக்கு அனுப்பிவிடுவேன்."

புலிகள் என்ற சந்தேகததின் பேரில் கைதுசெய்யப் படுகின்றவர்களை, ஆண்கள், மாணவர்கள், பெண்கள் உட்பட எல்லோரையும் புனர்வாழ்வு முகாம் என்ற பெயரில் இயங்கும் சித்திரவதை முகாமான காங்கேசன்துறை தடுப்பு முகாமுக்கு அனுப்பிவிடுவார்கள்.

அங்கே சுமார் 750 சதுர அடி கொண்ட வீடு ஒன்றினுள் 150 பேர் வரை அடைத்து வைப்பார்கள்.

ஒரே ஒரு மலகூடம்!

சாப்பாடு ஒழுங்காகக் கிடைப்பதில்லை!

பத்திரிக்கைகள் வாசிக்கக்கொடுப்பதில்லை! இத்தனைக்கும் மேலாக அந்தத் தடுப்புக்காவல் கைதிகளுக்கு நாளொன்றுக்கு வழங்கப்படும் ஐந்து ரூபாவை, மாதம் முடிந்தபின் அவர்களிடம் கையெழுத்தைப் பெற்றுக்கொண்டு, அமைதிப்படையின் சில அதிகாரிகளே



Scanned by CamScanner

அபகரித்து விடுவார்கள்.

இவற்றை யாராவது தப்பித் தவறித் தட்டிக் கேட்டுவிட்டால் அன்று முழுக்க அவருக்கு அடியும், உதையும்தான் கிடைக்கும்!

நியாயம் கிடைக்காது

முன்பொரு தடவை காங்கேசன்துறை முகாமில் உள்ள கைதிகளைப் பார்வையிடுவதற்காகவும், அவர்களது குறை நிறைகளைக் கேட்டு ஏதாவது உதவி செய்வதற்காகவும் சென்ற குழுவில் அனந்தராஜாவும் ஒருவராகச் சென்றிருந்தார்.

"அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை.... நீங்கள் சுட்டுக்கொன்றால் கூட, அப்படியான கீழ்த்தரமான வேலையை நான் செய்யப்போவதில்லை. அப்படியான ஒரு குற்றவாளியாக மாறுவதற்கு என்னை தயவுசெய்து நிர்ப்பந்திக்கவேண்டாம்."

வல்வெட்டித்துறை மக்கள் கமிட்டியின் செயலாளரான அவர், எதையுமே ஏற்றுக்கொள்ளாததுபோல் சொல்லி முடித்ததும்.

"சரி!...சரி!... நான் பின்னேரம் வருகிறேன். அதற்குள் யோசித்து முடிவைக் கூறலாம்."

என்று சொல்லிவிட்டு, ஜீப்பில் ஏறி மீண்டும் வல்வெட்டித்துறை நோக்கிச் சென்றார்.

அவர் வல்வெட்டித்துறையைச் சென்ற பின்னரே, அன்றைய அனர்த்தங்கள் யாவும், தங்கு தடையின்றி இராணுவ ஜவான்களால் மேற்கொள்ளப்பட்டன, என்று அந்த ஊர் மக்களே குறிப்பிட்டார்கள்.

அன்று இரண்டாம் நாள் முழுவதும், வல்வெட்டித்துறை மக்கள் பட்ட துயரம், வாழ்நாளில் என்றுமே அனுபவித்திருக்கமாட்டார்கள்.


ஸ்ரீலங்கா இராணுவத்தின் வடமாராட்சி ஒப்பரேசனில் கூட! அன்றைய இரவும், மெதுவாகக் கழிந்து கொண்டிருந்தது.

நாய்களின் ஊளையிடும் ஓசையும், ஆந்தைகளின் அலறலும், மீண்டும் அந்தப் பிரதேசத்தையே ஒரு பயங்கரமான சூழலாக்கிக் கொண்டிருந்தது....




Scanned by CamScanner









Scanned by CamScanner

அன்றும் கூட, இரண்டு நாட்களிலும் கொல்லப்பட்ட பிணங்களுடன் அந்தந்த வீட்டுக்காரர்கள் அன்றைய இரவைக் கழித்துக் கொண்டிருந்தனர்.

காடுலாவும் பேய்கள்கூட, இத்தனை சோதனைகளையும், வேதனைகளையும் அனுபவித்திருக்க முடியாது!

ஆகஸ்ட் திங்கள் 4ம் திகதி.... மூன்றாவது நாள்!

இரண்டு நாட்களிலும், சுற்றிவளைத்துச் செய்து முடிந்த அக்கிரமங்களினால் இந்திய இராணுவத்தினர் திருப்தியடைந்து போயிருப்பார்கள் என்று நினைத்துத் தூக்கத்தில் இருந்தும் எழுந்த அந்த நகரத்தின் மக்களுக்கு அன்றும் அதிகாலையில் இருந்தே நாய்கள் குரைப்பதைக் கேட்டதும் வயிற்றைக் கலக்கிக் கொண்டு வந்தது!

அன்றும் ஆயிரக்கணக்கில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டனர். காலையில் இருந்து வல்வை வெளிச்சந்தியில் இருந்து வீதிக்காவல் என்ற பெயரில் பெருந்தொகையான இராணுவத்தினர் நிறுத்தப் பட்டிருந்தனர்.

வல்லை வெளி உடுப்பிட்டியில் இருந்து 3/4 கிலோமீற்றர் தூரத்தில், யாழ்ப்பாண நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. வல்வெட்டித்துறையின் ஒவ்வொரு சந்துகளினுள்ளும், இராணுவத்தினரின் சோதனைகள் தீவிரமாக்கப்பட்டன.

கடந்த மூன்று நாட்களிலும் அந்தப்பகுதி மக்கள் அடைந்த துயரங்கள் உச்சகட்டத்தை அடைவதுபோல் அன்றைய நடவடிக்கைகள் அமைந்திருந்தன.

பூட்டிக்கிடந்த வீடுகள் உடைத்துக் கொள்ளையடிக்கப்பட்டன!

எரிக்கப்படாத சில வீடுகள் அன்றும் எரிக்கப்பட்டன! இது பற்றிக் கந்தசாமித்துரை என்பவர்,

"இரண்டு நாட்கள் ஆடிய ஆட்டத்தினால் இராணுவத்தினரின் ஆத்திரம் அடங்கியிருக்கும் என்று நினைத்திருக்கும் பொழுது 4.8.89 காங்கேசன்துறை வீதியில் உள்ள எனது வீட்டிற்குள் நுழைந்த சீக்கியப்படையினர், என்னையும் மனைவி பிள்ளைகளையும் வெளியே வருமாறு கூறி, வீட்டில் உள்ள அத்தனை பொருட்களையும் ஒரு அறையில் கொண்டு வந்து குவித்து எண்ணெய் ஊற்றி எங்கள் கண் முன்னாலேயே எரித்தார்கள். இந்திய இராணுவத்தினர் இவ்வளவு மூர்க்கத்தனமாக



Scanned by CamScanner

நடந்து கொள்வார்கள் என்று நாங்கள் நினைக்கவில்லை."

என்று குறிப்பிடும் பொழுது, போரில், விடுதலைப்புலிகளை நேருக்கு நேர் சந்திக்கமுடியாத இராணுவத்தினரின் மனோவலிமையை உணரக் கூடியதாக இருந்தது.

கொலைகள், எரிப்புக்கள், கொள்ளைகள்..... இவற்றைவிடச் சில தனிமைப்படுத்தப்பட்ட இடங்களில் கற்பழிப்புக்களும் இடம் பெற்றிருக்கின்றன.

உடுப்பிட்டி வீரபத்திரர் கோயில் வீதியில் காவலுக்கு நின்ற சீக்கியச்சிப்பாய்கள், அங்கே உள்ள சில வீடுகளுக்குள் சோதனை என்ற பெயரில் நுழைந்து இளம் பெண்களை மட்டுமல்ல, தலைநரைத்துச் சிறிது முதுமை தட்டிய பெண்களையும்கூட அவர்கள் ஆடைகளை உரிந்து, நிர்வாணமாக்கி மானபங்கப்படுத்தித் தங்கள் காம வெறியை அடக்கிய கோரச் சம்பவங்கள் கூடப் பல இடங்களில் நடைபெற்றன.

ஒரு முறை திரு.ஜே.என். டிக்சிற் இலங்கைக்கான தூதுவராக இருந்தபொழுது, யாழ்ப்பாணம் அன்னையர் முன்னணியைச் சேர்ந்த பெண்கள், குழுவொன்று கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தில் அவரைச் சந்தித்தபொழுது இடம்பெற்ற சுவையான சம்பாசணை இந்த இடத்தில் நினைவு கூரப்பட வேண்டும்.

தூதுக்குழுவில் சென்ற ஒரு பெண், யாழ் நகரில் இந்திய இராணுவத்தினரால் கற்பழிக்கப்பட்ட முப்பது இளம் பெண்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரமாண வாக்கு மூலங்களைத் தூதுவர் திக்சிற் அவர்களிடம், கொடுத்து,

"மேன்மைக்குரிய தூதுவர் அவர்களே!... இப்படியான செயல்களை உங்கள் படைவீரர்கள் தொடர்ந்தும் செய்யாது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்..... அவர்களுடைய இந்த நடவடிக்கைகள் பாரம்பரிய மிக்க பாரதத்திற்குத்தான் களங்கத்தை ஏற்படுத்தும்...."

அந்தப் பெண், டிக்சிற்றிடம் தனது மன உணர்வுகளை வெளிப்படுத்தி, அவர் என்ன சொல்லப்போகின்றார் என்பதைக் கேட்கும் பாவனையில் நின்றார்.



Scanned by CamScanner

"என்ன சொல்கிறீர்?... எங்களுடைய ஜவான்கள் ஒரு போதும், எந்தச் சந்தர்ப்பத்திலும் இவ்வாறான செயல்களில் ஈடுபடமாட்டார்கள்."

அவருடைய தன்மானம் அவரைச் சுட்டெரித்திருக்கவேண்டும், தனது ஜவான்கள், தனிமையில் இருந்தால்கூட இவ்வாறான பாவச்செயல்களைச் செய்யமாட்டார்கள் என்று அடித்துப்பேசினார்.

"ஓ... அப்படியென்றால் உங்களுடைய இந்திய ஜவான்களுக்கு ஆண் உறுப்புக்கூட இல்லாமல் போய்விட்டதோ?" சிரிக்காது, முகத்தில் எந்தவிதமான மாறுதலும் இன்றி அந்தப் பெண் சொன்னதும் தூதுவர் முகத்தில் ஈயாடவில்லை. இந்தியப்படையினர் நடத்திய காம வெறியாட்டங்கள்பற்றி ஆதாரங்களுடன் கொடுத்த புகார்கள் அலட்சியம் செய்த தீட்சித்தின் மீது ஆத்திரமுற்ற அந்த பெண்மணி அவ்வாறு கேட்டாள்

இப்பொழுது மீண்டும், வல்வெட்டித்துறையில் அதுபோன்ற சம்பவத்தினால் பதினைந்துக்கும் அதிகமான பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வெறித்தனத்தால், பாதிக்கப்பட்டு நிலைகுலைந்து போன ஒரு பெண்ணின் சோகக்கதையைக் கேட்கும்பொழுது நெஞ்சே வெடித்துவிடும்போல் இருக்கின்றது.

36 வயதான, உடுப்பிட்டி, வீரபத்திரர் கோயிலடியைச் சேர்ந்த இந்திரா என்ற பெண், அன்று, தனது வீட்டில் ஆறு வயது மகனுடன் தனித்தே இருந்தாள். அந்தச்சம்பவம் பற்றிக் குறிப்பிடும்பொழுது,

"தனது கணவர் யாழ்ப்பாணத்தில் வேலைக்குப்போனவர், ஊரடங்குச் சட்டத்தினால் வீட்டிற்குத் திரும்பவில்லை. நானும் எனது மகனும் வீட்டில் இருந்தபொழுது இந்திய அமைதிப்படையைச் சேர்ந்த நான்கு சீக்கியர்கள் எனது வீட்டிற்குள் வந்து, வீட்டைச் சோதனையிடப் போவதாகக் கூறினார்கள். நான், உடனே வீட்டைவிட்டு வெளியே வந்து, முற்றத்தில் நின்றேன் அப்பொழுது ஒரு சிப்பாய், எனது முதுகில் துப்பாகியினால் தள்ளிப்பிடித்தபடி, அறைக்குள் போகுமாறு கூறித் தள்ளினான் எனது ஆறுவயது மகன் பயத்தினால் வெளியே ஓடிப்போய் அழுதுகொண்டு நிற்க, மற்றைய சிப்பாய் அவனைப்பிடித்து இழுத்துவந்து ஒரு மூலையில் உட்காரவைத்தான். இரண்டு சீக்கியர்கள் என்னை பிடித்து அறைக்குள் இழுத்தார்கள். ஒருவன், நான் சத்தமிடாதபடி என் வாயை அமுக்கிப்பிடித்தான். மற்றவன் எனது ஆடைகளைக் கழற்றி



Scanned by CamScanner

மானபங்கப்படுத்தினான். எல்லாம் முடிந்து போகும்பொழுது, அந்த வெறிபிடித்த சிப்பாய், என் அருகில் வந்து இதுபற்றி எவரிடமாவது முறையிட்டால் உங்கள் எல்லோரையும் குடும்பத்துடனேயே சுட்டுத்தள்ளிவிடுவேன் என்று சொல்லிவிட்டு வெளியேறினான்."

கண்ணீரின் மத்தியில் கூறிக்கொண்டிருந்த அந்தப்பெண் குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

"நான் மற்றைய பெண்கள் மாதிரி தற்கொலை செய்யவோ, மூடி மறைக்கவோ போவதில்லை. அந்த வெறிநாய்கள் இங்கே அமைதிப்படை என்ற பெயரில் வந்து செய்கிற அட்டூழியங்களை நாளை உலகுக்கு அம்பலப்படுத்தத்தான் போகிறேன்."


கண்ணீரின் மத்தியிலும், நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு சொன்னாள், அந்த தமிழச்சி!

தமிழ்ப்பண்பாட்டில், ஒருவனுக்கு ஒருத்தி என்ற நிலைப்பாட்டில் காலம் காலமாக வாழ்ந்து வருகின்ற இந்தச்சமுதாயத்திற்கு, அன்னியப்படைகளின் வருகையினால் இப்படி ஒரு இழிநிலை ஏற்படவும் வேண்டுமா?


அந்தத் துணிச்சலான பெண், தனக்கு நடந்த சம்பவங்களை ஒழிவு மறைவின்றிக் கூறி, வேடதாரிகளின் முகமூடியைக் கிழித்து உலகுக்கு அம்பலப்படுத்த வேண்டும் என்ற இலட்சிய வெறியுடன், இன்று



ஆ. பரஞ்ஜோதி
29.4.71 - 2.8.89



ஆ. பரசர்
28.9.69 - 2.8.89



அ. மதிவர்ணன்
12.11.71 - 2.8.89



Scanned by CamScanner

தனது சொந்த வீட்டிலேயே இருக்கமுடியாது தலை மறைவாகவே வாழ்ந்து வருகின்றாள்.

4ம்திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00மணியளவில் இராணுவ மருத்துவ மனையில் இருந்த ஆனந்தராஜாவிடம், டாக்டர் சௌத்திரி கொண்டு வந்து ஒரு பைலைப் போட்டு அதில் அவரது கையெழுத்தை வைக்குமாறு கேட்டுக்கொண்டனர்.

“மிஸ்டர் அனந்தராஜா!... இங்கே தடுத்துவைக்கப்பட்டவர்களில் ஆறுபேர் இங்கே இறந்துபோனார்கள். அவர்கள் அடையாளம் காணப்படாததால் இங்கேயே தகனம் செய்து விட்டோம்...”

தான் சொல்லப்போவது எவ்வளவு பாரதூரமான ஒரு விஷயம் என்பதை அறிந்தும், மிகச் சாதாரணமாகவே டாக்டர் கூறினார்.

இராணுவத்திற்குள் நுழைந்ததும், மனிதமனங்கள்கூட மிருகத்தன்மையானவையாக மாறுகின்றதோ?

“டாக்டர்!... எப்படி அவர்கள் இறந்தார்கள்? அன்று கொண்டு வரும்பொழுது எல்லோரும் நன்றாகத்தானே இருந்தார்கள். அவர்கள் விடுதலைப்புலிகள் அல்லவே?

அதிர்ச்சி அடைந்த அனந்தராஜா, டாக்டரிடம் இப்படிக் கேலியாகக் கேட்டதும் ஏதோ சாக்குப்போக்குச் சொல்லி எரித்ததற்கு ஆதாரமாக அவரிடம் இருந்து கையொப்பத்தையும் பெற்றுக்கொண்டார்.

சாதாரண அப்பாவி இளைஞர்களைப் பிடித்து அடித்துக் கொன்றுவிட்டுப் பின்னர் அவர்களைப் புலிகள் என்று கூறுவதில் இந்திய தூரதர்சனையும், ஆல் இந்தியா ரேடியோவையும் மற்றைய நாடுகளின் பிரச்சாரச் சாதனங்களும், மக்கள் தொடர்புச் சாதனங்களும் பிச்சை வாங்கவேண்டும்.

வித்தனை என்ற இடத்தில் உள்ள, 45 வயதான இந்திரா ஆதி அருணாசலம் என்பவர் தனது மூன்று ஆண் பிள்ளைகளையும் இழந்து தவிக்கின்ற அந்தச்சோகக்காட்சி இன்றும், அந்த ஊரைப்பார்க்க வருகின்றவர்களின் நெஞ்சையே உருக வைக்கின்றது.



Scanned by CamScanner

"எனது மகன்கள் இருவர் ஜங்சனில் நடத்திக்கொண்டிருந்த கேசவன் ஸ்ரோர்ஸ் கடையை இராணுவத்தினர் குண்டு வைத்துத் தகர்த்துவிட்டனர். எனது 11 வயது மகன் ஒருவரை வித்தனையில் உள்ள சுப்பிரமணியம் வீட்டில் வைத்துச் சுட்டுக்கொன்றுவிட்டார்கள். மற்றைய இரு மகன்களான பரஞ்சோதி, பராசர் இருவரையும் இந்திய இராணுவத்தினர் பிடித்துக்கொண்டு போனவர்கள். இன்று இல்லை என்று கூறுகின்றார்கள். யாராவது கருணை உள்ளம் படைத்தவர்கள் எனது ஒரு மகனையாவது மீட்டுத்தந்தால் சந்தோஷம் அடைவேன்"

தனது உள்ளக் கிடக்கையைக் கூறி வருவோர் போவோரிடம் எல்லாம் இப்படிக்கேட்டுக்கொண்டே இருக்கின்றார்.

ஈழத்தில் தமிழ் இனத்தைப் பாதுகாப்பதற்கென்று கூறிக்கொண்டுவந்த இரட்சகர்கள், இன்று தமிழர்களை அடித்துக் கொன்று துவம்சம் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

வல்லரசு நாடுகள் என்று தங்களைக்கூறிக் கொள்பவர்கள், சிறிய நாடுகளில் உரிமைக்காகப் போராடிக்கொண்டிருக்கின்ற இனத்திற்குத் தங்கள் தார்மீக ஆதரவை வழங்கவேண்டுமேயொழிய இவ்வாறு நசித்து அழித்து அடிமைப்படுத்த முயலக்கூடாது.

இலங்கையைப் பொறுத்தவரையில் தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற தமிழீழ சுயாட்சிப் போராட்டமானது மக்கள் ஆதரவு பெற்ற இயக்கமாக இருப்பதால் இந்திய இராணுவத்தால் மட்டுமல்ல உலகின் வேறு எந்த வல்லரசாலும் அடக்கி ஒடுக்க முடியாது என்பதை இன்று இலங்கையின், வடக்கு, கிழக்கு மாகாணத்தில் பரவலாக வெளிக் காட்டப்பட்டு வருகின்ற இந்திய இராணுவத்திற்கு எதிரான நடவடிக்கைகள் எடுத்துக்காட்டுகின்றன. ஈழத்தின் பெரும்பாலான இடங்களில் "இந்திய இராணுவமே வெளியேறு" என்ற கோஷங்கள் கூட ஒலிக்கத் தவறவில்லை

3வது நாளான அன்றும் பல கொலைகளையும், கொள்ளை களையும் செய்து முடிக்க இந்தியப்படையினர் தவறவில்லை.

அன்று வல்வெட்டித்துறை ஜங்ஷனில் இருந்து சுமார் அரை கிலோமீற்றர் தூரத்தில் உள்ள வல்வெட்டி என்ற கிராமத்தில் வீட்டினுள் இருந்த 70வயதான மூதாட்டியான நடராஜா நல்லமுத்து என்ற



Scanned by CamScanner

பெண்ணையும், 2கிலோமீற்றர் தூரத்தில் உள்ள நாவலடி என்ற இடத்தில் 15வயது பவப்பிருந்தா என்ற மாணவியையும், மூன்றரைக் கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள கெருடாவில் என்ற இடத்தில் ஏழைச்சீவல் தொழிலாளியான 29 வயதான செல்வன் கந்தன் என்பவரையும் சுட்டுக்கொன்று தமது நீண்ட நாளைய திட்டத்தை நடைமுறைப்படுத்திய வெற்றிக்களிப்பில், 4.8.89 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் தமது முகாம்களுக்குள் திரும்பிக்கொண்டிருந்தனர்.

அவர்கள் போகும்பொழுது, தங்களால் சுட்டுக்கொல்லப்பட்ட மனிதர்களின் சடலங்களை உடனடியாக எரித்து அல்லது புதைத்துவிட வேண்டும் என்றும் கட்டளையிட்டுவிட்டுச் சென்றனர்.

சம்பவம் நடந்து முடிந்த இரண்டு நாட்களின் பின், உடுப்பிட்டி முகாமில் நடந்த கூட்டம் ஒன்றில் பதினொரு பேரின் சடலங்களை எரித்து விட்டதாகவும், வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற சம்பவங்கள் யாவும் சண்டையில் இடையே சிக்கியதாலேயே ஏற்பட்டது என்றும் இராணுவ உயர் அதிகாரிகள் கூறினார்கள்.

இதையே இந்திய வானொலியும், தூரதர்ஷன் தொலைக் காட்சியும்,

“இலங்கை, யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையில் இந்திய அமைதிப்படைக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடந்த மோதலில் சிக்கி 24 சிவிலியன்கள் கொல்லப்பட்டதுடன் விடுதலைப்புலிகள் தாக்குதலை மேற்கொண்டதில் சில வீடுகளும், கடைகளும் சிறிது சேதம் அடைந்தன. இம்மோதலில் ஆறு விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டனர்.”

என்று தொடர்ந்து பல நாட்களாகக் கூறிக்கொண்டிருந்ததை, அந்த ஊருக்கு வருகை தந்த ஐரோப்பிய நாடுகளினதும், இந்தியாவினதும் பத்திரிக்கையாளர்கள் எள்ளி நகையாடியதையும் மறக்க முடியாது.

அந்த வெறி பிடித்த இந்திய இராணுவத்தினர்,அந்தப் பிரதேசத்தை விட்டு வெளியேறியதும், தமது வீடுகளில் இறந்து அழுகி நாற்றமடித்துக்கொண்டிருந்த மனித உடல்களை அந்தந்த இடங்களிலேயே மரக்கட்டைகளையும், பழைய டயர்களையும் போட்டு எரித்தார்கள்.



Scanned by CamScanner

கணவனின் உடலை மனைவியும், தந்தையின் உடலை மகளும், மகனின் உடலைத் தாயும் தகனம் செய்த அந்தக் கொடூரமான நெஞ்சை உருக்கும் நிகழ்வுகள், உலகில் எந்தப் பெண்களுக்குமே ஏற்படக்கூடாது. சில மனிதர்களின் உடல்கள் உறவினர்கள் எவரும் இல்லாமலேயே வீதிகளிலும், சந்துகளிலும் எரிக்கப்பட்டன. ஆம்!.. நாய்களைப் புதைப்பதைப் போல

இலங்கையில் தமிழர்களின் உணர்ச்சிகளுக்கு எதிராக சிங்கள இராணுவத்தினரையும், அன்னிய கூலிப்படைகளையும் ஸ்ரீலங்கா அரசு பயன்படுத்தியது போல்,

இன்று பாரதம் தனது அரசியல் சாதுரியத்தால் சாதிக்கவேண்டியதை, இராணுவ பலத்தால் சாதிக்க முனைகின்றது.

ஆம்!.. இன்று பாரதத்தின் அரசியல் தலைமையைவிட இராணுவ ஆதிக்கம் அதிகரித்து வருகின்ற நேரத்தில், இதனைக் கட்டுப்படுத்தி இந்தியாவின் உண்மையான நண்பன் யார்?..... பகைவன் யார்?.... தமிழர்களின் உண்மையான பாதுகாவலன் யார் என்பதை அறிந்து நடவடிக்கை எடுக்காவிட்டால் பாரதம், எதிர்காலத்தில் மகாத்மாவின் இந்தியாவாகத் தலை நிமிர்ந்து நிற்க முடியாத நிலை ஏற்படும்.

அடக்கு முறைகளினாலோ, அல்லது ஆயுத பலத்தினாலோ தமிழனத்தை அடிமைப்படுத்தி விடமுடியாது என்பதை இந்திய, இலங்கை அரசுகள் புரிந்து கொண்டுள்ள இன்றைய சூழ்நிலையில், ஈழத் தமிழினம் அன்னிய ஏகாதிபத்திய வாதிகளின் குரல்வளையை நெரித்து சுதந்திரக்காற்றை நுகரும் நாள் வெகுதூரத்தில் இல்லை.

"ஒன்றுபட்ட இனத்தின் எழுச்சியானது அடக்கு முறை வாதிகளை ஓட விரட்டிவிடும்" துயரத்தின் பின்னணியில் நிகழும் உண்மைகள் புகட்டும் பாடம் இது.

ஆம்!... வல்வெட்டித்துறை படுகொலைகள் நாளை புகட்டவிருக்கும் பாடமும் இதுதான்.

"வல்வைப் படுகொலைகள்" சம்பந்தமான உலக பொது நிறுவனங்களினதும், பத்திரிகையாளர்களினதும் கருத்துக்கள்



Scanned by CamScanner

## 1. சர்வதேச மன்னிப்புச் சபை (AI)

அம்னெஸ்டி இன்டர்நேஷனல் என அழைக்கப்படும் சர்வதேச மன்னிப்புச்சபையானது 1989 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17ம் திகதி வியாழக்கிழமை இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பிய ரெலக்ஸ் செய்தியில் பின்வருமாறு குறிப்பிட்டு, இது தொடர்பாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை உலகுக்கு அறிவிக்கவேண்டும் என்றும் கேட்டுள்ளது.

அந்த அறிக்கையில் குறிப்பிட்டதாவது;

ஆகஸ்ட் 2ம் திகதி, வல்வெட்டித்துறையில் இந்திய அமைதிப்படைக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையில் ஏற்பட்ட மோதலில் ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அதைத் தொடர்ந்து இந்தியப்படையின் எதிர்த்தாக்குதலில் குறைந்தது 51 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இதில் ஆறு பெண்களும், ஏழு சிறுவர்களும் அடங்குவர்.

வல்வெட்டித்துறையில், பொதுமக்கள் வீடுகளில் இருந்து வெளியே இழுத்து வரப்பட்டு முதுகுப்புறமாகச் சுடப்பட்டும், சுவர்களைப் பார்த்து நிக்குமாறு கூறி நிறுத்திவைக்கப்பட்ட நிலையில் சுடப்பட்டும், ஏராளமான கடைகளும், போக்குவரத்துச் சாதனங்களும், மீன்பிடி வள்ளங்களும் எரித்து நாசமாக்கப்பட்டுள்ளன.

இந்திய அரசானது, தமக்கும் போராளிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் சிக்குண்ட 24 பொதுமக்கள் மட்டுமே இறந்ததாகக் கூறி பெருமளவு கொலைகள் நடந்ததை மறுத்துள்ளது. ஆனால் நேரிடையாகக் கண்டவர்களின் சாட்சியும், சுயாதினமான பொது அமைப்புக்களும் இந்தியப்படையினரின் கொலைகளை உறுதிப்படுத்தியுள்ளன.

ஆயுதம் ஏந்தியவர்களை அடக்குவதற்கான நிகழ்வுகளில், மக்களின் மனித உரிமைகளை மதித்து நடக்கும் அரசின் தலையான கடமையில் இருந்து விடுபடுவது என்பது “அரசு” என்ற ஒழுங்கமைப்பினால் புறக்கணிக்கப்பட முடியாதது ஆகும் என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



Scanned by CamScanner

## 2. " லண்டன் பைனான்சியல் ரைம்ஸ்"

17.7.89 அன்று வெளியான முன்னணிப் பத்திரிக்கையான "பைனான்சியல் ரைம்ஸ்" என்ற பத்திரிகையில் வல்வெட்டித்துறைக்கு நேரில் சென்று வந்த அதன் நிருபர் டேவிட் ஹௌஸ்கோ பின்வருமாறு எழுதுகின்றார்.

தங்கள் நாட்டு இராணுவம் வெளிநாடு ஒன்றில் தங்கி கெரில்லாக்களை எதிர்த்து சண்டை போடுவதாக இருந்தால், சில வேளைகளில் காட்டுமிராண்டித்தனமாக நடக்க வேண்டிய கட்டாயம் அதற்கு ஏற்படும் என்பதும், இதனால், உள்ளூர் மக்களின் வெறுப்பையும், அதிருப்தியையும் அது சம்பாதித்துக் கொள்ளும் என்பதும் மேற்கத்திய ஜனநாயக நாடுகளுக்கு அனுபவரீதியாத் தெரிந்த விடயம்தான்.

அணிசேரா நாடுகளிலேயே முதன்முறையாக வெளிநாடு ஒன்றில் (இலங்கை) தனது இராணுவத்தைக் கொண்டுபோய் அமைதிகாக்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ள இந்தியாவுக்கு இப்பொழுதுதான் அந்த அனுபவம் கிடைத்துள்ளது.

உறவினர்களையும், உடமைகளையும் இழந்தவர்கள் இனி வாழ்க்கையை எங்கே தொடங்குவது, எப்படித் தொடங்குவது என்று தெரியாமல் திகைத்துப்போய் நிற்கின்றனர். கடந்த 2 வருடங்களில், இந்தியப்படையினர் மீது கூறப்பட்டு வந்த பல புகார்களில் இதுதான் மிகப்பெரிய புகாராக இருக்கிறது.

இந்தியப்படையின் உயர் அதிகாரிகளின் முன்னிலையிலேயே இந்த அசம்பாவிதங்கள் நிகழ்ந்துள்ளன. பாரபட்சமற்ற பொது விசாரணை ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என்று பிரஜைகள் குழு கேட்டுக்கொண்டபோதிலும், இதனை இந்தியப்படையினர் எதிர்க்கின்றனர்.

## 3. ஏசியா வாச்

(ஐக்கிய அமெரிக்க மனித உரிமைகள் கண்காணிப்புக் குழு)

"இலங்கையின் வல்வெட்டித்துறையில் இம்மாத ஆரம்பத்தில் இந்திய அமைதிப்படையின் படுகொலைகளை விசாரித்து நீதி



Scanned by CamScanner

வழங்குவதற்குப் பதிலாக இந்திய உயர் மட்டத்தினர் அதனை மூடிமறைக்க முயல்வது வெளிப்படையாகத் தெரிகிறது" என ஐக்கிய அமெரிக்க மனித உரிமைகள் குழு குற்றம் சாட்டியுள்ளது.

வல்வெட்டித்துறையில், இந்தியப்படையினர், 1989 ஆகஸ்ட் 2ம் திகதி நிகழ்த்திய படுகொலையில் 51 பொது மக்கள் கொல்லப்பட்டதை இந்தியா, தமிழ் கொரில்லாக்களுக்கும், இந்தியப்படைக்கும் இடையில் ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 8 சிவிலியன்கள் கொல்லப்பட்டதாகக் கூறுகிறது.

ஏசியா வாச் நிர்வாக இயக்குனர் சிட்னி ஜோன்ஸ் கூறும் பொழுது, இந்தியா மூடிமறைப்பது வெளிப்படையாகவே தெரிகின்றது என்கிறார்.

இந்தியப்படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போன, 22 சிவிலியன்களைப்பற்றியும், படுகொலைகள் பற்றியும் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஏசியா வாச் வலியுறுத்தியுள்ளது.

வல்வெட்டித்துறையில் இறந்த 46 பேரின் பட்டியல் ஒன்றையும் ஏசியாவாச் வெளியிட்டுள்ளது.

## 4. தி சண்டே டெலிகிராப் (THE SUNDAY TELEGRAPH) லண்டன்

"இந்தியாவின் மைலாய்" என்ற தலைப்பில் லண்டனில் இருந்து வெளியாகும் "தி சண்டே டெலிகிராப்" என்ற பத்திரிகை ஆசிரியர் தலையங்கம் தீட்டியுள்ளது.

ஸ்ரீலங்காவில் அமைதி காப்பதற்காகவே விசேடமாக அனுப்பப்பட்ட இந்தியப்படைகள், இலங்கையில் உள்ள ஒரு சிறிய கிராமத்தைச் (வல்வெட்டித்துறை) சுற்றிவளைத்து பெண்கள், குழந்தைகள் உட்பட 50க்கு மேற்பட்ட தமிழ் சிவிலியன்களைப் படுகொலை செய்துள்ளது

இந்தியாவும் சட்ட ஒழுங்கு அடிப்படையில், ஜனநாயகத்தின் வழி செயல்பட முடியாதவாறு மனச்சோர்வடைந்த பட்டியலில் வந்துள்ளது. படைவீரர் மத்தியில் ஒழுங்கு குலைந்துள்ளது. இந்தியாவின் இப்படுகொலையானது, வியட்நாமின் மைலாய் போன்றோ அல்லது அதனுடைய அமிர்தசரஸ் படுகொலையைவிட அதிகமாகவோ உள்ளது.



Scanned by CamScanner

## 5. தி இந்தியன் எக்ஸ்பிரஸ் (THE INDIAN EXPRESS)

இந்திய அமைதிப்படையினர்,தமது வீரர்கள் 6 பேர் விடுதலைப் புலிகளினால் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து எதிர் நடவடிக்கைகளில்

ஈடுபட்டதில் நிராயுதபாணிகளான ஐம்பதுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

வல்வெட்டித்துறை இப்பொழுது பாலைவனமாகக் காட்சியளிக்கின்றது. சனத்தொகையில் அரைவாசிப்பேர் இடம் பெயர்ந்து அயற்கிராமங்களுக்குச் சென்றுவிட்டனர்.

50 பொதுமக்கள் கொல்லப்பட்டும், 12 பேர் காணாமல் போயும், 123 வீடுகளும், மீன்பிடி உபகரணங்களும், சைக்கிள்கள் உட்பட 50க்கு மேற்பட்ட வாகனங்கள் எரிக்கப்பட்டும் உள்ளன.

எரிக்கப்பட்ட வீடுகளில் காந்தி, நேரு, சுபாஸ் சந்திரபோஸ் போன்ற இந்தியாவின் தலைசிறந்த தலைவர்களின் படங்கள்கூட எரித்து நொருக்கப்பட்டுள்ளன.

இந்திய இராணுவத்தினர் தம்மை எதிர்ப்பவர்களை அழிக்காது அப்பாவிமக்களை எதிர்த்து அழிக்கும் கொலைகாரப்படையாகத்தான் அங்கு இப்பொழுது இருக்கின்றனர்.

1989 செப்டம்பர் 3ம் திகதி வெளியான இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் அதன் நிருபரான றீற்றா செபஸ்ரியன் விசேட அறிக்கையாகக் குறிப்பிட்டுள்ளர்.

## 6. தி கார்டியன்(THE GUARDIAN) 1989' ஆகஸ்ட் 12

லண்டனில் இருந்து வெளியாகும் 'தி கார்டியன்' என்ற பத்திரிகையில் அதன் கொழும்பு நிருபரான கிறிஸ் நற்றோல் பின்வருமாறு எழுதியுள்ளார்.



Scanned by CamScanner

ஸ்ரீலங்காவின் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் கடந்த இரண்டு வருடங்களாக நிலைகொண்டுள்ள இந்திய அமைதிப்படையினரின் மிகவும் மோசமான ஒரு நடவடிக்கையில் 51 தமிழ் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

மூன்று நாட்களாக ஊரடங்கு உத்தரவைப்பிறப்பித்து இந்தப் படுகொலைகள் பற்றிய விபரங்கள் வெளியே தெரியாதவாறு

இந்தியப்படையினர் மூடி மறைத்துள்ளனர். இந்தத்தாக்குதலில் அந்தக்கிராமத்தையே அழிப்பதற்கு முயற்சிசெய்துள்ளதுடன், வைத்தியர் குழுவைக்கூட அங்கு செல்வதற்கு அனுமதிக்கவில்லை.

வல்வெட்டித்துறையே, தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் பிறந்த ஊராக இருப்பதாலும், பல விடுதலைப்புலிகளின் போராளிகள் இங்கிருந்தே உருவாக்கப்படுவதாலும் பழிவாங்கும் ஒரு செயலாகவே இத்தாக்குதல் அமைந்துள்ளது.

இதில் பெண்கள், குழந்தைகள், உட்பட 51 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

பெரும்பாலானவர்கள் தமது கையையோ, காலையோ இழந்த நிலையில் படுகாயமடைந்துள்ளனர். இந்த நகரத்தில் பெரும்பாலான மக்கள் இடம்பெயர்ந்துள்ளதால் இப்பொழுது பாலைவனம்போல் காட்சியளிக்கின்றது. 5000க்கும் மேற்பட்ட மக்கள் ஆலயங்களிலும், தேவாலயங்களிலும், பாடசாலைகளிலும் அகதிகளாகத் தஞ்சம் அடைந்துள்ளனர்.

உதவிப்பணிகளில் ஈடுபட்டுள்ளவர்கள் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் (UNHCR) செஞ்சிலுவைச்சங்கம் ஆகியவற்றிற்கு நிவாரண உதவிகோரி விண்ணப்பித்துள்ளனர்.

''இலங்கையில் உள்ள தமிழர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே இந்தியா படை விலகலைச் செய்யும் என்று இன்றும் கூறிக்கொண்டிருப்பதன் மூலம், இலங்கை அரசாங்கத்தின் விருப்பத்திற்கு மாறாக இந்தியா தனது படைகளை மேலும் அங்கு வைத்திருப்பதற்கு நியாயம் கற்பிக்க முயல்கின்றது.



Scanned by CamScanner

## 7. தி நியூஸ்லைன் (THE NEWS LINE) AUGUST 15, 1989

வல்வெட்டித்துறையில் ஆகஸ்ட் 2,3,4 ம் திகதிகளில் நடைபெற்ற படுகொலைகள், சித்திரவதைகள் பற்றிய செய்திகள் பல நம்பிக்கையான வட்டாரங்களில் இருந்து கிடைக்கப் பெற்றுள்ளன.

மக்கள் நெருக்கமாக உள்ள வல்வெட்டித்துறைச் சந்தைப்பகுதியில் இந்திய இராணுவத்தினர் சரமாரியாக எழுந்தமானமாகச் சுட்டதில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் உட்பட பெருமளவில் கொல்லப்பட்டனர்.

பின்னர் வீடுகளிலும், கடைகளிலும் இருந்து பொதுமக்களை இழுத்துச் சுட்டுக்கொன்று, பல வீடுகள், கடைகள், மீன்பிடி உபகரணங்கள் ஆகியவற்றையும் எரித்துச் சாம்பாராக்கினார்.


திரு. பிரபாகரனினதும், மற்றும் சில விடுதலைப்புலிகளின் தலைவர்களினதும் சொந்த ஊராக இருப்பதாலும், தமிழ்ப்புலிகளை இந்தியப்படையினரால் வெல்ல முடியாது இருப்பதாலும், பழிவாங்கும் நடவடிக்கையாகவே இத்தகைய படுகொலைகளை மேற்கொண்டுள்ளனர்.

1989 ஆகஸ்ற் 2ம் 3ம் 4ம் திகதிகளில் இந்திய அமைதிப்படையினரால் ஏற்படுத்தப்பட்ட இழப்புக்களின் விபரம்.

1989 ஆம் அண்டு ஆகஸ்ற் 2ம் திகதி வல்வெட்டித்துறைச் சந்தை சதுக்கத்தில் காலை 11.00 மணியளவில் எதிர்பாராதவிதமாக விடுதலைப்புலிகளுக்கும், இந்திய அமைதிப்படையினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் ஆறு இந்திய ஜவான்கள் இறந்ததுடன், 11 ஜவான்கள் காயமடைந்துள்ளனர். அதைத் தொடர்ந்து வல்வெட்டித்துறையைச் சுற்றிவர உள்ள மூன்று இந்திய இராணுவ முகாம்களில் இருந்தும், ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் சுற்றிவளைத்து, ஆகஸ்ற் 4ம் திகதி பிற்பகல் 2.00 மணி வரை ஊரடங்கு சட்டம் பிறப்பித்துத் தாக்குதலை மேற்கொண்டனர்.



Scanned by CamScanner




I.P.K.F. Atrocities at Valvettiturai on 2nd 3rd 4th August



Scanned by CamScanner

இதனால் வல்வெட்டித்துறை மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகளும், துயரங்களும் எண்ணில் அடங்காதன.

1. இறப்புக்கள் - மொத்தம் கொல்லப்பட்டோர் 63

1.1 வீடுகளில் இருந்தும், சாலைகளில் இருந்தும் 52 பொதுமக்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். 11 பொது மக்கள் உடுப்பிட்டி இந்திய இராணுவ முகாமில் அடித்துக்கொல்லப்பட்டு அங்கேயே எரிக்கப்பட்டனர். இவர்களில் குழந்தைகள், பெண்கள், மாணவர்கள், வயோதிபர்களும் அடங்குவர்.

1.2 பலர் மருத்துவ வசதியின்மையால் இறந்தனர். ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தபோது பிரெஞ்சு வைத்தியக்குழுவினர் வல்வெட்டித் துறைக்குள் வருவதற்கும் அனுமதிக்கப்படவில்லை.

1.3 தொடர்ந்து 3 நாட்கள் இராணுவத்தினர் ஊரைச் சுற்றி வளைத்திருந் ததால் இறந்த சடலங்கள் அழுகிஉருத்தெரியாது போனதால் அந்தந்த வீடுகளிலும், தெருக்களிலும் வைத்தே எரிக்கப்பட்டன.

1.4 ஒரே குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் கொலலப்பட்டனர்.

1. தந்தையும் மகனும்
   திரு. வெ. சுப்பிரமணியம் (தந்தை)
   சு. அமுதன் மார்க்கண்டன் (மகன்)
2. இந்திரா ஆதி அருணாசலம் என்ற தாயின் மூன்று மகன்கள்
   1. ஆ. பராசர்
   2. ஆ. பரஞ்சோதி
   3. ஆ. சுந்தரேஸ்வரன்
3. திருமதி தளையசிங்கம் என்ற தாயின் இரண்டு மகன்கள்
   1. த. சிவகுமார் (அண்ணன்)
   2. த. ஜெயமோகன் (தம்பி)
4. ஒரே வீட்டில் இரண்டு சகோதரர்கள்
   1. கந்தசாமி மகேந்திரராஜா (அண்ணன்)
   2. கந்தசாமி வேலும் மயிலும் (தம்பி)
5. தந்தையும் மகளும்
   1. எஸ். கணேசலிங்கம் (தந்தை)



Scanned by CamScanner

2. க. சசி (மகள்)

6. பாலசுப்பிரமணியம் என்பவரின் மகனும் மருமகனும்

1. பா. மகேந்திரதாஸ் (மகன்)
2. த. ஞானதாஸ் (மருமகன்)

7. தாயும் மகனும்

1. இ. புஸ்பராணி 49 வயது விதவை (தாய்)
2. இ. ஜவனராஜ் 11 வயது மாணவன் (மகன்)

2. காயப்பட்டோர்கள்

2.1 நூற்றுக்கணக்கானவர்கள் கொதிக்கும் தார்றோட்டில் உருட்டி விடப்பட்டுத் தாக்கப்பட்டதால் காயமடைந்தனர்.

2.2 மோசமாகக் காயப்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டவர்கள் 43 பேர்

2.3 மிகுதிப்பேர் ஊரைவிட்டே இடம் பெயர்ந்து சென்றுவிட்டனர்.

3. எரிக்கப்பட்ட வீடுகள்

3.1 123 வீடுகள் அதனுள் உள்ள பொருட்கள், தளபாடங்கள் வானொலி, தொலைக்காட்சி, உடைகள் என்பவற்றுடன் சேர்த்து முற்றாகவே எரிக்கப்பட்டன.

3.2 மேலும் 40க்கும் அதிகமான வீடுகள் சிறிதளவில் பாதிப்பு.

4. எரிக்கப்பட்ட கடைகள்

4.1 நகரில் உள்ள 45 கடைகள் முற்றாகவே எரிக்கப்பட்டுச் சாம்பலானது.

4.2 பெரும்பாலானவை மளிகைக்கடைகள், இதனால் மக்களுக்கு உணவுத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

4.3 சில கடைகளில் அவற்றின் முதலாளிகளை உயிருடன் வைத்து எரித்துள்ளனர்

5. எரிக்கப்பட்ட கார், மோட்டார் சைக்கிள், சைக்கிள் மொத்தமாக 62 போக்குவரத்து வாகனங்கள் எரிக்கப்பட்டன.



Scanned by CamScanner









Scanned by CamScanner

6. மீன்பிடி படகுகள், இயந்திரங்கள், வலைகள்

படகுகள், இயந்திரங்கள் ....... 12

மீன்பிடி வலைகள் ......... 176

7. கொள்ளைகள்

பல வீடுகளில் இராணுவத்தினர் தங்க நகைகள், பணம், எலக்ரோனிக் உபகரணங்களைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

8. மானபங்கப்படுத்தப்பட்டவர்கள்

8.1 15 திருமணமான பெண்கள் இந்திய இராணுவத்தினரால் கற்பழிக்கப்பட்டனர்.

8.2 பல இளம் பெண்கள் கற்பழிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தமது கௌரவம் கருதியும், எதிர்கால வாழ்வு கருதியும் பெயர்கள் வெளியிட விரும்பவில்லை. பாரபட்சமற்ற விசாரணை ஒன்று மேற்கொள்ளப்படுமானால் சகல கட்சிகளும் சமூகமளிப்பர் என்று வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுவினர் தெரிவிக்கின்றனர்.

இணைக்கப்பட்ட மாதிரி வரை படத்தில் கொலைகள் நடந்த சில இடங்களும் அக்கொலைகளில் பின்னனியும்

இடம் - 1

வித்தனை என்ற இடத்தில் - இது ஜங்ஷனில் இருந்து சுமார் 400 மீற்றர் தூரத்தில் உள்ளது. இங்கு இளைப்பாறிய சுப்பிறிண்டன் வெ. சுப்பிரமணியம் வீடு உண்டு.

இது சீமெந்துக் கூரையாதலால், இராணுவத்தினரின் செல்தாக் குதலில் இருந்து தப்புவதற்காக வீட்டுக்காரர்களுடன், அயலவர்களுமாக சுமார் 40 பேர் வரை இருந்தனர். 2.8.89 அன்று பிற்பகல் 1.30 மணியளவில் வீட்டினுள் பகுந்த இராணுவத்தினர் சரமாரியாகச் சுட்டதில் 9 பேர் ஸ்த்தலத்திலேயே இறந்தனர்.

1. வெ.சுப்பிரமணியம் - 56வயது
2. அ. இளையபெரமாள் - 70வயது
3. இ. புஸ்பராணி - 45வயது விதவை



Scanned by CamScanner

- 11வயது மாணவன்

4. இ. யவன்ராஜ் - 11வயது மாணவன்
5. ஆ. சுந்தரேஸ்வரன் - 35வயது
6. எஸ். கணேசலிங்கம் - 1 1/2 வயது
7. பேபி சசி கணேசலிங்கம் - 26 வயது
8. அமிர்தம் உமாதேவி - 40 வயது
9. ஈ. இராஜலட்சுமி

இந்த ஒன்பது பிரதேசங்களும் 4.8.89 ல் அருகில் உள்ள குழியில் தகனம் செய்யப்பட்டது.

இடம் - 2

தீருவில் அமைந்துள்ள காலம் சென்ற எஸ். சிவகணேசன் வீடு. மோதல் நடைபெற்ற இடத்தில் இருந்து 400 மீற்றர் தூரத்தில் உள்ளது. இங்கு 150 பேர் வரை தஞ்சம் அடைந்திருந்தனர். 2.8.89 அன்று பிற்பகல் 3.30 மணியளவில் அந்த வீட்டினுள் நுழைந்த இந்திய இராணுவத்தினர் ஆண்கள் வேறாகவும், பெண்களை வேறாகவும் பிரித்து அங்கிருந்த கார் செட்டின் முன்னால் அவர்களை முழங்காலில் நிற்க வைத்துச் சராமாரியாகச் சுட்டதில் நான்கு பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். மிகுதி நால்வர் படுகாயமடைந்திருந்தனர்.

கொல்லப்பட்டோர் -

1. ஆ. இராமச்சந்திரன் - 41வயது
2. க. சிவனேஸ்வரராஜா - 36 வயது
3. பொ. ரஞ்சித்குமார் - 25 வயது
4. ந. ரவீந்திரன் - 32 வயது

இடம் - 3

புட்டணிப்பிள்ளையார் கோயிலின் முன்னால் அமைந்துள்ள க. மகேந்திரராஜா வீடு -

இது மோதல் இடம் பெற்ற இடத்தில் இருந்து 450 மீற்றர் தூரத்தில் உள்ளது. இங்கே புகுந்த இராணுவத்தினர் அடுக்களையினுள் இருந்த இரு சகோதரர்களை இழுத்து வந்து சுவருடன் நிற்க வைத்துச் சுட்டுக்கொன்று, அவர்களது தாயையும் சுட்டுக்காயப்படுத்தினார்கள். அங்கு நின்ற மோட்டார் காரையும், வீட்டையும் எரித்தனர்.

1. க. மகேந்திரராஜா - 49வயது



Scanned by CamScanner

இந்த இரண்டு சடலங்களும் மனைவிமார்களால் அவருடைய வீட்டிலேயே தகனம் செய்யப்பட்டது.

இடம் - 4

தீருவில் நினைவுத் தூபிக்கு அருகில் உள்ள முருகன் ஆலயத்திற்கு எதிரில் இருக்கும் எஸ். சிவலிங்கம் வீடு -

இது ஜங்ஷனில் இருந்து சுமார் 500 மீற்றர் துரத்தில் உள்ளது. இந்த வீட்டில் பருத்தித்துறையில் இருந்து இந்திய இராணுவத்தினரின் நெருக்கடிகளினால் இடம் பெயர்ந்து அகதிகளாக வந்திருந்த இருவர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

1. இ. நடராஜா - 62 வயது இளைப்பாறிய போஸ்ற்மாஸ்ரர்
2. வி. அருள் சோதி - 25 வயது சீமெந்துக் கூட்டுத்தாபனம், இவரது மருமகன்

இடம் - 5

வல்வெட்டித்துறை சந்தி (ஜங்சன்) - 2.8.89 ல் (1ம் நாள்)

பிற்பகல் 1.30 மணியளவில் இருந்து ஆங்காங்கே உள்ள வீடுகளில் இருந்தும், கடைகளில் இருந்தும் பொதுமக்களை இழுத்து வந்து சுட்டதில் நால்வர் கொல்லப்பட்டனர், 50 க்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

1. க. சிவபாக்கியம் - 40 வயது
2. இ. இராசரத்தினம் - 35 வயது
3. க. தங்கராஜா - 60 வயது
4. பா. பிரேம்ராஜ் - 22 வயது

வல்வெட்டித்துறை சந்தி - 3.8.89 ல் (2ம் நாள்)

சந்தியில் இருந்து 300 மீற்றர் தூரத்தில் உள்ள கொத்தியால் என்ற இடத்தில் உள்ள ஒரு சா வீட்டில் இருந்து



Scanned by CamScanner

கொண்டுவரப்பட்டவர்களும், ஒரு கிலோமீற்றர் தூரத்தில் இருந்து தார் ரோட்டில் உருண்டு வருமாறு அடித்தக் கட்டி வரப்பட்டவர்களும் சந்திக்கு கொண்டுவரப்பட்டு, அவர்களில் இருந்து சிலரை எழுமாற்றாகத் தெரிந்து சந்தைக் கட்டிடத்தின் முன்னால் வரிசையாக நிற்க வைத்துச் சுட்டதில் 6 அப்பாவிகள் துடி துடித்து இறந்தனர்.

1. த.ரவிச்சந்திரன் - 28வயது
2. செ. மயில்வாகனம் - 55வயது
3. சு. உமாசங்கர் - 19வயது
4. த. நாகதாஸ் - 28வயது
5. பா. மகேந்திரதாஸ் - 16வயது
6. ஆர். நவரட்ணம் - 29வயது

இடம் - 6

உதவி அரசாங்க அதிபர் சந்து, மானாங்கனை, வல்வெட்டித்துறை

மோதல் இடம் பெற்ற பகுதியில் இருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது. 3.8.89 ல் திருமதி.சோ. இராஜேஸ்வரியின் வீட்டில் புகுந்த இந்திய இராணுவத்தினர், அங்கிருந்த இரண்டு மாணவர்களைப் பிடித்து அவர்களின் கைகைள நைலோன் கயிற்றினால் கட்டி இழுத்துச் சென்று அங்கிருந்த 200 மீற்றர் தூரத்தில் உள்ள ஊரணி என்ற இடத்திற்குக் கொண்டு சென்று கத்தியினால் குத்தியும், துப்பாக்கியினால் சுட்டும் கொன்றனர்.

1. அ. சுவர்ணதாஸ் - 18வயது மாணவன்
2. கு. செல்வானந்த வேல் - 18வயது மாணவன்

இடம் - 7

பொலிகண்டி இந்திய இராணுவ முகாமில் இருந்து வந்தவர்கள் வல்வெட்டித்துறையை நோக்கி வரும் வழியில் பின்வருவோரைச் சுட்டுக்கொண்டிருந்தனர்.

1. வி. முரளிதரன் - 20வயது
2. சோ. ரமேஸ்குமார் - 18வயது
3. பொ. இராசேந்திரம் - 23வயது
4. எஸ். சிவமணி - 35வயது
5. பி.வி. கிருஷ்ணவதனா - 33வயது



Scanned by CamScanner

இடம் - 8

வல்வெட்டி - சம்பவம் நடந்த இடத்தில் இருந்து 1 1/2 கி.மீ தூரத்தில் உள்ளது. சாலையில் ரோந்து சென்ற இராணுவத்தினர் வீட்டிலுள் இருந்த 70 வயது ந. நல்லமுத்து என்ற மூதாட்டியைச் சுட்டுக்கொனன்றனர்.

இடம் - 9

சிவன் கோயிலின் பின் வீதிவழியாகப் போய்க்கொண்டிருந்த 60 வயது. சி. தம்பிதுரை என்ற வயோதிபர் காவல் நின்ற இந்திய இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

உடுப்பிட்டி இந்திய இராணுவமுகாம்

இங்கு சுற்றி வளைத்துப் பிடித்துச் செல்லப்பட்ட 11 இளைஞர்கள் அடித்துக்கொலை செய்யப்பட்டு எரிக்கப்பட்டனர்.

1. த. சிவகுமர்
2. த. ஜெயமோகன்
3. ஆ. பராசர்
4. ஆ. பரம்சோதி
5. த. சாம்பசிவம்
6. செ. யோகராஜா
7. சி.சிவலிங்கம்
8. சு. பேரின்பம்
9. பொ. சத்தியரூபன்
10. அ. மதிவர்ணன்
11. நா. சிவகுமார்

மற்றைய இடங்கள்

இதே போன்று பல இடங்களில் ஆண்களும், பெண்களும் வயது வேறுபாடின்றிக் கொல்லப்பட்டனர்.

வல்வெட்டித்துறையில் 1989 ஆகஸ்ற் 2,3,4 ம் திகதிகளில் இந்திய இராணுவத்தினரால் கொல்லப்பட்ட பொதுமக்கள் பட்டியல்



Scanned by CamScanner

| பெயர், வயது | | முகவரி | தொழில் |
|---|---|---|---|
| 1. திரு.வெ.சுப்பிரமணியம் | 60 | வித்தனை, வல்வெட்டித்துறை | ஓய்வுபெற்றநில அளவை [illegible] |
| 2. திரு.அ.இளையபெருமாள் | 70 | வைகுண்டம்,,வல்வெட்டித்துறை | ஓய்வுபெற்ற துறைமுக ஊழியர் |
| 3. திருமதி.இ.புஸ்பராணி | 49 | சிவபுரவீதி, ,வல்வெட்டித்துறை | - பழக்கடை வியாபாரம் |
| 4. மாஸ்ரர்.இ.யவனராஜ் | 11 | சிவபுரவீதி,,வல்வெட்டித்துறை | மாணவன் |
| 5. திரு.ஸ்.கணேசலிங்கம் | 33 | மதவடி, வல்வெட்டித்துறை | மீனவர் |
| 6. பேபி.சசி.கணேசலிங்கம் | 11/2 | மதவடி,,வல்வெட்டித்துறை- | |
| 7. திருமதி.அமிர்தம்உமாதேவி, | 26 | வைகுண்டம்,வல்வெட்டித்துறை | குடும்பப்பெண் |
| 8. திருமதி.ச.இராஜலட்சுமி | 32 | தீருவில்,வல்வெட்டித்துறை | குடும்பப்பெண் |
| 9. மாஸ்ரர்.ஆ.சுந்தரேஸ்வரன் | 11 | வித்தனை,வல்வெட்டித்துறை | மாணவன், சிதம்பராக்கல்லூரி |
| 10. திரு.ஆ.இராமச்சந்திரன் | 41 | காட்டுவளவு,வல்வெட்டித்துறை | மேசன் |
| 11. திரு.க.சிவநேசராஜா | 36 | தீருவில்,வல்வெட்டித்துறை | தொழிலாளி |
| 12. திரு.பொ.ரஞ்சித்குமார் | 25 | ஜங்சன்,வல்வெட்டித்துறை | மெக்கானிக் |
| 13. திரு.ந.ரவீந்திரன் | 32 | தீருவில்,வல்வெட்டித்துறை | வர்த்தகர் |
| 14. திரு.க.மகேந்திரராஜா | 49 | புட்டணி,வல்வெட்டித்துறை | வர்த்தகர் |
| 15. திரு.க.வேலும்மயிலும் | 42 | புட்டணி,வல்வெட்டித்துறை | தொழிலாளி |
| 16. திரு.இ.நடராசா | 62 | பருத்தித்தறையில் இருந்து வந்த அகதி | ஓய்வுபெற்ற அஞ்சல் அதிபர் |
| 17. திருவி.அருள்சோதி | 28 | பருத்தித்துறையில் இருந்து வந்த அகதி | சீமெந்துக் கூட்டுத்தாபனம் |
| 18. திரு.இ.இராசரத்தினம் | 34 | சிவன்கோயிலடி வல்வெட்டித்துறை | வர்த்தகர் |
| 19. திருமதி.க.சிவபாக்கியம் | 45 | நெடியகாடு,வல்வெட்டித்துறை | பெண் சலவைத் தொழிலாளி |
| 20. திருக.தங்கராஜா | 60 | பாலாவி,வல்வெட்டித்துறை | மீனவர் |



Scanned by CamScanner

| | | | | |
|---|---|---|---|---|
| 21. | திரு.பா.பிரேம்ராஜ் | 22 | தீருவில்,வல்வெட்டித்துறை | வாடகைக்கார் சாரதி |
| 22. | திரு.க.உமாசங்கர் | 19 | காட்டுவளவு,வல்வெட்டித்துறை | தொழிலாளி |
| 23. | திரு.த.ரவிச்சந்திரன் | 28 | காட்டுவளவு,வல்வெட்டித்துறை | வர்த்தகர் |
| 24. | திரு.செ.மயில்வாகனம் | 55 | வேம்படிசந்து,வல்வெட்டித்துறை | ஓய்வுபெற்ற வைத்தியசாலை ஊழியர் |
| 25. | திரு.த.நாகதாஸ் | 28 | வேம்படிசந்து,வல்வெட்டித்துறை | சீமெந்துக்கூட்டுத்தாபனம் |
| 26. | திரு.பா.மகேந்திரதாஸ் | 16 | வேம்படிசந்த,வல்வெட்டித்துறை | மாணவன், சிதம்பராக் கல்லூரி |
| 27. | திரு.ஆ.நவரத்தினம் | 29 | ஒடக்கரை, பருத்தித்துறை | தேங்காய் வியாபாரி |
| 28. | திரு.சி.தம்பித்துரை | 62 | சிவகுரு வித்தியால சாலை வல்வெட்டித்துறை | தேங்காய் வியாபாரி |
| 29. | திரு.அ.ரவீந்திரன் | 20 | மதவடி,வல்வெட்டித்துறை | மீனவர் |
| 30. | செல்வி.நா.பவப்பிருந்தா | 15 | நாவலடி,உடுப்பிடி | மாணவி |
| 31. | செல்வி.இ.உமாராணி | 19 | வைகுண்டம்,வல்வெட்டித்துறை- | |
| 32. | மாஸ்ரர்.அ.சுவர்ணதாஸ் | 18 | மானாங்கனை,வல்வெட்டித்துறை | மாணவன் |
| 33. | மாஸ்ரர்.கு.செல்வானந்தவேல் | 18 | தீருவில்,வல்வெட்டித்துறை | மாணவன் |
| 34. | திரு.கு.சண்முகவடிவேல் | 36 | காட்டுவளவு,வல்வெட்டித்துறை | தொழிலாளி |
| 35. | திரு.செல்வன்.கந்தன் | 30 | கெருடாவில்,தொண்டைமனாறு | விவசாயம் |
| 36. | திரு.சு.அமுதன் மார்க்கண்டன் (கடையில் உயிருடன் கொழுத்தப்பட்டார்) | 29 | வத்தனை,வல்வெட்டித்துறை | வர்த்தகம் |
| 37. | திரு.பி.சண்முகலிங்கம் | 43 | தீருவில்,வல்வெட்டித்துறை | தொழிலாளி |
| 38. | திரு.பொ.காளிதாஸ் | 25 | அம்மன்கோயிலடி வல்வெட்டித்துறை | கொல்லர் வேலை |
| 39. | திரு.ந.பானுகோபால் | 23 | அம்மன்கோயிலடி வல்வெட்டித்துறை | கொல்லர் வேலை |
| 40. | திருமதி.சிவமணி செ. | 35 | குடியேற்றம்,வல்வெட்டித்துறை | குடும்பப்பெண் |
| 41. | திருமதி.வி.கிருஷ்ணவதனா | 33 | உடையாமணல் வல்வெட்டித்துறை | குடும்பப்பெண் |




Scanned by CamScanner

| | | | | |
|---|---|---|---|---|
| 42. | திருமதி.நல்லமுத்து | 70 | வேவில,வல்வெட்டித்துறை | - |
| 43. | திருமதி.இ.இ.ராசசேகரம் | 20 | கம்பர்மலை,வல்வெட்டித்துறை | மீனவர் |
| 44. | திரு.ச.துரைராசா | 59 | இமையாணன், உடுப்பிட்டி | வர்த்தகம் |
| 45. | திரு.வி.முரளிதரன் | 20 | குடியேற்றம்,பொலிகண்டி | மீனவர் |
| 46. | திரு.சோ.ரமேஸ்குமார் | 18 | குடியேற்றம்,பொலிகண்டி | மீனவர் |
| 47. | திரு.செ.சக்திவேல் | 23 | காளிகோயில்,வல்வெட்டித்துறை | மீனவர் |
| 48. | திரு.பொ.இராசேந்திரம் | 23 | ஆதிகோயிலடி,வல்வெட்டித்துறை | மீனவர் |
| 49. | திரு.எஸ்.பாலச்சந்திரமூர்த்தி | 31 | மதவடி,வல்வெட்டித்துறை | மீனவர் |
| 50. | திரு.நா.நாகராசா | 23 | ஊறணி,வல்வெட்டித்துறை | தொழிலாளி |
| 51. | திரு.வே.செல்வச்சந்திரன் | 26 | கொத்தியால்,வல்வெட்டித்துறை | மீனவர் |
| 52. | இனம் காணப்படவில்லை | | | |
| 53. | திரு.பொ.சத்தியரூபன் | 23 | முல்லைத்தீவு | பொலிஸ் கான்ஸ்டபிள் |
| 54. | திரு.சி.சிவலிங்கம் | 49 | மானாங்கனை,பொலிகண்டி | சீவல் தொழிலாளி |
| 55. | மாஸ்ரர்.த.சிவகுமார் | 19 | சிவபுரவீதி,வல்வெட்டித்துறை | மினிசினிமா தொழிலாளி |
| 56. | மாஸ்ரர்.த.ஜெயமோகன் | 16 | சிவபுரவீதி,வல்வெட்டித்துறை | கூலி |
| 57. | மாஸ்ரர்.த.சாம்பசிவம் | 18 | சிவபுரவீதி,வல்வெட்டித்துறை | கடற்தொழில் |
| 58. | மாஸ்ரர்.ஆ.பரம்சோதி | 17 | வித்தனை,வல்வெட்டித்துறை | மாணவன், சிதம்பராக்கல்லூரி |
| 59. | மாஸ்ரர்.ஆ.பராசர் | 19 | வித்தனை,வல்வெட்டித்துறை | மாணவன், சிதம்பராக்கல்லூரி |
| 60. | மாஸ்ரர்.சு.பேரின்பம் | 18 | பாலாவி,பொலிகண்டி | மீனவர் |
| 61. | மாஸ்ரர்.செ.யோகராஜா | 18 | கம்பர்மலை,வல்வெட்டித்துறை | விவசாயம் |
| 62. | மாஸ்ரர்.நா.சிவகுமார் | 18 | உடுப்பிட்டி(கம்பர்மலை தெற்கு) | கூலி |
| 63. | மாஸ்ரர்.அ.மதிவர்ணன் | 17 | கம்பர்மலை,வல்வெட்டித்துறை | மாணவன், சிதம்பராக் கல்லூரி |



Scanned by CamScanner



Scanned by CamScanner